# திருக்குறள் வழங்கும் செய்தி




## ஜைன இளைஞர் மன்றம்
## சென்னை-17

மன்ற வெளியீடு : 29

# திருக்குறள் வழங்கும் செய்தி

மூலம் :

பேராசிரியர் அ. சக்கரவர்த்தி நயினார்

தமிழாக்கம் :

ஊ. கொற்றன்காரி
(ஜயராமன்)

வெளியீடு :

ஜைன் இளைஞர் மன்றம்

3, தெற்கு போக் சாலை, தி. நகர்,
சென்னை-17.

*JAIN YOUTH FORUM Publication No. 29*

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| 1. | Title of the Book : | Thirukkural Vazhaingum Seithe (The message of Thirukkural) |
| 2. | Author : | Prof. A. Chakravarthy |
| 3. | Translator : | W. Jayaraman |
| 4. | Language : | Tamil |
| 5. | Edition : | Second |
| 6. | Date of publication : | 17-10-1990 |
| 7. | Copy right holder : | Kurinji Pathippagam, Madras-1 |
| 8. | Publisher : | Jain Youth Forum, Madras-17. |
| 9. | Paper used : | White Printing |
| 10. | Size of the book : | $14\frac{1}{4} \times 21\frac{1}{4}$ c.m. |
| 11. | Number of Pages : | XIII 88 |
| 12. | Printer : | S. Dhanyakumar Press Madras-17. |
| 13. | Subject : | Literature-Philosophy-history |


14. **Summary** : It is the Tamil translation of "An Introduction" of the work "Thirukkural" in English. In this the philosophical Systems of India-theme of Thirukkural-its author and a brief account of the three Parts of Thirukkural are dealt with in a Scholarly manner with new thought provoking interpretations.

15. Price : *Rs. 8-00*

# பதிப்புரை

**மெய்ப் பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகித்**
**துக்கம் கெடுப்பது நூல்.**

**அருங்கலச் செப்பு.**

ஜைன இளைஞர் மன்றம் துவங்கப் பெற்று 16-ஆண்டுகள் நிறைவடைந்து 17-ஆவது அகவை தொடங்குகிறது. ஜைன இளைஞர் மன்றம் தொடர்ந்து சமய-சமூக-இலக்கிய பணிகள் பலவற்றினை ஆற்றி வந்துள்ளது. இவை மேலும் தொடரும். இலக்கியப் பணியின் பகுதியாகிய வெளியீட்டுப் பணியில் ஈடுபாடு கொண்டு புதிய நூல்களையும், அருமையாக கிடைக்கும் பழைய நூல்களின் மறுபதிப்பு மற்றும் திருந்திய பதிப்புகளையும் வெளியிட்டு வருகிறது.

இன்று உங்கள் கையில் தவழும் இந்நூல் மன்றத்தின் 29-ஆவது வெளியீடு என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ் நாட்டில் ஜைன தத்துவம், ஜைன தமிழ் இலக்கியம் தொடர்பான நூல்களைப் பதிப்பிக்கும் அரும் பெரும் தொண்டினைப் பெரிய அளவில் பெருமை தரும் வகையில் துவக்கியவர்கள் பேரா. சக்கரவர்த்தி நயினார் மற்றும் கொடை வள்ளல் ஆதிநயினார் ஆவர்.

பேரா. சக்கரவர்த்தி நயினார் (1881-1960), முதுகலை பட்டம் பெற்று, மாநிலக் கல்லூரியில் தத்துவ பேராசிரியராக பணி ஏற்ற முதல் தமிழ்ச் சமணர் என்ற சிறப்பு இவருக்கு உண்டு. இவர் முதன் முதலாக ''நீலகேசி'', மற்றும் ''மேருமந்திர புராணம்'' ஆகியவற்றினை அரிய ஆய்வு முன்னுரையுடன் பதிப்பித்து. தன் சொந்த செலவிலேயே வெளியிட்டார்.

இவரது முதிர்ந்த அறிவும், தெளிந்த சிந்தனையும் ஆற்று ஒழுக்கென பாயும் மொழி நடையும் இவரது நூல்களில் மிளிர்வதை படிப்பவர் அனைவரும் உணர்வர். ஆச்சாரியர் குந்த குந்தரின் ''சமய சாரம்'', ''பஞ்சாஸ்திகாய சாரம்'' ஆகியவற்றினை உரையுடன் ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்துள்ளார். இவற்றினை

ாரதீய ஞானபீடம் வெளியிட்டுள்ளது. இவர் பல ஆய்வு கட்டுரைகள், சிறு வெளியீடுகளை வெளியிட்டுள்ளார். இவர் தனது 72 ஆவது வயதில், திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பினைச் சிந்தனையைத் தூண்டும், அரியதொரு ஆய்வு முன்னுரையுடன் 1953 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

'திருக்குறள் வழங்கும் செய்தி' எனும் இந்நூல் பேராசிரியர் சக்கரவர்த்தி நயினாரின் 'திருக்குறள்' ஆங்கில மொழி பெயர்ப்பு நூலின் ஆய்வு முன்னுரையின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். தமிழ் அறிஞர் ஊ. ஜயராமன் (கொற்றன்காரி) தமிழ் மொழி பெயர்ப்பினைச் சிறப்பாக செய்துள்ளார். இந்நூல் 1959 ஆம் ஆண்டில் பாரி நிலையத்தினரால் முதல் பதிப்பாக வெளியிடப் பட்டது. மொழி பெயர்ப்பாளர் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் வல்லவர். ஸ்ரீகஜபதி சாகரர் அவர்களிடம் மதிப்பும் நட்பும் கொண்டவர். அவரது ஊக்கத்தின் விளைவாக பேராசிரியரின் ஆய்வு முன்னுரையினைத் திறம்பட மொழி பெயர்த்துள்ளார். இவரது எழுத்துப் பணி மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பினை வெளியிடும் வாய்ப்பினை ஊ. ஜயராமன், எவ்வித கைம்மாறும் கருதாமல் மன்றத்திற்கு தந்துள்ளார்கள். அவருக்கு மன்றத்தின் நன்றியறிதலைத் தெரிவிக்கிறோம்; பாராட்டுகிறோம்.

''திருக்குறள் வழங்கும் செய்தி'' வெளியீட்டிற்கென நன்கொடை வழங்கி ஊக்குவித்த திருமதி சரஸ்வதி ஸ்ரீபாலன், திருமதி அம்புஜம் சம்பத்குமார், திருமதி கஸ்தூரி தரணிகுமார், திருமதி தவமணிதேவி தன்யகுமார், திருமதி சரோஜா சின்னதுரை, திருமதி கேமசரி அஜிததாஸ், திருமதி ஜெயந்தி உதயகுமார் திருமதி ஸ்ரீகாந்தி ஸ்ரேயன்குமார் ஆகியோர்களுக்குமன்றத்தினர் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த எஸ். தன்யகுமார் அச்சகத்தார்க்கு நன்றி.

தமிழகம் இந்நூலை ஏற்றும் போற்றும் என நம்புகிறோம்.

ஜைன் இளைஞர் மன்றத்தினர்.

# மொழிபெயர்ப்பாளர் முன்னுரை

திருக்குறளை ஆங்கிலத்தில் பலபேர் மொழிபெயர்த்திருக்கிறார்கள். இதில் மேல்நாட்டாரும், தமிழர்களும், பிறரும் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்நூல் ஒரு தமிழரால் மொழிபெயர்க்கப் பட்ட திருக்குறளின் முகவுரையாகும். திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் வடித்தவர்கள் சிலரேயாவர். அச்சிலருள் அறிஞர் ஜி. யு. போப்பும் வ. வே. சு. ஐயரும் குறிப்பிடத் தக்கவர்கள் என்னலாம். அறிஞர் போப்பு, திருக்குறளைப் பாட்டு நடையிலேயே ஆங்கிலப்படுத்தினார்; திரு. வ. வே. சு. ஐயர் அதனை, வசனப்பாட்டில் ஆங்கிலப்படுத்தினார். இவ்விரண்டும் பொதுவாக நல்ல மொழிபெயர்ப்புகள் என்று சொல்லப்படுகின்றன. ஆனால், நுணுக்கமாகப் பார்த்தால், இவ்விரண்டு அறிஞர்களும் வள்ளுவரின் மனப்போக்கைப் பல இடங்களில் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது தெரியும். இதற்குக் காரணம், ஒருவர் மேல்நாட்டுக் கண்ணோடு திருக்குறளை நோக்கியது; இன்னொருவர், பரிமேலழகர் உரையை அடிப்படையாகக் கொண்டு நோக்கியது ஆகும். திருமிகு போப்பின் ஆங்கிலக் குறள் பாட்டுநடையாக இருந்தும், பல இடங்களில் தெளிவு காணப்படவில்லை; திருமிகு ஐயரின் குறள் வசனமாக இருந்தும், நூல் முழுவதிலும் தெளிவு காணப்படுகிறது. ஆனால், ஐயர் அவர்கள், பரிமேலழகரை நம்பி, அவர் உரைப்படி மொழிபெயர்த்துவிட்டார்; இதனால் பல இடர்ப் பாடுகள் உண்டாகின்றன.

ஃபிரான்ஸிஸ் வைட்டு எல்லிஸ் என்கிற ஆங்கிலேயர் ஒருவர், திருக்குறளின் சில அரிய பாடல்களை, 1800 ஆம் வருடத்தில் மொழிபெயர்த்து, அவை ஒவ்வொன்றுக்கும் நீண்ட உரையும் எழுதினார்; இவர் நூல் முழுமைக்கும் உரை செய்திருந்தால், மிகவும் நன்றாயிருந்திருக்கும்; ஆனால், நம் தீவினை அவர் இளமையிலேயே நஞ்சு குடித்து மரிக்கவேண்டியதாயிற்று. திருமிகு எல்லிஸ், திருக்குறளின் அடிப்படையையும் சூழ்நிலையையும் நன்றாகப் புரிந்துகொண்டே, அதன் பாடல்களுக்கு உரை எழுதினார். இந்த முறையில் திருக்குறள் முழுமைக்கும் ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பும் உரைவிளக்கமும் வெளிவரவேண்டும் என்று 1952 ஆம் வருடத்தில், தத்துவப் பேராசிரியர் அ. சக்கரவர்த்தி

நயினார் அவர்கள் விரும்பினார்கள்; அதன் விளைவே இந்நூலின் தொடர்ச்சியாகும். பேராசிரியர் நயினார், திருக்குறள் முழுவதை யும் ஆங்கில வசனத்தில் கொணர்ந்து, அதற்கு அம்மொழியிலேயே விளக்கமும் வரைந்திருக்கிறார். அந் நூலில், அவர், முதலில் தமிழ்ப் பாடலைக் கொடுத்து, பிறகு அதனை அப்படியே ரோம வரிவடிவில் பெயர்த்து, அதன்கீழ் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தந்து, பிறகு விளக்கம் செய்திருக்கிறார். இதுபோன்ற முறையில் திருக்குறளை யாரும் இதுவரை மொழிபெயர்க்கவில்லை.

திருக்குறளின் கொல்லாமைப் பண்பாட்டையும், வருண முறை மறுப்பையும், வேள்விநெறிப் புறக்கணிப்பையும் கண்ட திரு எல்லிஸ் துரைமகனார், இந்நூல் ஒரு ஜைனசமய நூலாகவே இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்; இந்த முடிவின் அடிப் படையிலேயே சில பாடல்களுக்கு அவர் உரை வகுத்தார். ஆனால், திருக்குறளை ஜைனநூல் என்று தெளிவாக விளக்கி அதற்கேற்ப உரைசெய்ய அவர் முற்படவில்லை; ஆயின், இவருடைய உரையின் போக்கையும் மேற் கோள்களின் தன்மையையும் பார்க்கும்போது, நாம் அந்தக் கருத்துக்குத்தான் வரவேண்டியதாகிறது. திருமிகு சக்கரவர்த்தி நயினார் அவர்கள் உரை, திருக்குறள் ஒரு ஜைன நூல் என்ற அடிப்படையிலேயே செய்யப்பட்டிருக்கிறது. நயினார் ஒரு சமணர் ஆவர்; அதுவும் தமிழ்ச் சமணர். இவருடைய தந்தை யார் ஒரு சிறந்த தமிழ்ப் புலவராய் இருந்தவர்; அவரிடத்தில் தமிழ் பயிலும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவர் வளர்ந்து கல்லூரியில் படிக்கச் சென்றபோது, தத்துவத்தைத் தம் விருப்பப் பாடமாக எடுத்துப் படித்தார். உலகத் தத்துவப் பேரறிஞரான காலஞ் சென்ற ஆர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், பேராசிரிய ரோடு உடன் பயின்றவராவர். இயற்கையிலேயே சமணராதலால், ஜைனசமயக் கருத்துகளை இவர் நன்கு அறியமுடிந்தது. தமிழ் இலக்கியம், மேல்நாட்டுத் தத்துவங்கள், சமணக் கோட்பாடு, ஆங்கிலப் புலமை-இத்தனையும் சேர்ந்து இவரைத் திருக்குறளுக்கு ஓர் உரை வகுக்கத் தூண்டின.

சக்கரவர்த்தி நயினார் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததும், உரை வகுத்ததுமன்றி, அவ்வாங்கில் நூலுக்கு ஓர் அழகான முகவுரையும் (Introduction) எழுதியுள்ளார். அம் முகவுரை, ஜைனசமயத்தைக் குறித்தும், இந்து சமயத்தைக் குறித்தும், உலகத் தத்துவங்களைக் குறித்தும், தமிழ்-வடமொழி

இலக்கியங்களைக் குறித்தும் மிகுதியான அரிய கருத்துகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. அக்கருத்துகளைத் தமிழ் மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் விருப்பத்தாலேயே, அம் முகவுரையைத் திருக்குறள் வழங்கும் செய்தி என்னும் தலைப்பில் நான் மொழிபெயர்த்துள்ளேன். இதனைப் படிப்பதனால், தமிழ் மக்களுக்கு நல்ல தத்துவ அறிவும், இலக்கிய ஞானமும், குறளைப் பற்றிய சரியான கண்ணோட்டமும், உலகைப் பற்றிய நல்ல தெளிவும் ஏற்படும் என்பது என் நம்பிக்கை. இதனால், இந்நூலில் உள்ள கருத்துகள் அத்தனையையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. சில கருத்துகள் இதில் நமக்குப் பிடித்த மில்லாதனவாய் இருக்கலாம்; சில கருத்துகள் புதுமையான வையாய் இருக்கலாம். ஆனால், அவையெல்லாம் இந்நூலின் பெருமையைக் குறைத்துவிட மாட்டா. இதில் சொல்லப்படும் பல பொருள்கள், நாம் அனைவரும் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டியவையாகும். அதுவும், பொருள்களைச் சொல்லும் முறை, இதில் உயர்ந்ததாகக் காணப்படுகிறது. திருமிகு சக்கரவர்த்தி நயினார் அவர்களின் கல்வித்திறனைத் தமிழகம் நன்கு உணர வேண்டும். அந்த வகையில் என் மொழிபெயர்ப்பு வாசகர்களுக்கு உதவுமானால், அதுவே எனக்கு மிகுதியும் மகிழ்ச்சியைத் தருவ தாகும்.

மொழிபெயர்ப்பைக் குறித்துச் சில வார்த்தைகள் கூற வேண்டும். இந்நூலின் 'மூலம்' உயர்ந்த ஆங்கில நடையில் இயன்றிருப்பதால், ஏறத்தாழ அதன் சாயல் வெளிப்படுமாறு அதனைத் தமிழில் வடித்திருக்கிறேன்; அதே நேரத்தில், தெளிவும் எளிமையும் குன்றாமல் வசனத்தை நடத்தியிருக்கிறேன். தமிழில் நுண்மையான தத்துவக் கருத்துகளைச் சொல்ல முடியுமா என்னும் கேள்விக்கு இந்நூல் ஓரளவு பதில் கூறும் என்பது என் நம்பிக்கை. கூடியவரையில் பொருள்களைச் செவ்விய தமிழிலேயே கொடுக்க முயன்றுள்ளேன்; மிகுதியான ஆங்கிலக் குறியீடுகளுக்கு (Technical terms)ச் சரியான தமிழ்ப் பதங்களைப் பயன்படுத்தியுள்ளேன். சில தமிழ்ப் பதங்கள் இலக்கியத்தில் உள்ளவை; மற்றவை, நான் இதற்கென்று ஆக்கியவையாகும். இப்பதங்கள் பொருத்தமானவை என்று காணப்பட்டால், அவைகளைச் சுலபமாக வழக்குக்குக் கொணர்ந்துவிடலாம். தன்மை, தான்மை, உயிரியல் தன்னடக்கம் போன்ற சொற்கள் நான் அமைத்தவையாகும்; இவை யாவும் புரிவதற்காக வேண்டி, இவற்றின் பக்கத்தில் ஆங்கிலச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இராணுவம், பிராணி, சம்ஹிதைகள் என்னும் வடசொற்களைப் படைத்துறை உயிரி, சமிதைகள் என்று தமிழ்ப்படுத்தியுள்ளேன்; ஆங்கிலச் சொற்களையும், கூடியவரை,

தமிழ் ஒலிக்கு ஏற்ப மாற்றியே வழங்கியுள்ளேன். மொழி பெயர்ப்பை, முடிந்தமட்டும் கருத்துப் பெயர்ப்பாகவே செய் துள்ளேன்; மூலநூலாளரின் கருத்து நன்றாகத் துலங்குவதற்காகச் சில இடங்களில் விரிவுபடுத்தியும், சில இடங்களில் சுருக்கியும் உள்ளேன். தமிழாக்கம், மரபு குன்றாமல் செய்யப்பட்டிருப்ப தாகவே நம்புகிறேன்.

இந்நூல் மூலத்தின் பெருமையை நீண்ட நாள்களுக்கு முன் பாகவே நான் அறிந்தேன்; ஆனால், இதனைத் தமிழ்ப் படுத்தும் செயல் அருகில்தான் நடைபெற்றது. இதனைச் செய்ய எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து பல்வகையிலும் உதவிபுரிந்தவர் என் இனிய நண்பர் பேரறிவாளரும், சிற்றுயிர்க்கு உற்ற துணை வருமான அருள் திரு. ஸ்ரீபால் அவர்கள் ஆவர். இவரைத் தமிழுலகம் நன்கு அறியும்; தமிழகக் கோயில்களில் உயிர்ப்பலியை நிறுத்திய உத்தமர் இவரேயாவர். பேராசிரியர் சக்கரவர்த்தி நயினாரை எனக்கு அறிமுகப்படுத்தி, இந்நூல் மொழிபெயர்ப்புக் கான அனுமதியை வாங்கித்தந்தவரும் இவரே என்ன வேண்டும். இவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், ஸ்ரீபால் அவர்கள் இப்போது நம்மிடையே இல்லை; தம் 80 ஆவது வயதில் அவர், அருக பரமனை நண்ணி விட்டார். அடுத்து, இந்நூலை எழுதும்போது அடிக்கடி ஊக்கியும், நூல் முடிந்தவுடன் அதனை வாங்கி முழுவதையும் படித்து அருமையான பல ஓர்மை களைச் சொல்லியும் துணைபுரிந்தவர் என் மதிப்புக்குரிய இன் னொரு அருள் திரு கஜபதி ஜெயின் ஆவர். இவர் வாணிபத் துறையில் இருந்தும், இலக்கியத்திலும் தத்துவததிலும் பெரிதும் ஈடுபாடுடையவர் என்று சொல்லவேண்டும். இவருடைய மேலான ஓர்மைகளும் அன்பான வாசகங்களும் எனக்கு நிறைந்த பலனைத் தந்தன. கஜபதி அவர்கள் 5-11-88 ஆம் தேதியன்று உயிர்ச் சமாதியடைந்து விட்டார். திருமிகு கஜபதி அவர்களை நான் என்றும் மறககமுடியாது. பேராசிரியர் சக்கரவர்த்தி நயினார் அவர்கள், இந்நூலின் கையெழுத்துப் பிரதியைப் பார்த்தவுடன் மெத்தவும் மகிழ்ந்தார்கள்; இதன் முக்கியமான பகுதிகளை ஊன்றிப் படித்துப்பார்த்தார்கள். அவர்களுக்கு மொழிபெயர்ப்பில் திருத்தி ஏற்பட்டதால், அதற்கான அனுமதியை உடனே கொடுத் தருளினார்கள்; அச்சீடு முடிந்தவுடன், ஆங்கிலத்தில் ஒரு பாராட்டும் வழங்கியிருக்கிறார்கள்; அதனையும் இந்நூலில் சேர்ந் துள்ளேன். பேராசிரியருக்கு என் மனமுவந்த நன்றி உரிய தாகும்.

என் அருமை ஆசானும் தமிழகத்தின் சிறந்த வரலாற் றாசிரியருமான மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் என் பணியின்

போது நிரம்ப உதவினார்கள். அவர்கள் என் வாழ்க்கையில் நீங்காத் தொடர்புடையவர்களாகையால், அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவன். இதனை ஆவலோடு வாங்கி அச்சிட்டு, மறுபதிப்புக் கொணரும், ஜைன இளைஞர் மன்றத்தாருக்கு, நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? என்மீது அவர்களுக்கு உள்ள அன்பு மிகுதியானதாகும். இந்நூலுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்குமானால், நான் மேலும் இத்துறையில் சலியாமல் உழைக்க முடியும். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே.' வணக்கம்.

ஊ. கொற்றன்காரி
(ஜயராமன்)

# மூலநூலின் அறிமுகம்

தமிழர்களின் வேதம் எனப்படும் திருக்குறள் ஓர் உலகப் பொது நூல் ஆகும். தென்னிந்தியாவில் தோன்றிய சமயங்கள் யாவும் திருக்குறளைத் தம்முடையது என்று கொண்டாடுவதிலிருந்து, இந்நூல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்த ஒன்று என்பது தெரிகிறது. இந்நூலுக்குப் பல சமயத்தைச் சார்ந்த அறிஞர்கள் உரை எழுதியிருக்கின்றனர். ஆனால், அவ்வுரைகள் யாவும், அவரவர் சமயக் கருத்துகளைப் புலப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. எனவே, இதனைத் திரும்பவும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது வேண்டாத ஒன்றாகத் தோன்றலாம். ஆனால், நான் செய்யும் இந்தக் காரியத்திலும் ஒரு நியாயம் இருக்கிறது. திருக்குறள் எழுதப்பட்ட காலத்திற்கும், அதற்கு உரை வரையப் பட்ட காலத்திற்குமிடையே எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. உரை எழுதிய அறிஞர்களோ, திருக்குறளின் நாகரிகமும் பண்பாடும் வாழ்ந்திருந்த காலத்திற்கு மிகுதியும் பிற்பட்டவர் களாவர். எனவே, இப்போது கிடைக்கும் உரைகளிலிருந்து வள்ளுவர் கால நிலையையும், அவர் கொண்டிருந்த கொள்கை யையும் உள்ளவாறு அறிய முடியவில்லை. தற்போது அந்த நிலையையும் கொள்கையையும் ஆராய்ந்துபார்த்தால், அவை, கொல்லாமைநெறியை (அகிம்சா தருமத்தை) அடிப்படையாகக் கொண்டவையாகக் காட்சியளிக்கின்றன. இதை வெளிப்படுத்து வதே இந்தப் புதிய மொழிபெயர்ப்பின் நோக்கமாகும்.

கொல்லாமைநெறி, திருக்குறளின் எல்லாப் பகுதியிலும் பரவி யிருப்பதை, அதனைத் துருவிக் கற்போர் நன்கு உணர்வர். சமுதாயம், ஒழுக்கம், பொருளாதாரம்—ஆகிய எத்துறையைப் பற்றி வள்ளுவர் பேசினாலும், அங்கே கொல்லாமைநெறி ஒளி வீசுகிறது. இந்தக் கருத்துக்கும், ஆரிய வேதங்களில் சொல்லப் பட்டிருக்கும் கருத்துக்கும் அடிப்படையில் மாறுபாடு உண்டு. இதனைத் திருக்குறளின் உரையாசிரியர்கள் எவரும் துணிந்து கூறவில்லை. தமிழில் உள்ள பரிமேலழகர், மணக்குடவர், கவிராஜ பண்டிதர், காளிங்கராயர்—ஆகியோருடைய உரைகள் மேற் சொன்னதையே வற்புறுத்துகின்றன. திருக்குறளை ஐரோப்பிய

மொழிகளில் வடித்தவர்களான போப்பு, எல்லிஸ், கிரவுல், பெஸ்கி—ஆகிய மேலைநாட்டு அறிஞர்களும், தமிழ் உரையாசிரியர்களின் கருத்தைப் பின்பற்றியே தம் மொழி பெயர்ப்பு வேலையைச் செய்திருக்கின்றனர். இவர்களில், கலோனல் எல்லிஸ் மட்டும், இந்நூலின் கலையொழுக்க நிலைக்களனை (Cultural background) நன்றாகத் துருவிப்பார்த்து, இதன் பகுதிகள் சிலவற்றுக்கு நீண்ட விரிவுரையை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் மொழிபெயர்ப்பின் போக்கையும், விரிவுரையின் கண்ணோட்டத்தையும் என் பணியில் கடைப் பிடித்திருப்பதால், இவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன் ஆவேன்.

இந்தப் புத்தகம், குறிப்பாக ஆங்கிலம் படித்த மக்களுக்காகவே செய்யப்பட்டுள்ளது. இந்தியாவுக்குத் தன்னாண்மை வாங்கித் தந்த பெரியார் காந்தியடிகளால், திருக்குறளின் அடிப்படைக் கொள்கையான கொல்லாமைநெறி (அகிம்சா தருமம்), உலக முக்கியத்துவம் பெற்றது. நாடுகளுக்குள்ளே எழும் அரசியல், பொருளாதாரம்—ஆகிய எல்லாப் பிரச்சினைகளையும் கொல்லாமையைக் குறிக்கோளாகக் கொண்டே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தம் வாழ்நாள் முழுவதும் சொல்லிவந்தார். இந்த நோக்கங்கொண்டே எழுதப்பட்ட இந்நூலைப் படிப்பவர்கள், நம் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு நீதியும் சமத்துவமும் கொண்ட ஒரு சமுதாயம் எப்படி உருவாகியிருந்தது என்பதை அறிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். கொல்லாமைநெறியைக் கருநிலையாகக் கொண்ட சமயம் ஒன்றைப் பற்றி இங்குக் கூறவேண்டியது அவசியமில்லை. காரணம், இந்தத் தத்துவத்தை எல்லாச் சமயங்களும் ஒத்துக்கொண்டிருப்பதேயாகும். இந்தியத் தன்னாண்மைக் குடியரசும் இதனை ஏற்றுக்கொண்டிருப்பது, நவீன உலக வளர்ச்சிக்கு ஒரு நல்ல அறிகுறி என்று தோன்றுகிறது.

இந்தப் புத்தக மொழிபெயர்ப்பில், திரு மார்செல்லா ஆர்டி, திருமதி ஒயில்டர்—ஆகிய இருவரும் பெருந்துணை புரிந்தார்கள். முன்னவர், புத்தகத்தின் அச்சுப்பிரதியை நன்றாகத் திருத்திக் கொடுத்தார்; பின்னவர், திருக்குறட்பாக்களை ரோம வரிவடிவில் எனக்காக முற்றும் எழுதிக்கொடுத்தார். இவ்விருவருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

சென்னை, 1953

அ. சக்கரவர்த்தி

முக்குடைச் செல்வன்

பகவான் வர்த்தமான மகாவீரர்

2516 ஆவது முக்தி பெருவிழா

நினைவு வெளியீடு

## படையல்

காலஞ்சென்ற

என் அருமைப் பாட்டனார் திருவடித் தாமரைகளுக்கு

இந்நூல்

உரிமையாக்கப்படுகிறது.

# APPRECIATION

The Tamil translation of my Introduction to Thirukkural by Bagavathi Jayaraman is quite faithful to the original satisfactorily bringing out the spirit of the English Introduction. I have to congratulate the translator Bagavathi Jayaraman for his work which I hope will be appreciated by the Tamil-speaking world.

31-1-59

Royapettah,

*A. Chakravarthi*

# திருக்குறள் வழங்கும் செய்தி

நெடுங்காலமாக இந்திய வரலாறு, ஆரியர் இந்தியாவின் மீது படையெடுத்த காலப்பகுதியிலிருந்தே தொடங்கி வந்தது. மொகஞ்சதரோ-ஹரப்பா நாகரிகங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின் இந்த நிலை அடியோடு மாறிவிட்டது. வடவிந்தியாவில் உள்ள மொகஞ்சதரோ-ஹரப்பா என்ற இடங்களில் புரிந்த புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாக, இந்தியாவில் ஆரியரின் வருகைக்கு முன்னரே ஓர் அழகிய சிறந்த நாகரிகம் நிலவியிருந்தது என்ற உண்மை வெளியாயிற்று. இந்தப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகம், கிறிஸ்து பிறப்பதற்கு ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்த ஒன்று என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தக் காலத்திய மக்கள் கைக்கொண்டிருந்த பண்பாடு, பிற்காலத்தில் வந்த ஆரியர்களின் பண்பாட்டிற்கு மிகுதியும் மாறுபட்டது என்பது இப்பகுதிகளில் புரிந்த ஆராய்ச்சியிலிருந்து புலனாகிறது.

## மொகஞ்சதரோ ஹரப்பா நாகரிகம்

மொகஞ்சதரோ, ஹரப்பா என்கிற நகரங்கள் ஒரு காலத்தில் சிந்து நதிக்கரையில் மேன்மையான பட்டணங்களாக விளங்கி வந்தன. இப்பட்டணங்களில் பெரிய பெரிய மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் இடம்பெற்றிருந்தன. இங்கே இருந்த அரண்மனைகள் அளிக்கும் காட்சி நமக்கு வியப்பூட்டுவதாக உள்ளது. இவ்வரண்மனைகளில் மதிற்சுவர்களோ, கொத்தளங்களோ, காவற்கூடுகளோ ஏதும் காணப்படவில்லை. இப்பண்டை நகரங்கள் புதையுண்ட சிந்து நதிக்கரைப் பகுதியில் எத்தனையோ சுவையூட்டும் பொருள்கள் கிடைத்திருந்தும், போர்த் தொடர்பான படைக் கலங்கள் ஒன்றும் கிடைக்காமை நம்மை அதிசயத்தில் ஆழ்த்துகிறது. ஒரு நாகரிகம் மிகுந்த நாடு தற்காப்புக்காகவாவது அரணீடுகளையும் போர்க்கலங்களையும் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால், இச் சிந்துநதிக்கரைப் பகுதியில் இவை எவையும் காணப்படாததிலிருந்து—இங்கு வாழ்ந்த மக்கள் எவரிடத்திலும் போர் புரியாமல் அமைதியாக வாழ்ந்துவந்தனர்

என்றும், இவர்கள்மீது எவரும் நீண்ட காலமாகப் படையெடுக்க வில்லை என்றும், அதனால் இவர்கள் தங்களைக் காத்துக் கொள்ளும் அவசியத்திற்கு உள்ளாகவில்லை என்றும் தெரிய வருகிறது. அவர்கள் எந்த இன்னலுக்கும் அஞ்சவில்லை; பிறருக்கு எந்த இன்னலும் இயற்றவில்லை. இந்த நிலை எல்லா வகை அறிஞர்களுக்கும் புதுமையைக் கொடுத்ததில் வியப்பு இருக்க முடியாது. என்றாலும், எந்த விதமான பாதுகாப்புமில்லாமல் இந்த நாட்டு மக்கள் ஓர் ஒழுங்கான சமுதாயத்தையும் ஒரு திறமையான ஆட்சியமைப்பையும் கட்டிக்காத்துவந்தது நமக்கு விளங்குவதாக இல்லை.

கொல்லாமையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆட்சி வெற்றியுள்ளதாக இருக்கும் என்பதை நவீன அறிஞர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் நாகரிகத்தின் வரலாறு என்பதே போர்களின் வரலாறு என்று கருதுபவர்கள். இந்த விடயம் நமக்கும் ஒரு புதிராகத்தான் தோன்றுகிறது. "நாகரிகத்தின் மூலங்கள்" (Sources of Civilisation) என்று ஒரு நூல் எழுதிய ஜெரால்டு ஹேர்டு என்னும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் இந்தச் சிக்கலை நமக்கு ஓரளவு தெளிவுபடுத்த முயல்கிறார். கொல்லாமை என்பது அந்தக் கால மக்கள் தம் மனத்தகத்தே வளர்த்துக் கொண்ட ஒரு நுண்ணிய பண்பு என்றும், இந்தப் பண்பு காரணமாக எந்தவகையான கொடுமையையும் கண்டு அஞ்சும் ஒரு மன நிலையை அவர்கள் பெற்றிருந்தனர் என்றும், இதனாலேயே அவர்கள் பிறருக்கு எந்தவிதத் தீங்கும் செய்யமுடியவில்லை என்றும் அவர் விளக்கம் தருகிறார். இதிலிருந்து ஒரு விடயத்தை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. அக்கால மக்கள் சொல் ஒன்று, செயல் ஒன்றாக வாழவில்லை; இக்கால மக்களைப்போல் அவர்கள் மனத்தில் பிளவுண்ணாமல் முழு மனிதர்களாகத் திகழ்ந்தார்கள். இதுவே அவர்கள் பல காரியங்களைச் சாதிப்பதற்குத் துணையாக இருந்தது.

அக்கால மக்களின் மனநிலையைச் சுருக்கமாகக் கூற வேண்டு மானால், அவர்கள் ஒருவகையான யோகத்தில் பயிற்சி பெற்றிருந் தனர் என்று சொல்லலாம். இந்த யோகம் என்றால் என்ன என்று நம்மில் பலர் வினவலாம். ஒரு மனிதன், தன் மனத்தில் எழும் எல்லாவித எண்ணங்களையும், தன்னுடைய உணர்வு நிலையிலே கொண்டு அடக்குவதுதான் யோகம் எனப்படும். இதற்கு என்ன பொருள்? சாதாரணமாக எந்த ஓர் உயிரியின் இயல்பும் தன் சூழ் நிலைக்கு ஏற்பத் தன்னை அமைத்துக்கொள்வதாகவே உள்ளது. மனிதனின் இயல்பும் இப்படிப்பட்டதேயாகும். ஆனால் மனிதன்

வளரவளர, அவன் தன் சூழ்நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயல்கிறான். சூழ்நிலை உருவாக்கும் பிண்டமாக அவன் இருக்க விரும்புவதில்லை சூழ்நிலையின் தூண்டுதல்களைப் புறக் கணித்து அவன் தன் மனத்தை ஒருமைநிலையில் இருந்தும் போது, அவனைப் பயனற்ற சிந்தனைகள் சாரமாட்டா. இத்தகைய மன வடக்கமுறையைப் பின்பற்றி மனிதன் தன் சூழலிலிருந்து விடு படுவானானால், அவன் ஒரு புதிய அற்புதமான அகவுலகிற்குச் செல்லும் வழியைக் கண்டுகொள்வான். அவ்வுலகிற்குச் செல்பவர், தாம் இதுவரை அறியாத பலவகைச் செலவங்களைக் கண்டு, விரும்பிய இன்பம் துய்க்கலாம். அகத்தை நண்ணிய மனிதனுக்கு முதலில் வினோதமான பல அனுபவங்கள் ஏற்படும். பின் அவன் பல தூரத்தாவுகளில் நடக்கும நிகழ்ச்சிகளைத் தான் இருந்த இடத்திலிருந்தே அறிந்துகொள்ளலாம் மற்றவர்கள் மனங்களை அவனால் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். காலப்போக்கில் அவன் காலத்தையும் இடத்தையும்கூட வென்று விடுவான். சுருக்க மாகச் சொன்னால், மனிதன் யோகத்தின் மூலம் ஒரு தனிச் சக்தியே பெற்றுவிடுகிறான் எனலாம். இச் சக்தி பெற்ற ஒரு வனிடம் அச்சம், வெறுப்பு என்கிற பண்புகள் அடியோடு நீங்கி விடுகின்றன; தீய பண்புகளுக்கு அவனிடம் இடமே கிடையாது ஆன்ம சக்தியின் மூலம் அவன் பெறுகிற குணம, எல்லா உயிரி களிடத்திலும் கொள்ளும் தன்னலமற்ற அன்பு மாத்திரமே ஆகும். இத்தகைய மனிதர்களைக் கொண்ட ஒரு நாகரிக உலகில் போருக்கோ, போர் முயற்சிகளுக்கோ வாய்ப்பு ஏது?

மொகஞ்சதரோ, ஹரப்பா நகரங்களைத் தோண்டியபோது இரண்டு முக்கியப் பொருள்கள் அங்கே கிடைத்தன. அவற்றில் ஒன்று, எருது உருவம் பொறிக்கப்பட்ட ஒரு முத்திரை: இன் னொன்று, தியான நிலையில் இருக்கும் முனிவரின் உருவம் பொறிக்கப்பட்ட மற்றொரு முத்திரை, இவையல்லாமல், எண் ணிறந்த சாசனங்களும் அங்குக் கிடைத்தன. இந் நகரங்களின் அகழ்வு முயற்சியில் பெரிதும் ஈடுபட்டு, இங்குக் கிடைத்த பொருள் களையெல்லாம் ஆராய்ந்த அறிஞரான ஈராஸ் பாதிரியார் என் பவர், சிந்து நதிக்கரை நாகரிகத்திற்குரிய மக்கள் திராவிட மக்களே என்று ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் சொல்லியிருக்கிறார் இவர் களுடைய நாகரிகமும் பண்பாடும் சுமேரிய-பாபிலானிய மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் ஒத்திருக்கின்றன என்பது அவருடைய கருத்து. இப்பகுதியின் சாசனங்களைத் துருவிப்பார்த்த பிரேமநாதர் என்கிற மற்றோர் அறிஞர், இம் மக்களின் நாகரிகம் ஜைன சமயத்தின் கொல்லாமை நெறியை மையமாகக் கொண்டது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். இவருடைய போக்குப்படி,

இங்கு உள்ள எழுத்துமூலங்கள் சில, ஜின முனிவரையும் இடப தேவரையும் குறிப்பனவாகத் தெரியவருகிறது. இச் சாசனங்களும் முத்திரைகளும் புலப்படுத்தும் கருத்தும், நாம் மேலே கூறிய போர் மறுப்புக் கொள்கையும் ஒத்துப்போவதால், சிந்து நதிக்கரை நாகரிகம கொல்லாமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஜைன நாகரிகம் என்பது தெளிவாக விளங்கும் ஒரு செய்தியாகும்.

## ஆரியப் படையெடுப்பிற்கு முன்னர் வாழ்ந்த மக்கள்

ஆரியர்கள் இந்தியாவின் மீது படையெடுத்தபோது, அவர் கள் அவ்வளவு சுலபமாக உள்நாட்டு மக்களிடம் வெற்றி பெற முடியவில்லை. உள்நாட்டு மக்கள் அன்னியர்களைக் கடுமையாக எதிர்த்தனர். அவர்கள் எதிர்ப்பு வெறும் பூகோள, அரசியல் அடிப்படையில் மட்டும் நின்றுவிடவில்லை, எந்த ஒரு நாட்டையும் அன்னியர் படையெடுத்தால் சொந்த நாட்டார் சும்மா இருக்க மாட்டார்கள்; அதை எதிர்த்தே தீர்வர். ஆனால், இவ்வாரிய எதிர்ப்பு வகையில், தேசிய உணர்ச்சி மட்டுமல்லாமல் கலை யொழுக்க வேறுபாடும் (Cultural difference) முக்கியப் பங்கு கொண்டது படையெடுப்புச் செய்த ஆரியர்கள் கால்நடை வளர்பபைத் தொழிலாகக் கொண்டவர்கள்: தம் கால்நடை களுக்காக மேய்ச்சல் நிலம் தேடி, ஓர் இடம்விட்டு இன்னோர் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் கூட்டத்தார். புது மேய்ச்சல் நிலங்களைத் தேடி இவர்கள் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தனர். இவர்கள் நுழைவை உள்நாட்டு மக்கள் எநத வகையிலும் விரும்பவில்லை. மேலும், ஆரியர்களின் சமயப் பழக்க வழக்கங்கள் தேசிய இனத்தாருக்குப் பிடிக்கவில்லை. ஆரியர்கள் காற்று, நெருப்புப் போன்ற இயற்கைக் கூறுகளைத் தெய்வமாக வழிபட்டனர். அவர்களுடைய கடவுள்களுக்கெல்லாம் தலைவன் இந்திரன் ஆவான். அவர்கள் தங்கள் கடவுள்களுக்கு விலங்குகளைப பலியிட்டுத் தமக்கு எதிரிகளைத் தொலைக்கும் வல்லமையை அருளுமாறு வேண்டிக்கொண்டனர். பல்வேறு விலங்குகளைப் பலியிடுவதல்லாமல், சோமப் பூண்டிலிருந்து எடுக்கப்பட்ட ஒருவகைப் போதை தரும் சாற்றையும் அவர்கள் தெய்வங்களுக்குப் படைத்துவந்தனர். அவர்கள் இந்திரனை நோக்கித் துதித்த பாடல்களில், இந்திரன் தங்கள் எதிரிகளின் பயிர்களையும் கால்நடைகளையும் நாசம் செய்யவேண்டும் என்றும், தங்களுடைய உடைமைகளை மட்டும் போற்றிக் காக்க வேண்டும் என்றும், அவன் அப்படிச் செய்தால் அவனுக்குப் பல ஆடுமாடுகளையும் சோமபானத்தையும் பரிசாக அளிப்பதாகவும்

களுக்குக் கொடுக்கப்படும் பலிச்சடங்கை ஆரியர்கள் யாகம் என்று அழைத்தனர். அவர்கள் சமயச் சடங்குகளில் தலைமையானது இந்த யாகமே ஆகும். இந்தியாவின் பழங்குடிகள் இத்தகைன் யாகத்தை அடிப்படையாகக் கொண்ட சமயத்தில் பழக்கப்பட்டவர்கள் அல்லர். இவர்களின் சமயம் கொல்லாமையை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், இவர்கள் தங்கள்மீது படையெடுத்த அன்னியக் கூட்டத்தினரைக் கடுமையாக எதிர்த்தனர்.

தம்மை எதிர்த்த பழங்குடியினரை ஆரியர்கள் வெறுப்புத் தோன்ற வருணித்துள்ளனர். பழங்குடிகள், வேதவேள்வி செய்யாதவர் என்றும், இந்திரனை வழிபடாதவர் என்றும், ஆரியச் சடங்குகளைக் கடைப்பிடிக்காதவர் என்றும் ஆரிய நூல்களில் குறிக்கப்படுகின்றனர். அந் நூல்களில் உள்நாட்டாரின் உடற்கூறுகள் பற்றிக்கூடக் கூறப்படுகின்றன. தாம் அழகிய வெள்ளை நிறம் உடையவர்கள் என்றும், எதிரிகள் அருவருப்பான கருப்பு நிறம் உடையவர்கள் என்றும், தங்கள் மூக்கு நீண்டு கூர்மையாக இருக்கும் என்றும், எதிரிகள் மூக்கு உள்ளழுந்திச் சப்பையாக இருக்கும் என்றும் ஆரிய நூல்களில் குறிப்புகள் வருகின்றன. பழங்குடியினருக்கு ஆரியர்கள் வைத்த பொதுப் பெயர் 'தஸ்யுக்கள்' என்பது. தஸ்யுக்கள் என்றால் எதிரிகள் என்றும், சில சமயங்களில் அடிமைகள் என்றும் பொருள்படும். ஆரியர்கள் பண்பாட்டுத் துறையில் எவ்வளவு தாழ்ந்தவர்களாக இருந்த போதிலும், போர்த் திறனில் வல்லவர்களாகவே விளங்கினர்; எந்த விதத்திலே அவர்கள் உள்நாட்டு மக்களைத் தோற்கடித்து அடிமைகளாக்கவும் முடிந்தது.

ஆரியர்கள் உள்நாட்டாரை விளித்த இன்னோர் அடைமொழி நகரவாணர் (புரவாசிகள்) என்பதாகும். இந்தியப் பழங்குடிகள் நன்றாகத் திட்டமிட்டுக் கட்டப்பட்ட பெரு நகரங்களில் வசித்து வந்தது ஆரியர்களுக்கு வியப்பைத் தந்தது. காரணம், ஆரியர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிலையாக இருந்து வாழ்ந்தவர்கள் அல்லர்; கன்றுகாலிகளை மேய்ப்பதே அவர்களின் முக்கியத் தொழிலாக இருந்ததால், நாடோடிகளாகவே அவர்கள் வாழ்க்கை அமைந்துவிட்டது. எனவே, அவர்கள் நாடுநகரங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்த மக்களைக் கண்டு பெரிதும் அழுக்காறு கொண்டனர். ஆரிய வேதங்களில் பழங்குடியினர் பேசிய மொழி பற்றியும், அவர்கள் செய்த வழிபாடு பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. பழங்குடிகள் மென்மை வாய்ந்த ஒரு மொழியைப் பேசுவதாகவும், ஆடை தரிக்காத ஒரு முனிவரின் உருவத்தை வழிபடுவதாகவும் வேதங்கள் புகல்கின்றன. சில கீழ்த்திசை அறிஞ

கள் இம் முனியுருவத்தை "இலிங்கம்" என்று கருதினர். ஆனால், இந்த விளக்கம் சரியானதாகத் தோன்றவில்லை அவர்கள் இப்படிப் பொருள் பண்ணியதற்குக் காரணம், ஜைனமுனிவர்களைச் ''சிசுனதேவர்கள்'' என்று ஆரியர் அமைத்த பெயரால்தான் என்று தெரிகிறது சிசுனம் என்பது ஆரிய மொழியில் ஆண்மகனின் பிறப்புறுப்பைக் குறிக்கும் ஆனால், இலிங்கம் என்பதோ ஆண் பெண்—இருவருடைய பிறப்புறுப்புகளைக் குறிப்பதல்லாமல், பொதுவாகப் பிறப்பிக்கும் வினையையும் குறிக்கும் இங்ஙனம், கலையொழுக்க வேறுபாடே ஆரியர்-பழங்குடிப் போராட்டத்திற்கு அடிப்படை கோலியது. நேர்முகப் போரில் ஆரியர் வெற்றிபெற்றாலும், பழங்குடியினர்க்கும் இவர்க்கும் ஏற்பட்ட கொள்கைப் போராட்டம் இந்திய சரித்திரத்தின் நெடுகிலும் இருந்துவருவதை நாம் காணலாம். நாள் ஆகவாக, ஆரியர்கள் பாஞ்சால நாட்டிலும் கங்கைநதிப் படுகரிலும் தம் ஆதிக்கத்தை நிறுவி தேசிய மக்களை இந்தியாவின், கிழக்குமுகமாகவும் தெற்குமுகமாகவும் துரத்தியடித்துவிட்டனர். இதன் விளைவாக, ஆதிவாசிகள், விந்திய மலைக்குத் தெற்கே வந்து குடியேறவேண்டியதாயிற்று.

## கொல்லாமை அறமும் இடபதேவரும்

ஜைன சமய வழக்காற்றுப்படி கொல்லாமை அறத்தை (அகிம்சா தருமத்தை) இந்த யுகத்தின் தொடக்கத்தில் முதன் முதலாக அறிவுறுத்துதல் செய்தவர் இடபதேவரேயாவர். இந்து சமயத்தில் வழங்கும் 'பாகவத புராணம்' என்னும் நூலின் ஐந்தாவது காண்டத்தில் இடபதேவரின் வரலாறு விரிவாகக் கூறப் படுகிறது. ஒரு காலத்தில் நாபீ என்ற அரசனும் மருதேவி என்ற அரசியும் தமக்கு மகப்பேறு இல்லாமல் வருந்தினர். எனவே, அவர்கள், தம் வழிபடு கடவுளான நாராயணனைத் தமக்கு ஒரு புதல்வனை அளித்துத் தம் அரசுக்கு உரிமையுடையவனாக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். நாராயணன், தாமே மேற்படித் துணைவர்களுக்கு மகனாகப் பிறப்பதாக வாக்களித்தார். அதன்படி, மருதேவிக்கு ஒரு மகவு பிறந்து அதற்கு இடபன் (ரிஷபன்) என்று பெயர் சூட்டப்பட்டது. இங்ஙனம், கடவுள் நாராயணன் மனிதவுரு எடுத்தது திருமால் பத்து அவதாரங்கள் எடுத்ததாக இந்து புராணங்கள் கூறும் காலத்திற்கு முந்தியதாகும்.

இளங்கோவான இடபன் வயதிற்கு வந்ததும் தன் தந்தையின் அரசுக்கு அதிபனானான் நீண்ட காலம் அரசாண்ட இடபனுக்குப் பரதன் என்று ஒரு புதல்வன் பிறந்தான். இவன் காலத்திலிருந்து

தான் இந்தியா இவன் பெயரால் 'பாரத நாடு' என்று வழங்கப் படுவதாயிற்று இடபன், நீண்ட கால ஆட்சிக்குப் பிறகு, நாட்டைப் பரதனிடம் ஒப்படைத்துவிட்டுத் துறவுபூண்டு தவம்புரியக் காட் டிற்குச் சென்றுவிட்டான். இடபனின் இத் திடீர்ப் போக்கு அவன் நாட்டு மக்களுக்குப் புரிபடவில்லை. காட்டில் இடபன் அம் மணமாக உலவியதும். யோகப்பயிற்சியில் ஆழ்ந்திருந்ததும் ஒரு பைத்தியக்காரனின் செயலாக மக்களுக்குப்பட்டது. என்றாலும். இடபன் எதற்கும் மனங்குலையாமல் கருமமே கண்ணாக இருந்து தவம்புரிந்தான். இறுதியில் யோகத்தின் பயனாகிய தன்னறிவு (Self-realisation) பெற்று இடபன் ஞானியானான் பின்னர், ஞானத்தை அடையும் வழியாகிய கொல்லாமை அறத்தை மக்களுக்கு அறிவுறுத்தும் தொண்டில் இடபன் ஈடுபடவேண்டிய தாயிற்று. பல இடங்களுக்குக் கால்நடையாகச் சென்று கொல்லா மையைப் பிரசாரம் செய்ததில், பல மக்கள் இடபதேவரின் சமயத் தில் சேர்வாராயினர்.

மேலே சொன்ன கதை பாகவத புராணத்தில் காணப்படுகிறது. இந்தக் கதையைக் கூறிவிட்டு, பாகவத புராண ஆசிரியர் ஒரு கேள்வியை எழுப்புகிறார். இந்து சமயக் கடவுளான நாராயணன் இடபதேவராக உருவெடுத்து வேத வினைகளின் சிகரமான யாகத்திற்கு எதிராக எவ்வாறு கொல்லாமையைப் பிரசாரம் செய்யலாம் என்பதே அக் கேள்வி. இதற்கு அவரே ஒரு விசித்திர மான பதிலும் கூறுகிறார். 'நாராயணன் இடபதேவராகப் பிறப்பெடுத்ததே, உலகத்தில் உள்ள கொடிய மக்களைத் தண்டித்து நரகத்திற்கு அனுப்புவதற்காகும். இதற்குரிய எளிய வழி, உலக மக்களுக்குக் கொல்லாமையை அறிவுறுத்தி. வேதவேள்விகளுக்கு அவர்களை எதிரிகளாக்கி, அவர்களின் இறுதிக்கு வழிவகுப்பதே. இதுவே நாராயணன் தோற்றத்தின் நுட்பம்' என்று அவர் கூறு கிறார். பாகவத புராணகாரர் தரும் இப் பதில் அவருக்குச் கொல் லாமை அறத்தின்மீது இருந்த காழ்ப்பையே புலப்படுத்துகிறது. இங்கே கூறப்பட்ட கதை, விட்டுணு புராணம், வாயு புராணம் போன்ற பல புராணங்களிலும் கூறப்படுகிறது. ஆனால், இவை இடபதேவரின் வரலாற்றை நேர்மையாகச் சொல்ல முயலாமல், அதனைத் தம் சமயத்தின் கோணத்திலிருந்து மதிப்பிட்டிருக் கின்றன. ஆனால், உண்மையில் இடபதேவர் ஒரு மேன்மையான மனிதராகப் பிறந்து, சமணரின் முதல் அறிவராக (தீர்த்தங்கரராக) விளங்கி, அன்புநெறியை உலகுக்கு அருளியவர் என்பது நல்ல நெஞ்சினருக்குப் புலப்படாமீற் போகாது. இடபர் அன்புநெறி யைப் போதித்ததன் நோக்கம், மக்கள் மேன்மக்களாக வாழ்ந்து

தம் வாழ்க்கையின் பயனை நுகரவேண்டும் என்கிற கருத்தேயன்றி வேறன்று.

மனிதனுடைய வாழ்வின் அடிப்படையே, பிற உயிரிகளிடத்தில் அவன் காட்டும் அன்பில் அடங்கியிருக்கிறது என்பதுதான் ஜைனர்களின் சித்தாந்தம். ஒரு சிற்றுயிரியைப் புறக்கணிப்பவனும், வாழ்க்கையின் இறுதியில் தன்னுணர்வு பெற்று விடுதலை (மோட்சம்) அடையமுடியாது என்பதைக் ஜைனர்கள் உறுதியாகக் கடைப் பிடிப்பவர்கள். இந்து மத இலக்கியங்களிலும் ஜைன மத இலக்கியங்களிலும் வருகிற இடபதேவரின் கதைகள், ஒரு பொதுவான முக்கிய நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே எழுந்திருக்கவேண்டும். இதனை இக் கதைகளில் வரும் மேற்சொன்ன கொள்கை ஒற்றுமையிலிருந்தே அறியலாம். ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன் இடபதேவர் வகுத்த கொல்லாமைச் சமயமே இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்ட ஒரு சமயமாக இருந்துவந்தது. ஜைனர்களின் சமய ஒழுகலாற்றுப்படி, எருது இடபதேவரோடு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. ஜைன உருவ வழிபாட்டில் எருது இடம்பெற்றிருப்பதை இன்றும் நாம் ஜைனக் கோயில்களில் காணலாம். அங்கு இடபதேவரின் படிமம் ஒரு தாமரைப் பீடத்தின் மேல் அமைந்திருப்பதையும், அந்தப் பீடத்தின் அடித்தளத்தில் எருதின் உருவம் ஒன்று பொறிக்கப்பட்டிருப்பதையும் கூர்ந்து கவனிப்பவர்கள் உணர்வர். இந்த எருது உருவந்தான் முதல் அறிவராகிய இடபதேவரோடு சார்புடையது என்று கூறப்படுவது.

மொகஞ்சதரோ, ஹரப்பா நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட யோகியுருவமும் எருதுருவமும் இடபதேவரின் வாழ்க்கையோடு நெருங்கிய உறவுள்ளவையாகத்தான் இருந்திருக்கவேண்டும். காரணம், சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் கொல்லாமையையே தம் சமயமாகக் கொண்டிருந்தவர்கள். ஆனால், ஆரியர்கள் இந்தியாவில் நுழைந்தவுடன், இடபரின் அன்புநெறி பெருநெருக்கடிக்கு ஆளாகியிருக்கவேண்டும். இதற்குக் காரணம் ஆரியர்களின் மாறுபட்ட பழக்கவழக்கங்களே என்று சொன்னால், அதில் தவறு இராது. சமணரின் அன்புநெறி மனித சமுதாயம் முழுவதற்கும் போதிக்கப்பட்ட ஓர் அறமாகும். இதில் சாதிகுல வேறுபாடு ஒன்றும் கிடையாது. ஆனால் ஆரியர்களோ, வருண முறையை (வருணாசிரம தருமத்தை) நம்புபவர்கள். அவர்கள் திராவிட மக்களை வென்றவுடன், பாஞ்சாலச் சமவெளிகளிலும், கங்கை நதியின் மேற்குப் பகுதியிலும் தங்கத் தலைப்பட்டனர். இங்குத் தங்கித் தம்மை நிலைநிறுத்திக்கொண்ட பின், இந்நாட்டு மக்களின் சமூக வாழ்க்கையில் பலவகை மாற்றங்களை அவர்கள் புகுத்த

முயன்றனர். அவர்கள் இந்தியாவிற்குள் நுழையும்போது, தமக்குள் அதிக வேறுபாடுகள் இல்லாத ஒரு மக்கள் கூட்டமாகவே நுழைந்திருக்க வேண்டும், அவர்களுக்குள் இருந்த இந்தச் சமுதாய ஒற்றுமையும் குழு மனப்பான்மையும் அவர்களுக்கு இந்தியாவில் வெற்றி தேடித்தந்ததோடல்லாமல், அவர்களை இந் நாட்டின் நிலையான குடிகளாகவும் ஆக்கிவிட்டன.

தம்மை நன்றாக நிலைநாட்டிக்கொண்ட பிறகும், தம்முடைய வலிமையால் அமைதியை உண்டாக்கிய பிறகும், ஆரியர்கள், திராவிடர்களிடையே நான்கு சாதிப் பகுப்பையும், பிறப்பில் உயர்வு தாழ்வு மனப்பான்மையையும், சமுதாயத்தில் மதகுருவுக்கே தலைமை இடம் என்ற நிலையையும் வலிந்து புகுத்தினர் இந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய வேத முறை அமைந்தது. வேத வினையான யாகத்திற்குக் கொடுக்கப் பட்ட முதன்மை மேற் சொன்ன பாகுபாட்டுக் கருத்துகளுக்கும் கொடுக்கப்பட்டது. ஆனால், வடவிந்தியாவில் வாழ்ந்த எல்லா மக்கட் பிரிவினரும் ஆரியரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டனர் என்று சொல்லமுடியாது. கங்கைச் சமவெளியின் கிழக்குப் பாகத் தில் இருந்த அரசுகளான (ராஜ்யங்களான) காசி, கோசலம், விதேகம், மகதம் என்ற பகுதிகள் வேதநெறிக்கு மாறாகவே நடந்துவந்தன. இப்பகுதிகளின் தலைவர்கள் கொல்லாமைப் பண்பாட்டை ஊன்றிக் கடைப்பிடித்ததோடு, ஆரிய வருணமுறை யையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், குரு-பாஞ்சால நாட்டினர்க்கும், காசி-மகத நாட்டினர்க்கும் எப்போதும் பகைமை இருந்துவந்தது.

## வேதத்தின் பிரிவுகள்

ஆரிய வேதங்கள் மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிந்துள்ளன, அவை ஒன்று சம்ஹிதைகள் (Samhitas) இரண்டு பிராமணங்கள் (Brahmanas), மூன்று உபநிடதங்கள் (Upanishads) என்பவை ஆகும். சம்ஹிதைகள், மந்திர நூல்கள் என்றும் அழைக்கப்படும். அவை இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வ வேதம் என்று நான்கு வகைப்பட்டுள்ளன. கடைசி வேதமான அதர்வ வேதம் பிற்காலத்தில் ஏற்பட்டதாகத் தெரிகிறது; ஏனென்றால், சமஸ்கிருதத்தின் தொன்மையான இலக்கியங்களில் முதல் மூன்று வேதங்களைப் பற்றிமட்டுமே பேசப்படுகின்றன. வேத மந்திரங்கள் பெரும்பாலும் துதிப்பாடல்களாகவே (Hymns) அமைந்துள்ளன. இரண்டாவது பிரிவான பிராமணங்கள் செம்

பாகம் வசன இலக்கியமாகக் காட்சியளிக்கின்றன. இவை யாகம் முதலிய காரியங்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்றும், அவைகளில் பலி முதலியவைகளை எவ்வாறு கொடுக்கவேண்டும் என்றும், இன்னும் பல விடயங்களும் விரிவாக ஆரிய மதகுருமார்க்குச் சொல்லும் வகையில் அமைந்துள்ளன. பிராமணங்கள் நிரம்பிய எண்ணிக்கை உடையவை; அவைகளில் சதபதப் பிராமணம். ஐத்திரேயப் பிராமணம் பூசவம்சப் பிராமணம் என்பவை குறிப்பிடத் தக்கவை. மூன்றாவது பிரிவுக்கு உபநிடதங்கள் என்று பெயர். இவைதாம் வேதத்தின் முக்கியப் பாகம் என்று சொல்லப்படுகிறது. இவைகளுக்கு இன்னொரு பெயர் வேதாந்தம் அல்லது மறைமுடிவு என்பதாகும். பிற்காலத்தில் எழுந்த இந்து உண்மை இலக்கியங்களுக்கு (Hindu Dharsanas) இவ்வுபநிடதங்கள் தத்துவ நிலைக்களங்களாக விளங்கின.

வேத இலக்கியம் வளர்ந்துவந்த அதே காலத்தில், வேறு வகையான சமுதாய அமைப்பும் ஆரியர்களிடையே உருவாகத் தொடங்கியது. ஆரியர்கள் உள்நாட்டு மக்களைப் படைவலிமையால் ஆட்கொண்டபோதிலும், தோல்வியுற்ற மக்களின் கலையொழுக்கம் ஆரியர்களை ஆட்கொள்ளாமலில்லை. இந்தத் தன்மையை நாம் உலக சரித்திரம் முழுவதிலும் காணலாம். ஐரோப்பாக் கண்டத்தில் ரோமானியர் கிரேக்கர்களை வென்று கீழ்ப்படுத்தியபோது, அவர்களுடைய கலையொழுக்கம், ரோமானியர்களைக் கவர்ந்து அவர்களைத் தன்வசப் படுத்திவிட்டது. இதே போல் இந்தியாவிலும் கலையொழுக்கக் கலப்பு ஆதிகாலத்திலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். வெற்றி பெற்ற ஆரியர்களில் சிலர். தோல்வியுற்ற திராவிடர்களின் வாழ்க்கைக் கொள்கையான கொல்லாமையைத் தம் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இந்தக் கருத்துக்குப் பிராமண இலக்கியங்களில் வரும் சிலவகைச் செய்திகள் அரண்செய்கின்றன. ஆரிய இந்தியாவில் இரண்டு வகையான கூட்டத்தார் முதன்மை பெற்றிருந்தனர். ஒரு கூட்டத்தார், மதகுருமாரின் தலைமையில் வேதவேள்விகளை ஆதரித்து வந்தனர்; இன்னொரு கூட்டத்தார், மன்னர்களின் தலைமையில் வேதவேள்விகளை எதிர்த்துவந்தனர். இரண்டாவது கூட்டத்தார் தலைமையடைந்தபோதெல்லாம்; மன்னன் வேத வினைகளைத் தடை புரிந்து இந்திர வழிபாட்டைத் தடுத்து நிறுத்துவான்; முதல் கூட்டத்தாருக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது, மறுபடியும் வேதவேள்விகளுக்கு முக்கியத்துவமும், இந்திர வழிபாட்டுக்கு முதன்மையும் கிடைக்கும். பிராமணங்கள் ஒன்றில் இதற்கான ஆதாரம் கிடைக்கிறது. இந்திர வணக்கத்தையும் பலிச்சடங்குகளையும் எதிர்க்கும் கூட்டத்தார் யதிகள் என்று

அழைக்கப்பட்டனர் என்றும், அவர்கள் தலை பனம்பழம்போல் துப்புரவாக மழிக்கப்பட்டிருக்கும் என்றும், வைதிகப் பிராமணர் ஆட்சியில் இருந்தபோது மேற்படி யதிகளின் தலைகள் கொய்யப் பட்டு ஓநாய்களுக்கு இரையாக்கப்பட்டன என்றும் செய்திகள் காணப்படுகின்றன இங்ஙனம், கொலைவாதிகளும் கொல்லாமை வாதிகளும் பண்டைய இந்தியாவை மாறிமாறி ஆட்சிபுரிந்தனர். ஆனால், கடைசியில் கொலைவாதிகளில் கை மேலோங்கிக் கொல் லாமைவாதிகள் அடியோடு ஒடுக்கப்பட்டனர்.

இந்தச் சமயத்தில் இந்துமதக் கடவுள்களுள் ஒருவனான கிருட்டிணனைப் பற்றிச் சிறிது கூறவேண்டியிருக்கிறது. மகா பாரதத்தில் இடம்பெற்றிருக்கும் கிருட்டிணன், தொடக்கத்தில் ஆரிய-திராவிடப் போராட்டத்தில் முக்கியப் பங்கு கொண்டிருந்த தாகத் தெரிகிறது வேத இலக்கியத்தில் கிருட்டிணன் தேவகியின் புதல்வனாகப் பேசப்படுகிறான். இடையர் குலத்தில் பிறந்த வனாகையால் கிருட்டிணன் முதலில் ஆரியப் பழக்கவழக்கங்களை ஆதரிக்கவில்லை; மாறாக, இந்திர வழிபாட்டிற்கும் வேதவேள்வி களுக்கும் எதிராக ஓர் ஆற்றல் வாய்ந்த இயக்கத்தை நடத்தினான். இந்த ஆதிகிருட்டிண வழக்குக் கொல்லாமையை அடிப்படையாகக் கொண்டே எழுந்தது. கிருட்டிணன் என்ற சொல்லுக்கு வடமொழி யில் கறுப்பன் என்பது பொருள்; கிருட்டிணனுடைய நிறமும் கறுப் பேயாகும். துவாரகைப் பட்டணத்தில் யாதவகுல அரசனாகக் கிருட்டிணன் ஆண்டுவந்தான் யாதவர் என்பார் திராவிட இனத் தின் ஒரு பிரிவினராகையால், துவாரகைவாசிகள் சிந்து நதிக்கரைப் பண்பாட்டைக் கடைப்பிடித்துவந்ததில் வியப்பில்லை. என்னதான் ஆரியர்களின் கை ஓங்கியிருந்தபோதிலும், குரு-பாஞ்சால நாடுகள், கிழக்குப் பகுதி நாடுகளின் எதிர்ப்பை அவ்வளவு சாதாரணமாகப் புறக்கணித்துவிட முடியவில்லை.

கங்கைக்கரையின் கிழக்குப் பகுதி நாடுகளைப் பற்றிக் குறிக் கும் சதபதப் பிராமணம், அப் பகுதி மக்கள் வேதவேள்விகளை ஆதரிக்கவில்லை என்றும், யாகங்களில் பலியிடுவதைச் சமயத்திற்கு மாறானதாகக் கொண்டார்கள் என்றும், கொலையை உண்மை யான அறத்திற்குக் குந்தகம் விளைப்பது என்று கருதினார்கள் என்றும், மதகுருவைத் தலைமையாகக் கொண்ட சமுதாய அமைப்பை ஒப்பவில்லை என்றும், இராஜசூயம் போன்ற தங்களுக் குரிய சடங்குகளை மதகுருமாரை அழைக்காமல் தம் மன்னர்களைக் கொண்டே நிறைவேற்றினர் என்றும் புகல்கிறது. குரு-பாஞ்சால நாடுகளின் சமய-வினையர்கள் (Priests) கீழைக்கரை நாடுகளுக்குச் செல்லக்கூடாது என்றும், அப்படிச் சென்றால் அவர்களுக்கு மதிப்பு

இராது என்றும் அக்கால ஆரிய சமூகம் கருதியதாக மத இலக்கியங் கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இச்செய்திகள், கங்கைச் சமவெளி யின் கிழக்கு-மேற்குப் பகுதிகளின் கலையொழுக்க மாறுபாட்டை உள்ளங்கைநெல்லிக்கனிபோல் காட்டுகின்றன.

வேத காலத்திற்குப் பிறகு உபநிடத காலத்திற்கு நாம் வருவோமானால், ஆரிய-திராவிடப் பிரச்சினைக்கான ஒத்தீடு (Compromise) அங்கே நடப்பதைக் காணலாம். கீழைக்கரை நாடுகளின் அதிபர்கள், தம் மக்களின் உலகியல் நலத்தை மட்டு மன்றி உயிரியல் நலத்தையும் அக்கறையோடு ஓம்பி வந்தார்கள். அவர்கள் காட்டிய ஆன்மீக வளர்ச்சி யோக நெறியை அடிப்படை யாகக் கொண்டிருந்தது. இவ்வளர்ச்சியின் விளைவே உபநிடதப் பண்பாடாக முகிழ்த்தது எனலாம். உபநிடதப் பண்பாட்டின் மையக் கொள்கை ஆன்ம ஞானம் அல்லது பிரமஞானமாகும். ஆன்மஞானத்தின் தத்துவ நுட்பம், குரு-பாஞ்சால நாடுகளின் கூர்த்த மதி வாய்ந்த சமயவினைஞர்களும் (Priests) அறியாத ஒன்று. இஞ்ஞானத்தைக் கற்க மேற்கில் இருந்த வேத விற்பன்னர் கள் பலர் கிழக்கு நோக்கிச் செல்வாராயினர். இங்ஙனம், குரு-பாஞ்சால நாடுகளில் குடிகொண்டிருந்த காந்தக் கவர்ச்சி இப்போது காசி-மகத மாநிலங்களுக்கு எழுகை புரிந்து விட்டது.

## உபநிடதங்களின் காலம்

கங்கைச் சமவெளியின் கிழக்குப் பகுதி நாடுகளில்தான் உபநிடதக் கருத்து வித்தூன்றியது. விதேக நாட்டின் அரசனான ஜனகன் அவைக்களம் அன்று அறிவுக் களரி (Intellectual activity) மிகுந்து விளங்கியது. உபநிடதக் கோட்பாடு வளர அரசர்களே பெருங்காரணமாய் இருந்தனர். இங்கு வேத நெறிக்கும் உப நிடதக் கோட்பாட்டுக்கும் உள்ள வேறுபாட்டைச் சிறிது அறிய வேண்டும். வேத நெறியாளர், மனிதருடைய வாழ்க்கையின் குறிக்கோள் துறக்கத்தை அடைவது என்றும், துறக்கத்தை அடைய யாகம் ஒன்றே சிறந்த வழி என்றும், யாகத்தின் மெய்ப்பயனை விலங்குக் கொடையின் மூலமே பெறமுடியும் என்றும் வற்புறுத் தினர். உபநிடதக் கோட்பாட்டாளரோ துறக்கத்துக்கும் இந்திர னுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை. இந்திரனை மனிதக் குறைபாடுகள் அனைத்தும் பொருந்திய ஒரு சாதாரணப் பிறவியாகவே கருதியதால், அவன் வழிபாட்டை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் இவற்றையெல்லாம்விட மேலான வாழ்க்கைநெறி (Life principle) ஒன்றைக் காண முற்பட்டனர்,

உபநிடதவாதிகள் இயற்கையின் ஒருவிதமான சக்தி மறைந்திருப்பதை உணர்ந்தனர். உயிர்ப்பொருள் உலகம் முழுதும்—தாவரத்திலிருந்து மனிதன்வரை-ஓர் உள்ளோட்டத்தைக் கொண்டே இயங்குகிறது. மிக நுண்மையாக விளங்கும் ஒரு விதை எப்படி ஒரு பெருமரமாக வளர்கிறது என்பதைக் கண்டால், அவ் விதையில் அடங்கியிருக்கும் நுண்ணாற்றல் நமக்குப் புலனாகும். இந்நுண்ணாற்றலே நிலைத்திணை முதல் இயங்குதிணை முடிய எல்லாப் பிறவிகளிலும் ஊடுருவி நிற்கின்றது. மனிதனும் இதற்கு விலக்கல்லன். ஊறு, காட்சி, கேள்வி, முகர்ச்சி, சுவைப்பு-ஆகிய ஐம்புலன்களாலும் உணரமுடியாத நிலையில் இருக்கும் உயிர்ப் பொருட் சக்தியை (Vital principle) ஆன்மா அல்லது பிரமம் என்று உபநிடதவாதிகள் அழைத்தனர். இந்த ஆன்ம அல்லது பிரம தத்துவத்தைப் புரிந்துகொள்ள அவர்கள் பெரிதும் பாடுபட்டனர். ஆன்ம தத்துவத்தை அறியக் கொலைநெறி (இம்சை) பயன் படாது. காரணம், யாகத்தில் கொலைசெய்யப்படுகிற எந்த உயிரியிலும் ஆன்மா நிலவியிருப்பதேயாகும். எல்லா உயிரிகளும் மூலகுண சக்திகளில் (அடிப்படையில்) ஒத்திருப்பதைக் கருதும் போது, ஆடுமாடுகளை மட்டும் காவுகொடுத்தல் ஒப்பமுடியாத ஒரு பழக்கம் என்பதில் அதிர்ச்சியில்லை. உபநிடதவாதிகள் இவை களையெல்லாம் நன்றாகச் சிந்தித்துக் கொல்லாமையை தங் களுடைய அடிப்படைக் கடைப்பிடியாகக் கொண்டனர். அவர்கள் நெருப்பை வெளியே வளர்த்து, அதில் விலங்குகளை இட்டுப் பொசுக்கி, அவைகளின் இறைச்சியைக் கடவுளர்க்குப் படைப்பதை விடுத்து—உள்ளத்தில் தியானத்தீயை வளர்த்து, அதில் ஆன்மாவின் கழி மலங்களை (Impurities) இட்டுப் பொசுக்கி, மீதம் உள்ள தூய ஆன்மாவைப் பிரமத்துக்குப் படைத்தனர். இங்ஙனம், உயிர்வதை யற்ற யோகத்தின் மூலம் கைவரப்பெறும் ஆன்மத் தூய்மையே அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோளாக அமைந்தது.

ஆன்மஞானக் கொள்கை வரவர நாடெங்கும் பரவத் தொடங் கியது; பல அறிஞர்கள் இக்கொள்கையைக் கற்கக்கிழக்கு நாடு களுக்கு வரத்தலைப்பட்டனர். வேத நெறி விற்பன்னர் பலரும், குரு-பாஞ்சால நாடுகளிலிருந்து கீழைநாடுகளுக்கு வந்து, ஆன்ம ஞானக் குழுவில் சேர விரும்பினர். அன்று ஜனக மன்னனும் அஜாதசத்துரு மன்னனும் ஆன்ம ஞானக் குழுவின் காப்பாளராக விளங்கினர்: வேதவினைஞர்கள் இவ்விரு மன்னர்களையும் அணுகித் தம்மையும் புத்தறிவுக் குழுவில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டினர். ஜனகன், அஜாதசத்துரு-ஆகியோரின் அவைகளில் நாள்தோறும் அன்று தத்துவ விசாரணைகள் நடந்தவண்ணம இருந்தன. அக்காலத்தைப் பற்றிக் குறிக்கவேண்டுமானால், அது

அறிவு வளர்ச்சியில் முனைப்புப் பெற்ற ஒரு காலம் என்று தயங்காமல் கூறலாம், அன்று வாழ்ந்த ஒவ்வொரு மனிதனும் ஆன்ம ஞானம் (Atma Vidya) என்னும் புதிய உபநிடதக் கோட்பாட்டில் இணையத் துடித்துவந்தான் என்று சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. இந்தப் புதிய ஞானத்தைவிட உலகில் கடைப்பிடிக்கத் தக்க மெய்யறிவு ஏதுமில்லை என்றும், இதனைவிட மதிப்பு வாய்ந்த ஒரு வித்தை இல்லை என்றும் அக்கால மக்கள் கருதினார்கள்.

உபநிடதக் கோட்பாட்டை நாம் நன்கு அறியவேண்டுமானால், நச்சிகேதன் என்பவனுடைய கதையை நாம் சிறிது தெரிந்து கொள்ள வேண்டும். நச்சிகேதன் என்ற ஒரு சிறுவன் ஒரு காலத்தில் இப்பூவுலகில் வாழ்ந்துவந்தான். அவன் மிகுதியும் நுண்ணறிவு வாய்ந்தவனாகையால், ஒரு நாள் இறப்புக்கு முதல்வனான நமனிடம் சென்று, மரணம் என்றால் என்ன என்றும், மரணத்திற்குப்பின் மனிதர் நிலை என்ன என்றும் கேட்டான். நமன், அவனுக்கு ஒரு பெரிய மாநிலத்தைப் பரிசாகக் கொடுத்து, மரணத்தைப் பற்றிமட்டும் ஒன்றும் கேட்கவேண்டாம் என்று கூறினான். நச்சிகேதன், நமனின் பரிசை ஏற்றுக்கொள்ளாமல், தன் ஐயத்தை தீர்க்குமாறு வற்புறுத்தினான். இறுதியாக, நச்சிகேதனின் தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல் நமன், அவனுக்கு ஆன்மஞானத்தைப் போதித்தான் என்பது கதை. இதே போல, யாஞவல்கியர் தன் இகபோகங்கள் அனைத்தையும் தன் மனைவியான மைத்திரையிடம் ஒப்புவித்துவிட்டுத் தான் கானகம் சென்று பிரமஞானம் கைவரப்பெறவேண்டும என்று சொல்லிய காலையில், மைத்திரை இகபோகங்களை ஒரு பொருட்டாகக் கருதாமல், கணவரோடு இருந்து தானும் ஆன்மச் செல்வத்தைப் பெறவேண்டும் என்று வற்புறுத்தியதையும் இங்கே எடுத்துக்காட்டலாம். இந்தக் கதைகளெல்லாம், ஆன்மஞானத்தைப் பார்க்க இவ்வுலகப் பொருள்கள் அனைத்தும் வெறும் குப்பை என்று உபநிடதவாதிகள் நினைத்ததை நன்றாகத் துலக்கிக் காட்டுகின்றன.

வேதவினைஞர்களிடையே நெருங்கிப் பரவியிருந்த சமுதாயக் கொள்கையான வருணாசிரம தருமம் என்னும் சாதித் தத்துவத்தை உபநிடதவாதிகள் ஏற்றுக்கொள்ளவே இல்லை. யபலசத்தியகாமன் என்பவனுடைய, கதை இந்தப் போக்கை நன்றாக விளக்குகிறது. ஓர் ஏழைமையான பணிமகளுக்கு முறை கேடாகப் பிறந்த யபல சத்தியகாமனுக்குத் தன் தந்தை யார் என்பது தெரியாது. என்றாலும், சத்தியகாமனின் இதயத் தூய்மையை நன்கு உணர்ந்த அவன் குருநாதர், ஓர் உபநிடதவாதியாக இருந்ததால், அவனை

ஆன்மஞானம் கற்பிப்பதற்குரிய தகுந்த மாணவனாக ஏற்றுக் கொண்டார். இவைகள் யாவும் நமக்கு அறிவுறுத்துவது, ஒரு மனிதன் உயர்ந்த சாதியில் பிறப்பதனாலும், போதிய பொருள் படைத்தவனாக இருப்பதனாலும், சமுதாயத்தில் செல்வாக்கு மிகுந்தவனாக விளங்குவதனாலுமே மேன்மையானவனாக ஆகி விடமாட்டான் என்பதுதான். சமுதாய ஏற்றத்தாழ்வு என்பது மனிதன் தானாக வகுத்துக்கொண்ட ஒரு பிரிவுமுறையேயன்றி வேறல்ல ஆன்மஞானத் தத்துவப்படி, மனிதன் தானே ஏற் படுத்திக்கொண்ட பிரிவுகளுக்கும், வேறுபாடுகளுக்கும் பொருள் ஒன்றும் கிடையாது.

காலஞ் செல்லச்செல்ல வேதவாதிகளிடையே ஒரு மாற்றம் நிகழ்ந்தது. உபநிடதக் கோட்பாட்டாளரின் அன்பு நெறி தம் முடைய பலிகொடுப்பு நெறியைவிட உயர்ந்தது என்பதை அவர் களில் மெத்தக் கற்றவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இதனைச் செயலில் காட்ட, வேதநெறியாளர். ஆன்ம ஞானத்தை ஏற்றுக் கொண்டு அதனைத் தம் கொள்கையாக ஆக்கிக்கொண்டனர். என்றாலும், இந்த ஒத்தீடு (Compromise) நெடுநாள் நிற்க வில்லை. அன்பு நெறியை எல்லா விடயங்களிலும் கடைப்பிடிப்பது என்றும், வேதவேள்வியில் மட்டும் அது இடம்பெறாது என்றும், யோகப்பயிற்சி மூலம் தியானம்புரிந்து ஆன்மஞானத்தை அடைவது தங்களுக்கும் உகந்த ஒன்று என்றும் அவர்கள் தெரிவித்தனர். இங்ஙனம், புது நெறியைப் புறக்கணிக்காமல் பழைய நெறியையும் காப்பாற்ற வேதவாதிகள் முயன்றனர், இதுபோன்ற சூழ்நிலையில் இந்தியா கி. மு. ஆறாம் நூற்றாண்டில் காட்சி வழங்கியது, இந்தச் சமயத்தில்தான் இந்தியாவையும் கொல்லாமை அறத்தை யும் காக்க மகாவீரர், கோதம புத்தர் என்னும் இரண்டு அரசகுலத் தோன்றல்கள் பிறந்தனர்.

மகாவீரர், கோதம புத்தர் ஆகியோரின் தோற்றம் இந்திய சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். இவர்கள் தோற்றத்தில் கொல்லாமை அறமும் மறுபிறப்பு எடுத்தது என்று சொன்னால் அதில் தவறில்லை. இளமையிலேயே இவ்விரண்டு தெய்வப் பிறவியாளர்களும் யோகம், தவம்-ஆகிய உயிரியல் வினை களைக் கடைப்பிடித்து நன்ஞானம் கைவரப்பெற்றனர். அன்பறம் கைவந்தவுடன், இவர்கள் அக்கோட்பாட்டைச் சாதி, சமய, பொருள் வேற்றுமை கருதாது, எல்லா மக்களுக்கும் அவர்கள் வசிக்கும் தாவு நோக்கிச் சென்று பிரசாரம் மூலம் வழங்கினர். இவர்கள் பிரசாரம் நல்ல பயனைத் தந்து, மகத-கீழ்த்திசை நாடு களில் சிந்துவெளி நாகரிகக் கருத்துகளை மீண்டும் நிலைநாட்

டியது. இச்சமயத்தில் வடவிந்திய அரசியலிலும் ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. மகத நாட்டை ஆண்டுவந்த பிம்பிசார மன்னன், கொல்லாமை அறத்தைத் தன் அரசக் கொள்கையாக அமைத்தான். இவனுடைய பின்வழியினரான நந்தர்களும் மோரியர்களும் இவனுடைய கொள்கையையே கடைப்பிடித்தனர். மோரிய அரசர்களில் சிறந்தவனான சந்திரகுப்த மோரியன், வடவிந்தியா முழுவதையும் கைப்பற்றி, தேசத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த அயலினத்தாரை விரட்டியடித்து, கொல்லாமையின் அடிப்படையில் ஓர் ஆற்றல் வாய்ந்த மாநிலத்தை உருவாக்கினான். இந்தச் சந்திர குப்த மன்னன் காலத்திலிருந்து அசோக வேந்தன் காலம்வரை வேதநெறி புதையுண்டு கிடந்தது. அசோகனுக்குப் பிறகு இது மறுபடியும் தலைதூக்கத் தொடங்கிவிட்டது.

இனி, நம்முடைய கவனத்தை இந்திய நிலமூக்கின் (Peninsula) தென்திசையிம் உள்ள விந்தியமலையைக் கடந்த பகுதிகளில் சிறிது செலுத்துவோம்.

இந்திய நிலமூக்கின் தென்பாதியான விந்தியமலைக்கு அப்பால் வாழ்ந்த மக்கள், சிந்து நதிக்கரையில் வாழ்ந்த பழங்குடி மக்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது பல காரணங்களால் தெரிய வருகிறது. இவர்கள் இருவரும் ஒரு காலத்தில் ஒரே இனமாக விளங்கியிருக்கின்றனர். இவ்வினத்தொடர்பு காரணமாகவே இவ்விருசாராரும் ஒரே சமயத்தைப் பின்பற்றியிருந்தனர் என்பதும், இருவரும் கொல்லாமைப் பண்பாட்டையே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பதும் நாம் இப்போது அறியமுடிகிற செய்திகளாகும். என்றாலும், இத்தென்னாட்டு மக்களைப் பற்றி வேத-இலக்கியங்கள் ஒன்றும் புகலவில்லை. வால்மீகி எழுதிய இராமாயணமும் ஜைனர்கள் எழுதிய பதும சரித்திரமும்தாம் இம்மக்களைப் பற்றிச் சில தகவல்களைத் தெரிவிக்கின்றன. வால்மீகி, தென்னாட்டிலும் இலங்கைத் தீவிலும் வானரர்கள் என்ற ஒரு வகுப்பினரும் அரக்கர்கள் என்ற ஒரு வகுப்பினரும் வாழ்கின்றனர். என்றும், வானரர்கள் குரங்குக் குணமுள்ள மனிதர்கள் என்றும், அரக்கர்கள் கொடூரக் குணம் படைத்த மூர்க்கர்கள் என்றும், எனினும் இவ்விரு வகுப்பாரும் நேர்த்தியான நகரங்களும் அவற்றில் மாடமாளிகைகளும் சமைத்துக்கொண்டு இன்பம் பொங்க வாழ்கின்றனர் என்றும் தம் நூலில் வரணிக்கின்றார், குரங்கு மனிதரும் அரக்க மாந்தரும் இலக்கியம், இலக்கணம், இசை, நுண்கலைகள்-ஆகியவற்றில் வல்லுநர்களாயிருக்கின்றனர் என்று வால்மீகி மேலும் கூறுகிறார். ஆனால், குரங்குகளும அரக்கர்களும் எப்படி இலக்கிய-இலக்கணங்

களிலும், நுண்கலைகளிலும் வல்லுநர்களாயிருப்பர் என்பது நமக்குப் புரியாத புதிராக உள்ளது. என்றாலும், சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்காமற்போகாது. இராமாயணம கூறும் முரண்பட்ட கருத்துகளை நிதானமாக ஆராய்நதால், அவை எதிர்த் தரப்பில் இருந்த ஒரு கவிஞரால் வரையப்பட்டவை என்பது துலக்க மாகப் புலப்படும். வானமீகி, தெனனாட்டு மக்களின் எதிரிகள் பக்கத்திலிருந்து நூல் எழுதியதால், அவர் அமமக்களைப் பற்றிய உண்மையான வரலாற்றையும, அவாகள் பணபாட்டைப் பற்றிய நேர்மையான செய்திகளையும கொடுக்கமுடியவில்லை.

ஆனால், ஜைன ஆசிரியர்கள் எழுதிய நூல்களை நாம் ஆராயும் போது, தென்னக மக்களைப் பறறி அவர்கள் கொண்டிருந்த கருத்துகள் முற்றும் வேறானவை என்பது நமக்கு நன்கு விளங்கும். மேலே குறிப்பிட்ட வானரர்கள், அரககர்கள் என்னும் கூட்டத் தாரை ஜைனர்கள் வித்தியாதரர்கள் என்று அழைக்கின்றனர். வித்தியாதரர்கள் என்றால் பயன் மிகுந்த உலகக் கலைகளில் நல்ல தேர்ச்சிபெற்றவர்கள் என்பது பொருள். வித்தியாதரர்கள், தாமே ஆக்கிக்கொண்ட ஒருவகை விமானம மூலம் வானத்தில் பறக்கக் கற்றுக் கொண்டிருந்தனர் என்றும், இதனால் அவர்களுக்குச் சமஸ்கிருதத்தில் 'கேசரர்கள்' என்ற பெயர் வழங்கியது என்றும் ஜைன நூல்கள் உரைக்கின்றன. வானர இனத்தைக் குரங்குகள் என்று மற்றவர்கள் அழைத்தது அவர்களது அறியாமையைக் காட்டுகிறது. வானரக்குலத்தை ஆண்ட தலைவர்கள் குரங்கைத் தம் சின்னமாகவும், குரங்குக் கொடியைத் தம படையின் அடை யாளமாகவும் கொண்டிருந்தனர். வானரப் படை நாட்டில் செல் லும்போதெல்லாம், மக்கள் அதனைக் குரங்குப் படை என்று வேடிக்கையாக விளிப்பது வழக்கம். இதேபோல அரக்கர் குலமும், அவர்கள் வலிமை நோககியும், அவர்கள்மீது இருந்த காழ்ப்புக் காரணமாகவும் அவ்வாறு எதிரிகளால் விளிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால், உண்மையில் இவ்விரு வகுப்பினரும் அத்தனை கொடூரமாகவும் காட்டு மிராண்டித்தனமாகவும இருந்த தாகத் தெரியவில்லை; மாறாக, அவர்கள் கலையிலும நாகரிகத்தி லும் மிக உயர்ந்தவர்களாக இருந்ததோடு, இடபதேவரை வழி படுவோராகவும் கொல்லாமையைப் போற்றுவோராகவும் இருந் திருக்கின்றனர்.

மேற்சொன்ன உண்மைகள் ஆரிய நூலாளர்களாலேயே (Writers) மறைமுகமாக ஒப்புக்கொளளப்படுகின்றன என்பது, வால்மீகியின் இராமாயணத்திலிருந்து நாம் அறியும செய்தியாகும். அரக்கர்கள் யாகங்கள் புரிவதற்குத் தடையாக இருந்தார்கள்

என்றும், எங்காவது வேள்வி இயற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்றால் அங்கு அவர்கள் தோன்றி அம்முயற்சிகளைக் குலைத்துப் பலிகொடுப்பை நிறுத்துவது வழக்கம் என்றும், யாகங்களை அரக்கர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே விசுவாமித்திரர் தசரதன் புதல்வர்களான இராம-இலக்குவர்களை அழைத்துச்சென்றார் என்றும் வால்மீகி நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துச்சொல்கிறார். ஆனால், ஏன் இவ்வரக்கர்கள் யாகங்களையும் பலிகொடுப்பையும குலைக்கும முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் என்பதை மட்டும் வாலமீகி வெளிப்படையாகக் கூறவில்லை. இதிலிருந்து நாம் ஊகிக்கக்கூடியது, அரக்கர் குலத்தார் கொல்லாமை நெறியைக் கடைப்பிடித்துவந்ததனாலேயே யாகங்களுக்கும் பலிகொடுப்புக்கும் அவர்கள் பகைவர்களாக இருந்தனர் என்பதாகும். இந்த ஊகம் ஜைன இலக்கியமான 'பதும புராணததில்' வரும் ஒரு நிகழ்சசியைப படிககுமபோது மெய்ம்மைப்படுகிறது. பதும புராணம் என்பது பதுமன் அலலது இராமனுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது. இபபுராணத்தில் மாருதன் வேள்வி சிதைப்பு (Marutha yagna Dvamsa) எனறு ஓர் அத்தியாயம் வருகிறது. இதில் சித்திரிககப்படும நிகழ்ச்சி சுவைகரமானதாய் இருக்கிறது. மாருதன எனகிற ஓா அரசன் வடநாட்டில் ஒரு பெரிய வேள்வி இயற்ற ஆயததஙகள செயதுகொண்டிருந்தான். இச்சமயத்தில், நாரதன் எனற வித்தியாதரன வானத்தில தன் விமானத்தில சென்றுகொண்டிருந்தபோது, பூமியில் ஓர் இடத்தில பலிகொடுப்புக்கான ஏற்பாடுகள் நடநதுவருவதையும, அதற்காகப் பல விலங்குகள் தூண்களில் கட்டப்பட்டிருப்பதையும, வேதவினைஞர்கள் யாக காரியஙகளைக் கவனிததுவருவதையும கண்டு கீழே இறங்கிவந்தான். அவன் இடபதேவர் குழுவில் சேர்நதவனாகையால், அவ் யாகத்தை நடததும அரசனான மாருதனைக் கண்டு, யாகத்தின் பொய்மையை விளககி, அதில் விலங்குகளைக் கொல்வதால் ஏற்படும் பாவத்தையும கூறி, அச் செயலைத் தவிர்க்கும்படி வேண்டினான். ஆனால, அரசன மாருதனும், அவனுடைய மதகுருமாரும், நாரதனைக கணடித்துத தம காரியங்களில் அவன் தலையிட்டால் அவனைக் கொனறுவிடுவதாக அச்சுறுத்தினர். இந்நிகழ்ச்சி தெனனகததின தலைவனான இராவணன் அரசின் எல்லையில் நடநததால், அவனுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்ட இராவணன், நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு நேராக எழுந்தருளி, அரசன் மாருதனையும் அவன் மதகுருமாரையும் அச்சுறுத்தி, அங்கு நடக்கஇருந்த யாகத்தைத் தடுதது நிறுத்தியதோடு, சாகஇருதத விலஙகுக்களையும காபபாறறினான். இராவணனின் அறவுரையால அரசன் மாருதன் மனம மாறி, கொல்லாமையின பெருமையை உணர்நது. இடபதேவர் குழுவில சேர்ந்தான்

என்பது பதும புராணம் கூறும் தகவல். இக்கதை நமக்குத் தெரிவிப்பது, வித்தியாதரர்கள் என்போர் ஜைன மதத்தைச் சேர்ந்த மனிதக் கூட்டத்தார் என்பது தவிர வேறல்ல.

வித்தியாதரக் கூட்டத்தார் பல நூற்றாண்டுகளாக உறுகண் மறுப்புக் கொள்கையை (Non-violent cult)க் கடைப் பிடித்து, வடநாட்டுப் படையெடுப்பு எவற்றாலும் பாதிக்கப்படாமல் மேன்மையாக வாழ்ந்துவந்தனர். இராமாயணப் போர்தான் முதன் முதலில் இவர்களைப் பேரளவு பாதித்து, இவர்கள் நாட்டின் பெரும்பகுதியை அழித்தது எனலாம். என்றாலும், தன் மனைவி காரணமாகப் போர் தொடுத்த இராமனால் அரக்கர்களையும் வானரர்களையும் அடியோடு-ஒழிக்க முடியவில்லை. போருக்குப் பின், இராமனின் முழு ஒப்புதலுடன், இவர்கள் மீண்டும் தங்கள் அரசுகளை இலங்கையிலும் கிட்கிந்தையிலும் நிறுவிக்கொண்டு, தங்கள் பழைய கொள்கைகளை விடாமல் பின்பற்றியே வாழ்ந்திருக்கின்றனர். இவ் வித்தியாதரக் கணத்தாரைப் பற்றி ஆழ்ந்து நோக்கியதில், இவர்கள் சிந்து நதி மக்களோடு இனத்தாலும் பண்பாட்டாலும் இணைந்து ஒன்றியவர்கள் என்று தெரியவருகிறது. இவர்கள் இன்றைய திராவிடர்கள் அல்லது தமிழர்களின் முன்னோராக இருக்கலாம் என்று கருதவும் நமக்கு இடமிருக்கிறது. இத் தமிழ் மூதாதையர் உறுகண் மறுப்பைக் கைக் கொண்டு அமைதியாக வாழ்க்கை நடத்தியதால், இவர்கள் காலத்தில் கலையும் நாகரிகம் பலபடித்தாக உயர வாய்ப்பு இருந்தது. இவர்களின் கலை-நாகரிகப் பொலிவை இன்று கிடைக்கும் சில கலையொழுக்கத் துணுக்குகளும் பழந்தமிழ் நூல்களும் நம்மிடம் ஆதரவு தந்து பேசுகின்றன. எப்படி இருப்பினும், கிறிஸ்து பிறப்பதற்கு முன் திராவிடர்களின் சமுதாய அமைப்பும் நாகரிகக் கருத்துக்களும் எவ்வாறு இருந்தன என்பதை அறிந்துகொள்வது இங்கு மிகுதியும் பயன் தருவதாகும்.

## தமிழர் நாகரிகமும் கலையொழுக்கமும்

தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் எழுந்த இலக்கியங்களும் பழமையானது தொல்காப்பியம் என்னும் நூலாகும். இந்நூல் தமிழ் மொழியின் இலக்கணத்தைக் கூறும் ஒரு நூல் என்றாலும், இதில் தமிழர்களின் வாழ்க்கைமுறை, சமுதாய அமைப்பு, சமூகப் பழக்க வழக்கங்கள்-ஆகிய பல விடயங்கள் அடங்கியிருக்கின்றன. தமிழர்களின் தொன்மையான நாகரிகத்தையும் பண்பாட்டையும் குறித்துத் தெளிவாகக் கூறும் ஒரே பழைய நூல இதுவேயாகும். எழுத்து, சொல்-ஆகிய மொழியின் உறுப்புகளுக்கு இலக்கணம்

கூறிவிட்டு, இந்நூலின் ஆசிரியரான தொல்காப்பியர், பொருளதிகாரம் என்று ஒரு பகுதியை இதில் படைத்திருக்கிறார். இப்பொருளதிகாரம் இந்நூலின் இந்தப் பகுதியில் கிறிஸ்து பிறப்பதற்குமுன் இருந்த ஒரு சமுதாயத்தை எடுத்துப் படம் பிடித்துக் காட்டுகிறது என்று சொல்லிவிடலாம்.

தொல்காப்பியத்தை இயற்றியவர் ஓர் சமண சமயத் துறவி என்று அறிஞர்கள் கூறுவர். எனவே, சமணக் கொள்கையான உறுகண் மறுப்பு அவர் நூலிலும் இடம்பெற்றிருக்கிறது. சமுதாயத்தைப் பற்றிப் பேசும்போது, தொல்காப்பியர் நவீன நோக்கோடு விஞ்ஞான அடிப்படையில் அதன் தத்துவத்தை விளக்குகிறார். ஒரு மக்கள் கூட்டத்தின் சமுதாயத்தைப் பற்றிக் கூறுமுன்பு அம்மக்கள் வாழ்கின்ற நிலத்தைப் பற்றி ஆசிரியன் விளக்கவேண்டும். தொல்காப்பியர் தமிழ் நாட்டை ஐந்துவகை நிலங்களாகப் பிரிக்கிறார். ஒன்று மலையும் மலையைச் சார்ந்த நிலமும்; இதற்குக் குறிஞ்சி என்று பெயர். இன்னொன்று காடும் காட்டைச் சார்ந்த நிலமும்; இதற்கு முல்லை என்று பெயர். மற்றொன்று வயலும் வயலைச் சார்ந்த நிலமும்; இதற்கு மருதம் என்று பெயர். பிறிதொன்று கடலும் கடலைச் சார்ந்த நிலமும்; இதற்கு நெய்தல் என்று பெயர். இறுதியானது காடும் மலையும் தம் இயல்பு திரிந்து மாறிய வறண்ட நிலம்; இதற்குப் பாலை என்று பெயர். இந்த ஒவ்வொரு நிலத்திற்கும் தனக்கேயுரிய தாவரமும் விலங்குகளும் உண்டு. அதேபோல ஒவ்வொரு நிலத்தில் வசிக்கும் மக்களுக்கும் ஒவ்வொரு வகையான இயல்பு உண்டு; இது அவ்வந்நிலத்தின் தன்மையை ஒட்டியது. மலைநிலத்தில் வசிக்கும் மக்கள் வேளாண்மை செய்து வாழமுடியாது. அவர்கள் சில புன்பயிர்களை விளைத்து, அவற்றில் கிடைக்கும் தினை, சாமை போன்ற தானியங்களைக் கொண்டும், மலைச்சாரல்களில் உள்ள தேன்கூட்டிலிருந்து எடுக்கும் பிரசத்தைக் கொண்டுமே வாழ்க்கை நடத்தவேண்டும். அவர்களுடைய சமுதாயப் பழக்கவழக்கங்களும் மலைநிலத்தின் இயல்புக்கு ஏற்பவே அமைந்திருக்கிறது. காட்டுநிலத்தில் வசிக்கும் மக்கள் கால்நடைகளை வளர்த்து வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்கள், கால்நடைகளினின்று பெறும் பாலிலிருந்து தயிர், வெண்ணெய், நெய் முதலிய பொருள்களைத் தயாரித்து, அவற்றைச் சமவெளியில் இருக்கும் மக்களிடையே கொண்டு விற்றுப் பயன்பெறுகிறார்கள். இவர்களுடைய சமய ஒழுக்கம், கன்று காலிகளைக் காக்கும் கடவுளாம் கண்ணனை மையமாகக் கொண்டு விளங்கியது. இந்தக் கண்ணன் என்கிற கடவுள் கோபாலன் என்று வடநாட்டவரால் அழைக்கப்படும் கிருட்டிணனே ஆவான். முன்னமே நாம் கூறியவாறு கிருட்டிணன் இந்திர வழிபாட்டுக்கும் வேதவேள்விகளுக்கும்

எதிரானவன் என்பது நினைவிருக்கலாம். இந்தக் காட்டுநிலத்தில் வாழ்ந்த ஆயர்கள் கிருட்டிணனின் வழிமுறையில் வந்த திராவிட மக்களாகத்தான் இருக்கவேண்டும்.

நதிக்கரைகளிலும் சமவெளிகளிலும் வாழ்ந்த மக்கள் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு வேளாளர்கள் என்று பெயர். வேளாளர்களில் அதிக நிலம் படைத்தவர்களாக இருந்தவர்கள் சமுதாயத்திற்குத் தலைமைவகித்தார்கள், அத்தகையவர்களுக்கு வேளிர்கள் என்று பெயர். வேளிர்கள் தங்கள் மூதாதையரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றிவந்ததால் உறுகண் மறுப்பையும் இடபதேவர் வழிபாட்டையும் தம் கொள்கையாகக் கொண்டிருந்தனர். சமவெளி மக்களும், தம் தலைவர்களைப் பின்பற்றி, வேதவினைகளையும் குருமார் தலைமையையும் வெறுத்துவந்தனர். வேளாளர்கள் சாதி வேறுபாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் தாம் விரும்பிய தொழிலை நேர்மையுடன் புரிந்துவந்தனர், இலக்கியம், கலை-ஆகிய துறைகளிலும், படை, வாணிபம்-ஆகிய துறைகளிலும் அம் மக்களில் பெரும்பாலார் ஈடுபட்டிருந்தனர். தாம் விரும்பிய தொழிலில் ஈடுபட்டு நேர்மையாக உழைத்து வாழ்ந்ததால், வேதவாதிகள் வகுத்த வருணமுறைக் கலையொழுக்கம் வேளாளர்களுக்குப் பிடிக்கவில்லை. வேளாளர்கள் தமக்கென்று ஒரு சமயத்தை வகுத்துக்கொண்டு அதனைப் பின்பற்றிவந்தனர். அவர்களுடைய கடவுள் மற்ற மலை, காட்டுப் பகுதி மக்களின் சிறுதெய்வங்களிலிருந்து வேறுபட்டதும் மேன்மையானதுமாகும். 'கந்தழி' என்பது அக்கடவுளின் பெயர். கந்தழி என்கிற தூய தமிழ் சொல்லுக்குக் கட்டுகளை அறுப்பவன் என்று பொருள். ஏல்லா வினைகளிலிருந்தும் நீங்கி ஓர் உயர்ந்த நிலையை எய்திய மனிதனைத்தான் கந்தழி என்று சொல்லவேண்டும் என்று தொல்காப்பியத்தின் உரையாசிரியர்கள் கூறுகிறார்கள். வேளாளர்கள் சிறந்த நாகரிகம் பெற்றிருந்ததால் அரசர்களோடு மணவுறவு கொண்டிருந்தனர். கடல் வாணிபத்திலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். தென்னிந்தியா வடவிந்தியாவைப் போலன்றி, தொல்பழங்காலத்திலேயே கடல் வாணிபத்தில் சிறந்திருந்தது என்பது இங்கு உணரத்தக்கது. இங்ஙனமே மற்ற நில மக்களும் அவ்வந்நிலத்தின் இயல்புக்கு ஏற்ப வாழ்க்கை நடத்திவந்தனர். இது தொல்காப்பியர் காட்டும் படம்,

தமிழர் வழிபட்ட கடவுளின் தன்மையைப் பற்றித் தொல்காப்பியர் ஓர் இடத்தில் பேசுகிறார். யார் எல்லா வினைகளினின்றும் நீங்கியவனோ, எவன் விளங்கிய அறிவை உடையவேனா, அவன்தான் கடவுள் என்பது தொல்காப்பியரின் கருத்து.

இந்தக் கருத்தின் அடிப்படையில் பார்த்தால், அத்தகைய கடவுளுக் குரிய தன்மை வாய்ந்தவர் இடப்பதேவரே என்பது விளங்கும். இடபதேவர், ஆன்மாவின் கழிமலங்களைச் சுட்டுப் போசுக்கித் தூய தன்மையை எய்த யோகம் ஒன்றே தகுந்த வழி என்று புகன்றார். இதனைச் சரியான முறையில் கடைப்பிடித்து, உயர்ந்த நிலையில் நீண்ட காலம் வாழ்ந்தவர்கள் தென்னாட்டின் வேளாளர் களே ஆவர். இந்தச் சமயத்தில் ஓர் உண்மையையும் நாம் மறந்து விடக்கூடாது தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்தில் தென் னிந்தியாவின் சமுதாயம் ஓர் கலப்பு வாய்ந்த சமுதாயமாகவே இருந்தது. திராவிடர்கள் மட்டுமல்லாமல் ஒரு சிறுபகுதி ஆரியர் களும் அன்று இங்கு வசித்துவந்தனர். வடவிந்தியாவை முழுதும் குடிகொண்ட ஆரியர்கள், தென்னிந்தியாவின் வளப்பத்தையும் பசுமையையும் அறிந்து, இங்கும் குடிபுகுந்திருக்கிறார்கள். சுகமான வாழ்க்கை கிடைக்கும் என்ற நோக்கமே ஆரியர்களின் தென்னிந்திய எழுகைக்குக் காரணமாகும். இங்குக் குடிபுகுந்த பின்னர் அவர்கள் தங்கள் வேதமதத்தைப் பரப்பத் தொடங்கினர். வந்தவர்களையெல்லாம் வரவேற்கும் பண்பு தமிழர்களுக்கு இருந்த தால், ஆரியர்களின் ஆதிக்கம் தென்னகத்தில் சுலபமாகக் கால் கொண்டது. வடவிந்தியாவில் கிடைத்த அளவு மேட்டிமை இங்குக் கிடைக்கவில்லையாயினும், அவர்களுக்குத் தனியுயர்வு இங்கும் ஏற்பட்டது உண்மைதான். என்றாலும், அவர்கள் உள்நாட்டுத் தலைமைக் குடிகளான வேளாளர்களிடம் இணக்கமாகவே நடந்து வாழ வேண்டியிருந்தது. நிலமுதல்வர்களான வேளாளர்கள் ஆரியர் கள் வருகைக்குப் பின்னும் தங்கள் சமுதாயப் பொருளாதாரத் தலைமை குன்றாமலே இருந்துவந்தனர்.

## கிறிஸ்து பிறப்புக்கு முந்திய இந்தியா

கிறிஸ்து பிறப்பதற்குச் சிறிது காலத்துக்கு முந்திதான் சந்திர குப்தர் என்பவர் இந்தியாவில் மோரியப் பேரரசைத் தோற்றுவித் தார். அன்று வடவிந்தியாவில் இருந்த அன்னிய ஆதிக்கத்தை அடியோடு அகற்றி ஓர் வல்லமை வாய்ந்த பேரரசை (Empire)ச் சந்திரகுப்தர் நிறுவியதால், அந்த நிகழ்ச்சி இந்நாட்டின் வரலாற்றில் ஓர் புகழ் வாய்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. சந்திரகுப்த மோரியர், கொல்லாமை அறத்தை மேற்கொண்டு, அதனை அரக மதமாகவும் ஆகச் செய்தார். இவர் காலத்திய முக்கிய நிகழ்ச்சி ஜைன முனைவருள் (Jaina Thirthankaras) கடைசியவரான மகாவீரர் தோன்றியதாகும். மகாவீரர், புதை யுண்டிருந்த ஜைன மதத்துக்குப் புத்துயிரளித்து, அதனைப் புதிய வேகத்துடன் பரவச்செய்தார். கோதம புத்தர் என்னும் பௌத்த

மதத் தோற்றகரும் (Founder of the Buddhist religion) இவர் காலத்தில் இருந்தவரே ஆவர். புத்தரும், கொல்லாமை அறத்தையே மையமாகக் கொண்டு, தத்துவத்திலும் சமுதாயத் துறையிலும் சிறிது மாற்றங் கலந்த ஒரு சமயத்தை உண்டாக்கினார். இவ்விரண்டு அறிஞர்களின் நெறிகளும் ஒரே ஆற்றலுடன் இயங்கி, வடவிந்தியப் பண்பாட்டில் உறுகண் மறுப்பை (Ahimsa) வேரூன்றச் செய்தன சந்திரகுப்த மோரியர் காலத்தில், தென்னிந்தியா, சேர-சோழ பாண்டியர்கள் என்னும் மூக்குல அரசர்களால் ஆளப்பட்டுவந்தது. இம் முக்குல அரசர்களும் கொல்லாமை அல்லது உறுகண் மறுப்பையே தம்முடைய அரசு மதமாகக் கொண்டிருந்தனர். இங்ஙனம், கிறிஸ்து பிறப்பதற்குச் சற்று முந்திய காலத்தில், இந்தியா முழுவதும்—வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே குமரி முனைவரையிலும், மேற்கே காந்தாரத்திலிருந்து கிழக்கே இராஜக்கிரகம் வரையிலும்—மக்கள் பின்பற்றும் மதமாகவும், அரசகம் பின்பற்றும் மதமாகவும் கொல்லாமை இருந்தது, வேதநெறியின் தலைவர்களும் அக்காலத்தில் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால், அவர்களுக்கு அதிகச் செல்வாக்கு இல்லை.

சந்திரகுப்த மோரியருக்கு வாழ்க்கைக் குருவாகப் பத்திர பாகு என்று ஒரு ஜைன முனிவர் இருந்தார். சந்திரகுப்தர், பல ஆண்டுகள் நல்லாட்சிபுரிந்து தம் அரசை வலிமைப்படுத்தினார். மக்களின் பொருளாதாரம் அவர் காலத்தில் நன்றாக ஓங்கியது. இச் சமயத்தில் அவருடைய புதல்வனும் வளர்ந்து அரச காரியங்களைக் கவனிக்கும் வயதும் தகுதியும் பெற்றான். சிறிது முதுமையுற்ற சந்திரகுப்த மன்னர், அரசைப் புதல்வனிடம் ஒப்புவித்துவிட்டு தான் துறவுபூண்டு, பத்திரபாகு முனிவரைத் தலைமையாகக் கொண்ட ஜைன சங்கத்தில் சேர்ந்தார். இத்தருணத்தில் வடவிந்தியாவில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. இப்பஞ்சம் பன்னிரண்டு ஆண்டுகள் நீடித்து வடவகத்தை ஆட்டிப்படைத்தது. இப்பஞ்சத்தை தாங்கமுடியாத ஜைன சங்கத்தார், பல ஆயிரம் துறவிகளுடன் தென்னிந்தியாவில் குடிபுகுந்தனர் தென்னிந்தியா அப்போது மிகுந்த செழிப்பான நிலையில் இருந்தது தென்னிந்திய வேளாளர்களில் பெரும்பாலோர் அன்று ஜைனர்களாக இருந்தனர். எனவே, வடநாட்டு ஜைன முனிவர்களை அவர்கள் அகம் மலர வரவேற்றனர். பத்திரபாகு சங்கத்தினர், தென்னகத்தில் குடியேறியவுடன், தென்னிந்திய மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களுடைய மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை நன்கு அறிந்துகொண்டதோடு, அவற்றில் நல்ல பயிற்சியும் பெற்றனர். அவர்கள் சங்கம், சமண சமயக் கொள்கைகளோடு தமிழ்க் கலை,

இலக்கியம்-ஆகியவற்றையும் வளர்க்கத் தொடங்கியது. தென்னகம் முழுவதையும் சுற்றிப்பார்க்கப் புறப்பட்ட பத்திரபாகு முனிவர், மைசூர் மாகாணத்தில் உள்ள சமணர் வெண்குளம் (Sravana Belugula) என்ற இடத்திற்கு வந்ததும் நோய்வாய்ப் பட்டதால், அங்கேயே சிறிது காலம் தங்க நேரிட்டது. அப்போது மோரிய சந்திரகுப்தரும் தம் குருவோடு உடன் தங்கவேண்டிய தாயிற்று. சங்கத்தின் மற்றத் துறவிகள், பாண்டிநாடு நோக்கிச் சென்று, சமயப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர். பாண்டி நாட்டில் ஏற்கெனவே ஜைன மதம் கால்கொண்டிருந்ததால், வட நாட்டுக் துறவிகளின் போக்கு அங்கு ஒரு புதிய கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று.

கீழ்த்திசை அறிஞர்களில் பலர், தென்னிந்தியாவில் ஜைன மதமே பத்திரபாகு முனிவரின் சமண சங்கத்தவரால்தான் புகுத்தப் பட்டது என்று கருதுகின்றனர். ஆனால், இந்தக் கருத்து நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களை நோக்க வலியுறுவதாக இல்லை. தொல் பழங்காலத்திலிருந்தே தென்னிந்தியர்கள் கொல்லாமை அல்லது உறுகண் மறுப்பு (Ahimsa) என்கிற கொள்கையைத் தம் தேசியப் பற்றுறுதியாகக் கொண்டிருந்தனர். அதுவுமன்றி, சமண சங்கம் எவ்வளவுதான் சிறந்ததாக இருந்திருந்தாலும், உள்நாட்டவரின் இதயபூர்வமான வரவேற்பும் பரிவுகலந்த ஆதரவும் இல்லாமல், ஆயிரக்கணக்கான துறவிகளுடன் அது ஓர் அன்னிய நாட்டில் நுழைந்திருக்கமுடியாது. மேலும், சந்திரகுப்த மோரியர், தாம் ஆண்ட காலத்தில், வடவிந்தியா முழுவதையும் வென்று தம் குடைக்கீழ் கொண்டுவந்தவர். அவர் தென்னிந்தியாவை அணுக வும் விரும்பவில்லை; இதற்குக் காரணம், தென்னகத்தை அன்று ஆண்டுவந்த மன்னர்கள் அனைவரும் சந்திரகுப்தரைப் போலவே கொல்லாமை அறத்தில் பற்றுறுதி கொண்டவர்களாக இருந் தமையே ஆகும். சந்திரகுப்தர், தென்னிந்திய மன்னர்களைத் தம்முடைய நண்பர்களாகவும் நேசர்களாகவும் கருதினார். படைத் துறை வெற்றியைவிடத் தாம் கண்ட கொள்கையின் வெற்றியே மேலானது என்று மோரியருக்குப் பட்டது. எனவே, அன்புநெறி யைப் பின்பற்றும் தென்னாட்டவரை அவர் எந்தவிதத்திலும் துன்புறுத்தவில்லை; மாறாக, நட்புறவுடன் அவர் தென்னகத்துக்கு எழுந்தருளினார். இவைகளினின்று நாம் அறிந்துகொள்வது, தென்னிந்தியாவில் சமண சமயம் சந்திரகுப்த மோரியர் காலத்துக்கு முன்பே பரவியிருந்தது என்பதேயாகும்.

சமணத் துறவிகள் தென்னிந்தியாவில் புகுந்த பிறகு, பௌத்தத் துறவிகளும் இங்குக் குடியேறத் தலைப்பட்டனர்,

கிறிஸ்து யுகத்திற்குச் சிறிது முன்னர் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த மக்கள் ஓர் கலப்புச் சமுதாயத்தினராகவே இருந்தனர். இடப்பதேவரின் வழிமுறையைப் பின்பற்றும் நிலவுடைமைச் சமூகமே முக்கியமானதாக இருந்தும், பௌத்த நெறியைக் கடைப்பிடிப்பவர்களும் வேத நெறியைக் கடைப்பிடிப்பவர்களும் இங்கு ஒருங்கு வாழ்ந்துவந்தனர். பொதுவாகச் சமணர்களும் பௌத்தர்களும் ஒரே கொள்கையைக் கொண்டவர்கள்; ஆனால், வேதவாதிகளோ வருண ஒழுக்கமும் பலிக்கொடையும் நோக்கமாகக் கொண்டவர்கள். கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகள் முந்தியிருந்து தென்னிந்திய சமுதாயத்தில் சமணம், பௌத்தம், வேதவாதம்-என்னும் இம்மூன்று அறிவியல் சக்திகளும் (Intellectual forces) நிலவிவந்ததோடு, ஒவ்வொன்றும் தம் பாதையையும் செல்வாக்கையும் வளர்த்துவந்தன; சமயங்கிடைத்தபோது ஒன்றை ஒன்று அடக்கித் தலைமைபெறவும் இவை அஞ்சவில்லை. இத்தகைய சூழ்நிலையில்தான் திருக்குறள் என்கிற நூல் தமிழ் நாட்டில் தோன்றியது. திருக்குறள் இயற்றப்பட்டவுடன் அது தமிழர்களின் வேதம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. ஆரியர்களின் புனித நூல் சமஸ்கிருத வேதமாக விளங்கியதுபோலத் தமிழர்களின் புனித நூல் திருக்குறளாக நீண்ட காலம் விளங்கிவந்தது. திருக்குறள் அன்றுமுதல் இன்றுவரை தமிழர்களின் தலை நூலாகவும் வாழ்க்கை வழிகாட்டியாகவும் இலங்கிவருவதே அதன் சிறப்புக்குப் போதிய சான்றாகும்.

## மூன்று சமயநெறிகளும் அவைகளின் கோட்பாடுகளும்

நாம் முன்னர் கவனித்தபடி, கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டிலும் பிந்திய நூற்றாண்டிலும் தென்னிந்தியாவில் சமணம், பௌத்தம், வேதவாதம் என்று மூன்று சமயங்கள் கால்கொண்டிருந்தன இவை ஒவ்வொன்றும் தமக்கேயுரிய கோட்பாடுகளும் பழக்கவழக்களும் உடையனவாய் இருந்தன. கொல்லாமையை மூலக்கொள்கையாகக் கொண்ட இடபர்நெறி தன் ஒழுகலாற்றில் கடுமைவாய்ந்ததாக இருந்தது. சமயத்தின் பெயரால் உயிர்ப்பலி செய்வதைச் சமணம் வன்மையாகக் கண்டித்தது. எந்த இறைவன் அல்லது இறைவி முன்னரும் இரத்தம் சிந்துவதை அது ஒருப்படவில்லை. உயிர்க்கொலையை வெறுத்த சமணர்கள் தம் வாழ்க்கையிலும் அதனைக் கட்டுப்பாடாகப் பின்பற்றினர் அவர்கள் காய்கறி உணவையே புசித்துவந்தனர். புலால் உணவை அவர்கள் மனத்தாலும் தீண்டியதில்லை. சமணர்கள் தங்கள் கொள்கைகளில் சிறிதும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். இந்தப் போக்கு இவர்

களுக்கும் வேதவாதிகளுக்குமிடையே சச்சரவை உண்டாக்கியது. வேதவாதத்தின் அடிப்படைக் கொள்கை வேள்விகளில் உயிர்களைப் பலியிடுதலாகும். உயிர்ப்பலியின்றி வேதமதம் இல்லை. யாகங்களில் உயிர்களைப் பலியிடுவதன் நோக்கம், வேள்வித்தீயில் விலங்குகளின் இறைச்சி புனிதப்படுகிறது என்பதேயாகும். இந்தப் புனிதமான தளிகையை (பிரசாதத்தை) வேதமதத்தினர் தமக்குள் பகிர்ந்து கொண்டு உண்பர். இதிலிருந்து வேதவாதிகளுக்குப் புலால் அன்றாட உணவாக இருந்தது என்பது தெரியவரும். பல நூற்றாண்டுகளாக வேதநெறியினர் புலால் உண்டுவந்தனர். இப்போதும் தென்னிந்தியாவைத் தவிர்த்த மற்றப் பாகங்களில் உயர்ந்த குலத்தார் என்று கூறிக்கொள்ளும் வேதமதத்தார் இறைச்சி உண்பதைப் பழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். தென்னகத்தில்மட்டும் வேதவாதிகள் இறைச்சியைக் கைவிட்டதற்கு என்ன காரணம் என்பதைப் பின்னால் ஆராயலாம்.

பவபூதி என்னும் வடமொழிக் கவிஞர் ''உத்தரராம சரிதம்'' என்று ஒரு காவியம் இயற்றியிருக்கிறார். அதில் வருகிற ஒரு நிகழ்ச்சி—வசிட்டர் என்னும் ஆரியமுனி, தவக் குடில் (ஆசிரமம்) ஒன்றில் விருந்து அயின்றதும், அவ்விருந்தின் போது கொழுத்த ஆன்கன்று ஒன்று அடிக்கப்பட்டதும் தெரிவிக்கிறது. மகேந்திர வர்மன் என்கிற பல்லவ மன்னன் எழுதிய ''மத்த விலாசப் பிரகசனம்'' என்னும் சமஸ்கிருத நாடகத்திலும் இதுபோன்ற இன்னொரு நிகழ்ச்சி சொல்லப் படுகிறது. காபாலிக மதத்தைச் சாரந்த ஒரு சமயவினைஞன் (Priest) இந்நாடகத்தின் மையம் புதல்வனாகக் காட்சியளிக்கிறான். காபாலிக மதத்தைப் பின்பற்றும் இவன் ஓர் கபாலம் அல்லது மண்டையோட்டைப் பிச்சைப் பாத்திரமாக எடுத்துக் கொண்டு ஊர்சுற்றுகிறான். பக்தர்கள் இடும் புலாலை இவன் உணவாகக் கொள்கிறான். பிறகு ஒரு சமயம், கள் குடிப்பதற்கு ஒரு மதுக்கடையை அடையும் இவன், மறதியால், தன் பிச்சைப் பாத்திரத்தை அங்கே வைத்துவிட்டு அகல்கிறான் காபாலிகச் சமயவினைஞர் எப்போதும் தம் மனைவிமாருடனே இருப்பர். அங்ஙனமே நம் காபாலிகனும், மனைவியும் தானும் நன்றாக குடித்துவிட்டுக் காஞ்சிபுரத்தின் அங்காடி வீதியில் ஆடிப் பாடிக் கொட்டமடிக்கின்றனர். சிறிது நேரங்கழிந்ததும் காபாலிகனுக்குத் தெளிவு பிறக்கிறது. தன் மண்டையோடு காணாமற் போனதை அப்போதுதான் அவன் உணர்கிறான். மண்டையோடில்லாமல் காபாலிக விரதத்தை அவன் ஆற்றமுடியாது. அவன் மனைவி 'ஒருவேளை பிச்சைப் பாத்திரம் மதுக்கடையில் விடப்பட்டிருக்குமோ' என்று நினைவுறுத்துகிறாள். இருவரும் மதுக்கடையை நோக்கித் திரும்புகின்றனர். வழியில் ஒரு பௌத்தத்

துறவி இவர்களை எதிர்ப்படுகிறான் அவனும் தன் கையில் ஒரு பிச்சைப் பாத்திரம் வைத்திருக்கிறான். பௌத்த மத இல்லறத் தார் அவனுக்கு அதில் பிச்சையிடுவது வழக்கம். கபாலிகன் இந்தப் பௌத்தத் துறவிதான் தன் பிச்சைப் பாத்திரத்தை எடுத்திருப்பான் என்று ஐயுறுகிறான். இதனால் இருவருக்கும் சச்சரவு நடக்கிறது. இதில் காபாலிகன் கீழே விழுகிறான். பௌத்தத் துறவி அவன் கையைப் பிடித்துத் தூக்கிவிடுகிறான். பிறகு இருவரும் அமைதி யடைந்து, மூவரும் குடித்துவிட்டுக் கூத்தடிக்கின்றனர். குடித்து விட்டு ஆடும்போது, காபாலிக சமய வினைஞன், தன்னுடைய மதத்தின் சிறப்பைப் புகழ்வதன் மூலம் ஜைன மதத்தின் சிறப்பை இகழ்கிறான். 'இறைச்சி, மது, மங்கை— இம்மூன்றும்தாம் ஒரு மனிதனைத் துறக்கத்திற்கு அழைத்துச்செல்லும் வழிகள். இறைச்சியை உண்ணுதலும், மதுவை அருந்துதலும், மங்கை யைக் கூடுதலும் இவ்வுலகத்தைத் துறக்கமாக மாற்றுகின்றன. இதை அறியாத ஜைனர்கள் மறுவுலகத்தைப் பற்றியும், அதை அடைய இறைச்சி, மது, மங்கை-ஆகியவற்றைத் துறக்கவேண்டிய தன் அவசியத்தைப் பற்றியும் பேசுகின்றனர். இன்னோர். உல கத்தை நம்பி இந்த உலகத்தின் இன்பத்தைத் துறப்பவர்கள் மடையர்களாகத்தான் இருக்கவேண்டும், என்று காபாலிகன் கூவிக்கொண்டிருக்கும்போது, ஒரு பைத்தியக்காரன் மண்டை யோட்டைக் கவ்விக்கொண்டு வரும் ஒரு நாயைத் துரத்திக் கொண்டு வருகிறான். இதனால் மூவரும் விழித்துக்கொள் கின்றனர். காபாலிகன் தன் பிச்சைப் பாத்திரத்தைத் திரும்பப் பெறுகிறான். எல்லோரும் தம்தம் சமயத்தைப் பின்பற்றி நண்பர் களாகப் பிரிந்து செல்கின்றனர். இந்த வேடிக்கை நாடகத்தி லிருந்து, ஜைன மதத்துக்கு நேர்மாறானது காபாலிக மதம் என்பது தெரியவருகிறது. ஜைன மதம் வெறுத்தொதுக்கும் புலால் உண்ணல், கள் குடித்தல், காமத்தில் திளைத்தல் போன்ற ஒழுக்கங் கள் காபாலிகரால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

வேதம் புகட்டும் விலங்குக்கொடையை (Animal sacrafice) பௌத்த மதமும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், புலால் உண்ணுதலை அவர்கள் விலக்கவில்லை. அவர்கள் தங்கள் கையால் விலங்குகளைக் கொல்வதுதான் பாவம் என்று நினைத்தனர்; இறைச்சிக் கடைக்காரன் கொன்ற விலங்குகளின் புலாலை உண் பதில் ஒன்றும் தவறில்லை என்பது அவர்களின் வாதம். இந்தப் பழக்கம் பௌத்தர்களிடத்தில் கோதம புத்தர் காலத்திலிருந்தே இருந்துவருகிறது. புத்தர் காலத்தில் வாழ்ந்த பண்டகர்களும் வேளிர்களும் (Merchants & princes), கோதமரையும் அவருடைய கீழ்ப்படிவாளர்களையும் (Disciples) அழைத்து விருந்துகள்

வைப்பது வழக்கம்; அவ்விருந்துகளில் இறைச்சி உணவு தாராள மாகப் படைக்கப்படும் அவர்களும் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்று உண்பர். பௌத்தப் பனுவல்கள் (Buddhist Scriptures) இவற்றை ஒளிக்காமல் தெரிவிக்கின்றன. இது பல நூற்றாண்டுகளாகப் பௌத்தர்கள் கடைப்பிடித்துவரும் பழக்கம். இப்போதும் இலங்கை யிலும் பர்மாவிலும் பௌத்தத் துறவிகள் சளைக்காமல் இறைச்சி புசிக்கிறார்கள். துறவிகளே புசிக்கும் போது, பௌத்தப் பொது மக்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை ஆனால், ஜைனர் களோ இதற்கு அடியோடு மாறுபட்டவர்கள். ஜைனர்களின் சிறப்பியல்பே புலால் உண்ணாமை என்று சொல்லிவிடலாம். இந்தப் பண்பு மற்ற மதத்தினரிலிருந்து ஜைனர்களை நன்றாகப் பிரித்துக் காட்டுகிறது.

மனு போதாயனர் முதலிய வேதவாதிகளின் அறநூல் களினின்று (Dharma Sastras) உணவுக் கலையைப் பற்றிப் பல விடயங்கள் நமக்குத் தெரியவருகின்றன. போதாயனர் என்பவர், தன்னுடைய 'தரும சூத்திரத்தில்' ஆரிய மக்கள் விருந்தாளிகளை ஓம்பும் முறைகளை எடுத்துப்பேசுகிறார். அவருடைய நூலின் 'மதுபர்க்கம்' என்கிற அத்தியாயத்தில், விருந்தாளிகளுக்குப் படைப்பதற்குத் தகுதியுள்ளவை என்று பசு மாட்டிலிருந்து இருபத்தைந்து, இருபத்தாறு விலங்குகள் வரிசைப்படுத்திக் கூறப் படுகின்றன, வருகிற விருந்தாளி மிகப் பெரியவராய் இருந்தால், இங்கே சொல்லப்பட்ட இருபத்தாறு விலங்குகளையும் அடித்துச் சமையல் தயாரிக்க வேண்டும். விருந்தாளி சாதாரணமானவராக இருந்தால், இதில் சில விலங்குகளைக் குறைத்துக்கொள்ளலாம். வேத மத தரும சாத்திரங்களின் இன்னொரு முக்கியக் கூறு, அவை வேளாண்மைத் தொழிலுக்குச் சமுதாயத்தில் கொடுத்திருக்கும் இடமாகும். வேளாண்மை மிகுதியும் இழிவான ஒரு தொழில் என்றும், அந்தத் தொழிலைப் புரிவதற்குத் தகுதியுள்ளவர்கள் சமூகத்தின் நான்காவது வருணத்தவரான சூத்திரர்களே என்றும் அவை கூறுகின்றன. சமூகத்தின் தலை வருணத்தவரான சமய வினைஞர் (Priests) கலப்பையைத் தொடுதலுமாகாது என்பது ஆரிய தருமம் ஆனால், அன்று தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்களோ வேளாண்மையையே (Agriculture) தம் தொழிலாகக் கொண்டிருந்தனர். மேலும், அவர்கள் இடபதேவரின் வழி முறையைப் பின்பற்றிவந்ததால் விலங்குக் கொடையையும் புலால் உணவையும் ஒதுக்கிவந்தார்கள். மற்ற மக்களைவிடச் சமண மதத்தைத் தழுவியவர்கள் தங்கள் ஒழுக்கங்களில் மிகக் கண்டிப்பாக இருந்தனர். இத்தகைய பல மக்கள் கலந்து வாழ்ந்த ஒரு சமுதாயத்தில்தான் திருக்குறள் எழுந்தது.

# வெளிநாடுகளில் கொல்லாமை பரவிய விதம்

உறுகண் மறுப்பை மையக் குறிக்கோளாகக் கொண்ட இடப தேவர் வழிமுறையைச் ஜைன சமயத்தின் குரவர்களான தீர்த்தங் கரர்கள் என்னும் முனைவர்கள் தம்தம் காலங்களில் புதுப்பித்து வந் தனர். இவர்களில் இருபத்துநான்காவது முனைவர்தாம் மகாவீரர் என்பவர். சில காலத்துக்குமுன் ஜைன இலக்கியங்களை நன்கு கற்காத சில கீழ்த்திசை அறிஞர்கள், ஜைனசமயம் என்பது பௌத்த, இந்து சமயங்களின் ஒரு கிளை என்று கருதினா. ஆனால், ஏமான் யாகோபி (Dr. Hermann Jacobi) என்னும் ஜெர்மன் அறிஞர் புரிந்த ஆராய்ச்சிகளுக்குப் பின்னர் இக்கருத்தை இப்போது யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. மகாவீரருக்கு இரு நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்திருந்த பார்சுவநாதர் என்னும் முனைவர் ஒரு சரித்திரப் புதல்வர் தாம் என்று தற்போது எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். கி.மு. 800-ல வாழ்ந்த பார்சுவநாதர் தம் காலத்தில் கொல்லாமை அறத்தை ஓம்பி வளர்த்தார். இவருடைய தொண்டுகள் மகாவீரர் காலத்தில் மிகுதியும் துணையாயிருந்தன. இதிலிருந்து, மகாவீரர் காலத்துக்கு முன்பே கொல்லாமை வழிமுறை (Ahimsa cult) யும் காய்கறி புசிப்புமுறை (Vegetarianism) யும் வழக்கில் இருந்தன என்பது புலனாகிறது. ஏன் கோதமபுத்தர்கூட இச்சமண மரபின் ஓர் உறுப்பினராக இருந்திருக்கிறார் என்றார் "மததிம நிகாயம்" என்னும் நூலின் பகுதி ஒன்றிலிருந்து அறியலாம. "மத்திம நிகாயம்" என்பது புத்தர் தம் மாணவர்களுக்குச் செய்த அறிவுரை களின் ஒரு தொகுப்பாகும். அதில் அவர் கூறுகிறார் :

"சாரிபுத்தனே கேட்பாயாக! நான் நோன்பு நோற்றுக் கடுந் தவம் புரிந்துவந்த நாள்களில் உணவுக்காக வெளியே போவது வழக்கம். அப்போது நான் எந்தவித உடையையும் அணி வதில்லை. உணவு அருந்துவதற்கென்று கலங்கள் எதுவும் நான எடுத்துச்செல்வதில்லை. எனக்கு அளிக்கப்படும் உணவை அங் கைகளில் வாங்கி நக்கி உண்பதே என் வழக்கம். போற்றுதற் குரிய பெருமானே, எழுந்தருளவேண்டும! எங்கள் இல்லத்தில் தங்கியருளவேண்டும். என்று அழைக்கும் எவர் அழைப்பையும் நான் ஏற்றுக்கொள்வதில்லை. என்னுடைய இடத்துக்குக் கொண்டுவரப்பட்ட உணவையோ, எனக்காகத் தனிப்படையாகத் தயாரிக்கப்பட்ட உணவையோ நான் அருந்துவதில்லை. விருந்து களுக்கும் நான் போவதில்லை. கலங்களில பரிமாறப்படும் உண வும் எனக்குப் பிடித்தமுடையது அலல. எங்கும் வீடுகளின் வாயிற் படியைத் தாண்டி நான் உணவு ஏற்பதில்லை. சக்கரத்தின் வழி

யாகவும், கதிர் அடிக்கும் இடத்திலும் கொடுக்கப்படும் உணவும் எனக்குப் பிடிக்காது. இரண்டு பேர் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது நான் அங்குச்சென்று உணவு கேட்கமாட்டேன். கருவுற்ற மங்கை, குழந்தைக்குப் பால் புகட்டும் மங்கை, ஆடவனோடு முயங்கிக்கொண்டிருக்கும் மங்கை-ஆகியோரிடமிருந்தும் நான் உணவு பெறுவதில்லை. அங்கும் இங்கும் சிதறிய உணவும், நாய்கள் மிசைந்த உணவும ஈ மொய்க்கும் உணவும், மீனும் இறைச்சியும கலந்த உணவும் நான் தீண்டுவதில்லை. நொதித்த மதுவோ, வடித்த மதுவோ என்னை அணுகமுடியாது. சிறிது புளித்த கூழைக்கூட நான் குடித்தறியேன்.''

புத்தரின் இவ்வாக்கு அவரும் முதலில் ஓர் ஜைனத் துறவியின் எல்லாக் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடித்தவர் என்பதைக் காட்டு கிறது.

கொல்லாமை வழிமுறையின் தொண்டர்கள் தங்கள் கொள்கை யைப் பரப்ப இந்தியாவைக் கடந்து பல தேசங்களுக்குச் சென்றிருப் பதாகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து பாரசீக நாட்டின் வழி யாக சிரியா தேசம்வரையிலும், சிரியாவிலிருந்து எகிப்து நாடு வரையிலும் தொண்டர்கள் போயிருக்கிறார்கள். அன்று பாரசீக நாட்டில் இருந்துவந்த மைத்திரர் என்னும் வகுப்பினரும், சிரிய நாட்டில் இருந்துவந்த எஸ்ஸேனியர் என்னும் வகுப்பினரும் கொல்லாமைச் சமயத்தை ஏற்றுக்கொண்டார்கள். பாரசீக நாட்டின் பழம்பெரு மதம் யோராட்டிரம (Zoroastrianism) என்பு தாகும். இந்த யோராட்டிரம் பிற்காலத்தில் இரண்டு பிரிவாகப் பிரிநதது. முதல் யோராட்டிர மதம் கி.மு. 600-ல் பிறந்தது; இது மத்திய ஆசியாவில் இருந்த தொன்மை ஆரியர்களால் தோற்றுவிக் கப்பட்டது. இந்த மதத்தின் கோட்பாட்டின்படி, கடவுளுக்கு வழிபாடாற்றவேண்டுமாயின் மக்கள் நூற்றுக் கணக்கான குதிரை களையும், ஆயிரக் கணக்கான பசுக்களையும், பத்தாயிரக் கணக் கான சிறு கால்நடைகளையும் வேள்விமேடையில் காவுகொடுக்க வேண்டும். இரண்டாவது யோராட்டிர மதமோ கி மு. 500-ல் பிறந்தது; இது பாரசீகத்தின் உள்நாட்டு மக்களால் தோற்றுவிக்கப் பட்டது இம்மதத்தின் கோட்பாட்டின்படி, கடவுளுக்கு வழி பாடாடாற்ற எந்தவிதக் கால்நடைகளையும் பலியிடவேண்டிய தில்லை; குருதிப் பெருக்கில்லாத வேள்விமேடையையே இவர்கள் கடவுளுக்கு முற்படுத்தினர். இவர்களுடைய தலையெடுப்பு ஏற்பட்டவுடன், முந்திய யோராட்டிர மதம் மறைந்துவிட்டது. இந்தியாவிலிருந்து சென்ற பார்சுவநாதரின் வழிமுறையாளரே பிந்திய யோராட்டிர மதத்திற்கு அடிகோலியிருக்கவேண்டும் என்று

நமக்குக் கிடைக்கும் சில ஆதாரங்கள் புலப்படுத்துகின்றன. எகிப்து தேசத்தில் உள்ள அலக்ஸாந்திரியா நகரில் அன்று ஆடையற்ற துறவிகள் சிலர் கொல்லாமை அறத்தைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தனர் இஸ்ரேல் நாட்டில் வாழ்ந்த மக்கள் இந்த அம்மணத் துறவிகளின் பிரசாரத்தில் ஈடுபட்டு ஊறுகண் மறுப்பை (கொல்லாமையை) ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. கிரேக்க அறிஞர்கள் இவ்வம்மணத் துறவிகளைத் திகம்பர சமணர்கள் என்று அழைக்கின்றனர். திகம்பரர் என்றால் திக்குகளை ஆடையாகக் கொண்டவர்கள் என்பது பொருள். திகம்பர சமணப் பிரசாரகர்கள், கிறிஸ்து யுகத்திற்கு முன்னர், எகிப்து தேசம்வரை சென்று கொல்லாமை, புலால் உண்ணாமை, மது பருகாமை ஆகிய கொள்கைகளைப் பரப்பியிருக்கிறார்கள் என்பதை இக் கூற்றுகள் வலியுறுத்துகின்றன.

இஸ்ரேல் நாட்டில் வாழ்ந்த எஸ்ஸேனியர் என்கிற கூட்டத்தார் ஊறுகண் மறுப்பைக் கடுமையாகப் பின்பற்றும் துறவிகளாய் இருக்கின்றனர். கிறிஸ்துவ மதத் தோற்றகரான ஏசுகிறிஸ்து பிறப்பதற்குமுன் பாலஸ்தீன நகரில் இந்த எஸ்ஸேனியர்களே வலிமை வாய்ந்தவர்களாக இருந்தனர். தீக்கையாளர் யோவான் (John the Baptist) என்கிற ஆசிரிய-முனிவரும் எஸ்ஸேனிய வழிமுறையைச் சேர்ந்தவரே ஆவா. துறவி என்கிற முறையில் யோவான் மிகக் கண்டிப்பானவராக இருந்தார்; புலாலையும் மதுவையும் இவர் தீண்டியதே இல்லை. இந்தியக் கொல்லாமையாளர்கள் செய்த அறிவுரைகளின பயனாக பாலஸ்தீனத்தைச் சார்ந்த எஸ்ஸேனியர்கள், வைதிக யூதர்கள் பின்பற்றிய இனவேறு பாட்டுக் கொள்கையை (Racial discrimination)ப் புறக்கணித்தனர். யூதர்கள், தங்கள் இனத்தை உயர்வு படுத்திக்கொள்ள மனிதருக்குள் வேற்றுமையைப் புகுத்தினர். உயர்ந்த இனத்தினர் யாவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளத் தங்கள் குறிகளில் உள்ள நுனித்தோலை நீக்கிவிட வேண்டும் (Cricumcision) என்று ஒரு வழக்கத்தை அவர்கள் உண்டாக்கினர். இதனைத் தீக்கையாளர் யோவான் கடுமையாக எதிர்த்தார். சமயததுறையில் மனிதருக்குளளே ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது என்றும, எல்லா மனிதரும இறைவனை அடையத் தகுதியுள்ளவர்கள் என்றும், இறைவனை அடையப் புலாலை மறுப்பதும் மதுவை விலக்குவதும்தாம் சிறிய வழிகள் என்றும், மனத்தூய்மையுற்றவர்கள் விரைவில் இறைவன் அடியார்களாவர் என்றும, இம்மனத்தூய்மை எய்த விருபபுபவர்கள் ஒரு வகையான தூய நீரில மூழ்கி எழுந்தால் போதும என்றும், அந் நீராட்டு முறைக்கே தீக்கை (Baptism) என்று பெயர் என்றும்

யோவான் அறிவுறுத்தினார். இதனால்தான் இவருக்குத் தீக்கை யாளர் யோவான் என்ற பெயர் உண்டாயிற்று.

ஏசுநாதர் கிறிஸ்தவ மதத்தைப் போதிப்பதற்கு முன்பு யோவானிடத்தில் தீக்கை பெற்றார். யோவானிடத்தில் தீக்கை பெறுபவர்கள் புலாலையும் மதுவையும் விலக்கிவிட்டுத்தான் ஞானக்குளியல் செய்துகொள்ளமுடியும். ஏசுநாதரும் இதன்படி கொல்லாமை நெறியை ஏற்றுக்கொண்டார் என்றே நினைக்க வேண்டியுள்ளது. வைதிக யூத மதம் தன்மையக் கொள்கையாகக் கொண்ட இனவேறுபாட்டை ஏசுநாதரும் வன்மையாகக் கண்டித் தார். யூதர்களின் சடங்குகளும் விலங்குக்கொடையும் அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தீக்கையாளர் யோவானின் கருத்துகளும், எஸ்ஸ்ஸனியத் துறவிகளின் போதனைகளும் ஏசுநாதரைப் பெரிதும் ஆட்கொண்டன. இங்ஙனம், இத்தியாவின் சமண நெறி, கி.மு. 600ல், சிரிய, பாலஸதீன நாடுகளையும் கடந்து சென்றது என்று நாம் அறிகிறோம்.

கிரேக்க நாட்டில் சாக்கிரடிஸ் என்னும் தத்துவஞானி பிறப் பதற்கு முன்பு கி.மு. 532 ல் பித்தகாரஸ (Philosopher) தோன்றி யிருந்தார். ''அன்றைய உலகத்தின் சிந்தனைத் துறையில் பித்தகாரஸைப்போல ஓர் அறிவாளி வேறெவரும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம் உண்டு. இன்று உலகம் போற்றும் பிளாத்தோவின் சித்தாந்தம் (Platonism) என்கிற தத்துவத்தை ஆராய்ந்து பார்த்தால், கடைசி யில் அது பித்தகாரஸ் சித்தாந்தத்தின் சாரமாகவே காணப்படு கிறது. இன்று நாம் பேசும் புலன்களுக்கு அப்பாற்பட்டு அறிவுக்கு மட்டும் துலங்கும் அழியாப்புவனம் என்கிற தத்துவமே பித்தகார ஸிடமிருந்து வந்ததுதான். இல்லாவிட்டால், ஏசுநாதருக்குக் கிறிஸ்துவர்களிடையே இத்தனை மதிப்பு ஏற்பட்டிராது. இவர் பிறந்திராவிட்டால், கடவுள், அமரத்துவம்-என்கிற பொருள் களைத் தருக்கமுறைப்படி மெய்ப்பிக்கும் முயற்சிகளில் சமயவாதி கள் ஈடுபட்டிருக்கவும் முடியாது'' என்று பெட்ரண்டு ரஸ்ஸல் என்னும் தற்கால ஆங்கிலத் தத்துவப் புலவர், ''ஐரோப்பிய மெய் யுணர்வுக் கலையின் வரலாறு'' என்னும் தம் நூலில் கூறுகிறார். பித்தகாரஸ் பல துறைகளில் புலமை வாய்ந்தவராக விளங்கினார். கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் அவர் சிறந்த விற்பன்னர். இவர் யாவறறையும்விட் அவர் நல்ல ஒரு சமய- சித்தாந்தி என்பதுதான் முக்கியமானதாகும. அவருடைய சமய சித்தாந்தம் நாம் கவனிப்பதற்குரியது. ''உலகத்தில் இருக்கும் எல்லாப் பிறவிகளிடத்திலும் ஆன்மா (Soul) என்கிற ஒரு பொருள்

உண்டு. ஆன்மா என்பது என்றும் அழியாதது. ஆன்மா பல பிறப்புகள் எடுக்க வல்லது. ஒரு பிறவிக்கு (Being)த் தற்போதைய உருவத்தில் இல்லாத பண்புகள் அப்பிறவியின் அடுத்த உருவத்தில் ஏற்படலாம். இங்ஙனம் உயிர்கள் பிறப்புச் சக்கரத்தில் சுழன்ற வண்ணம் இருக்கின்றன. எனவே, உயிருள்ள பிறவிகளுக்குள்ளே ஏற்றத்தாழ்வு கிடையாது. எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்வதே மனிதனின் கடமை'' என்று பித்தகாரஸ் போதித்து வந்தார். இவருடைய போதனைக்கும் சமணரின் அன்புநெறிக்கும் அதிக வேற்றுமையில்லை அல்லவா? இதுமட்டுமல்லாமல், இவர் தம் மாணவர்கள் இறைச்சியையும் மதுவையும் விலக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆனால், தீவினைவசமாகப் பித்தகாரஸின் கொள்கைகள் பிற்காலத்தில் அதிக ஆதரவு பெற வில்லை. அதனோடு, பிற்காலக் கிரேக்க எழுத்தாளர்கள் பித்த காரஸை ஏளனத்துக்குரியவராகவும் ஆக்கினார்கள். கி.மு.4ஆவது நூற்றாண்டில் எழுந்த ஒரு வேடிக்கை நாடகம் பித்தகாரஸின் சமயக் கொள்கைகளை நையாண்டி செய்தது. பித்தகாரஸைப் பின்பற்றியவர்கள் காய்கறி புசிக்கும் பிறவிகள் என்று எள்ளப் பட்டனர். இந்நிகழ்ச்சிகள், பித்தகாரஸ் சித்தாந்தமும் எஸ்ஸேனிய சித்தாந்தமும் இந்திய அன்புவழிச் சித்தாந்தத்தால் விளைந்தவை என்பதைத்தான் காட்டுகின்றன. கிறிஸ்துவ மதமும் இதற்கு விலக்கல்ல என்பதில் ஐயம் ஒன்றுமில்லை.

## ஜைன சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள்

இனி, கொல்லாமைச் சமயமான ஜைன சமயத்தின் அடிப் படைக் கொள்கைகள் என்ன என்பதை இங்கே சிறிது கவனிப் போம். கொல்லாமை என்கிற பண்பு அனைத்துயிர்க் காதலை (Universal love)க் கடைகாலாகக் கொண்டது. அனைத்துயிரை யும் காதலிக்கும் அல்லது அன்பு செய்யும் ஒருவன் ஓர் உயிருக்கும் இன்னோர் உயிருக்கும் இருக்கும் ஒருவகைப் பிணைப்பை உணர வேண்டும். உலகத்தில் வாழும் பலவகை உயிர்ப்-பொருள்கள் (Living organisms) தம்முள்ளே சில பொதுவான சிறப்பியல்பு களைக் கொண்டு விளங்குகின்றன. ஜைனச் சிந்தனையாளர்கள் (Jaina Thinkers), உலகத்தில் இருக்கும் உயிர்ப்-பொருள்கள் அனைத்தையும், அவைகள் இயற்கையில் பெற்றிருக்கும் புல னுறுப்புகளுக்கு (Sense organs) ஏற்பப் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். உயிர்ப்பொருள்-உலகத்தின் கடைசிப் படியில் இருப்பது தாவரப் பிரிவாகும். மரஞ்செடிகொடிகளான தாவரத்திற்குத் தொட்டுணர்வு அல்லது உறுகைப் புலன் (Sense of contact or touch) ஒன்றுதான் உண்டு, இவ் ஒற்றைப் புலன்

உயிர்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குப் பெயர முடியாது. எனவேதான், இவற்றிற்குத் தாவரம் அல்லது நிலைத்திணை என்று பெயர்வந்தது. நிலைத்திணைக்கு அடுத்த படியில் இருப்பது இரட்டைப் புலன் உயிர்கள். இவைகளுக்குத் தொட்டுணர்வு, சுவையுணர்வு ஆகிய இருபுலன்கள் உண்டு. இவை இடம்விட்டு இடம் பெயரும் சக்தி வாய்ந்தவை. மண்புழு போன்ற பூச்சிவகைகள் இந்தப் பிரிவில் அடங்கும். அடுத்த படியில் உறுகை, சுவை, முகர்ச்சி-ஆகிய மூன்று புலன்களையுடைய சிறுபிறவிகள் வருகின்றன. இதற்கு மேற்படியில் மூன்று புலன் களோடு பார்வையும் உடைய நாற்புலன் உயிர்களான சிறுவிலங்கு கள் இடம் பெறுகின்றன. இதற்குமேல் நான்கு புலன்களோடு கேள்வி யுணர்வு படைத்த பெருவிலங்குகள் உள்ளன. இவ் ஐம்புலன் உயிர்களுக்கு அப்புறந்தான் மனத்துணர்வை (Mind sense)ச் சிறப்பாகப் பெற்ற மனிதன் வருகிறான். ஆக, மனிதன் ஆறு புலன்களையும் முழுமையாகப் பெற்ற ஓர் உயிர்ப்பொருளாக விளங்குகிறான்.

மேற்சொன்ன உயிர்ப்பொருள்களின் பகுப்பு உயிரிகளின் புலனுறுப்புப் படிமவளர்ச்சியை (Evolution of the sense organs) அடிமட்டமாகக் கொண்டு செய்யப்படுகிறது. இப்பகுப்புமுறை அனைத்துயிர்களின் இறுதிப் பிணைப்பை வலியுறுத்துகிறது. உயிர் கள் தங்களுடைய வளர்ச்சிநிலைக்கு ஏற்பச் சூழ்நிலையின் தாக்கு தல்களைச் சமாளிக்கின்றன. இன்பதுன்ப உணர்வுகளை எல்லா உயிர்களும் தங்கள் சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டுத்தான் வெளியிடு கின்றன. ஆனால், மனிதன்மட்டும் சூழ்நிலையின் தற்கால நிலைமைகளுக்கு அடிமைப்பட்டுவிடுவதில்லை. மனிதனால் இறந்த காலத்தைப் பற்றிச் சிந்தித்து, எதிர்காலத்தில் தான் விரும்பும் செயலை ஆற்றமுடியும். இந்த இறந்தகால-எதிர்கால உணர்வுதான் மனிதனைத் தன் நிகழ்கால நிலையிலிருந்து விடு படச்செய்து, எதிர்காலத்தில் ஒரு குறிக்கோளோடும் ஒழுங்கோடும் அவன் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள உதவுகிறது. இதனாலேயே மனிதன், உயிர்ப்-பொருள் உலகத்தின் தலைப்படி யில் உலவுகிறான். எல்லா உயிர்களும் உயிர் வாழ வேண்டு மாயின், அவைகள் தம்தம் சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டுத் தான் உயிர்வாழவேண்டும்; ஆனால், மனிதன் தன் சூழ்நிலையி லிருந்து விலகுவதோடு, அதனைத் தன் விருப்பப்படி மாற்றி யமைத்துக்கொள்ளவும் சக்தியுள்ளவனாக இருக்கிறான். இந்தச் சக்தி அவன் ஒரு புதிய சூழ்நிலையைப் படைத்துக் கொண்டு அமைதியாக வாழவும் துணைபுரிகிறது. சுருங்கச் சொன்னால், மனிதன் தன் வாழ்க்கையைத் தானே உருவாக்கிக்கொள்ள முடி

கிறது; ஆனால், மற்ற உயிர்களோ இயற்கைச் சக்திகளுக்கு அடங்கியே தம் வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது மனித னுக்கு உள்ள இந்தத் தனித்திறன், அவனைத் தனக்கும் மற்ற உயிர்களுக்கும் இருக்கும் தொடர்பைப் பற்றிச் சிந்திக்கச் செய் கிறது. இந்தச் சிந்தனைதான் மனிதன் உள்ளத்தில் சமய வுணர்வை எழுப்பி, உயிர்ப்பிறவிகள் யாவற்றையும் நேசிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறது. இதன் விளைவு, ஏதாவது ஓர் உயிர் ஆபத்தில் சிக்கும்போது அதனை உடனே சென்று காக்கும் பரிவாக மாறுகிறது. உயிர்களிடத்தில் காட்டப் படும் இப்பரிவும் நேசமும் உலகத்தில் பிறந்த எல்லா உயிர்களும் ஓர் ஒற்றுமையுடையன என்கிற தத்துவத்தை மனிதர்களுக்குப் புகட்டுகின்றன.

## ஜைன வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோள்

மனித வாழ்க்கையின் இறுதி நோக்கம் மோட்சம் அல்லது விடுதலையை அடைவதுதான் என்று ஜைன சமயம் வற்புறுத்து கிறது உபநிடத காலத்துக்குப் பின்பு தோன்றிய இந்தியச் சிந்தனைமுறைகள் (System of Indian thonghts) யாவும் இந்த நோக்கத்தை ஒப்புக்கொள்கின்றன. விடுதலையைப் பற்றிச் சிந்திக்கும்போது, அதற்குமுன் மனிதன் உலகத் தளைகளில் கட்டுண்டிருக்கும் நிலையைக் குறித்துச் சிறிது உணரவேண்டும். எல்லா உயிர்ப்பிறவிகளும் (Living beings) அவற்றுக்குரிய ஒழுங் கான அமைப்புடைய யாக்கையில் பொருந்தியிருக்கின்றன: யாக்கை, ஆவி அல்லது ஆன்மா என்னும் ஓர் நுண்பொருளால் இயக்கப்படுகிறது. ஆவி அல்லது ஆன்மாவின் உறைவிடமாக யாக்கை கருதப்படுகிறது. இங்ஙனம் ஓர் ஆன்மா ஓர் யாக்கையில் பொருந்தி வாழ்வது அவ்வான்மா செய்த வினையின் விளைவு என்று ஜைன மதம் கூறுகிறது. ஆன்மா என்பது அதனுடைய தூய நிலையில் வேறெந்தப் பொருளோடும் பொருந்தி விளங்க வேண்டிய அவசியமில்லை. பட்டுப்புழு தன் செய்கையாலேயே தன்னைச் சுற்றி ஒரு கூடு பின்னிக்கொள்வதுபோல, ஆன்மா தான் இயற்றும் வினைகளில் விளைவால் தன்னைச் சுற்றி ஓர் யாக்கையை (உடம்பை)ச் சமைத்துக்கொள்கிறது. ஆன்மாவின் இந்த யாக்கைச் சேர்க்கையே அதனைப் பிறப்பு, முதுமை, இறப்பு-ஆகிய உலகியல் நிலைகளுக்கு ஆட்படுத்துகிறது. தோற்றம். மறைவு போன்ற இந்நிலைகள் யாக்கையைச் சார்ந்த சிறப்பியல்பு களே தவிர ஆன்மாவைச் சார்ந்த சிறப்பியல்புகள் அல்ல. ஆன்மா, யாக்கையின் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது; மனிதனின் இறுதி வடிவம் ஆன்மாதான், மனிதன், தன் வாழ்நாளில் இன்ப

துன்பங்களெல்லாம் அநுபவித்தபிறகு, பிறப்பு முதுமை இறப்பு-ஆகிய இம் மூந்நிலைகளும் இல்லாத ஒரு வாழ்க்கையை விரும்புகிறான். பிறப்பு முதுமை இறப்பு-இவை சாராத வாழ்க்கை. ஆன்மா எல்லாவித யாக்கையையும் விட்டுப் பிரிந்து அமரத்துவம் பெற்ற தூய நிலையில்தான் இயலக்கூடியது. இந்நிலையை ஒரு மனிதன் அடைந்துவிட்டால், அவன் திரும்பவும் உலகத்துக்கு வந்து பிறப்புகள் எடுக்கவேண்டியதில்லை. எனவேதான், உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுடைய சமய நோக்கமும் இகத்திலிருந்து பரத்தை அடைவதாக உள்ளது.

சமய வாழ்க்கை என்பது இகவாழ்க்கையிலிருந்து பர வாழ்க்கைக்குச் செல்லும் முயற்சியேயன்றி வேறல்ல. இகத்திலிருந்து பரத்திற்குச் செல்ல இவ்வுலகில் உள்ள வழியாது? ஜைனச் சிந்தனையாளர்கள் இதற்கு மூன்று தன்மைகளைக் கொண்ட ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடக்கை (Right faith, Right Knowcledge & Right conduct) என்கிற இம்மூன்று தன்மைகளும் சேர்ந்த வாழ்வுதான் பரம் அல்லது முத்தியை (Moktsha or Salvation) அடையும் வழி என்பது ஜைனர்களின் கோட்பாடு. இக்கோட்பாடு ஜைன மதத்தை மற்ற மதங்களினின்று பிரித்துக் காட்டுகிறது. அது எங்ஙனம் என்பதை இப்போது கவனிப்போம். எல்லா மதங்களும், பிறப்பு முதுமை இறப்பு-ஆகிய தன்மைகளைக் கொண்ட ஒரு வாழ்வு சமய நோக்கில் நல்வாழ்வாகாது என்றும், இதனால் மனிதன் அத்தகைய வாழ்விலிருந்து அகலவேண்டும் என்றும் தாம் போதனை புரிகின்றன. ஆனால், இத்தகைய வாழ்விலிருந்து அகல்வதற்கு அவை கூறும் வழிகள்மட்டும் வேறு வேறாக இருக்கின்றன. சமணம் கூறும் வழியை விளக்க வேண்டுமானால் ஓர் உதாரணம் கூறி விளக்கலாம். ஒரு மனிதன் தனக்குப் பற்றியுள்ள நோயைத் தீர்த்துக்கொள்ள வேணடுமாயின், அவன் ஒரு தகுதியுள்ள மருத்துவரை நாட வேண்டும். அவனுடைய நோய் நீங்குவதற்கு மூன்று தன்மைகள், இன்றியமையாதவை. ஒன்று, அவனுக்கு மருத்துவரிடம் முழு நம்பிக்கை இருக்கவேண்டும். இரண்டாவது, மருத்துவர் கொடுக்கும் மருந்து என்ன என்பதை அவன் அறிந்துகொள்ளவேண்டும். மூன்றாவது, கொடுக்கும் மருந்தை ஒழுங்காக அவன் உட்கொள்ளவேண்டும். இம்மூன்று தன்மைகளையும் கடைப்பிடித்தாலொழிய நோய் நீங்காது. மருத்துவரிடம் வெறும் நம்பிக்கை வைத்தால்மட்டும் நோய் குணமாகாது; மருந்தின் தன்மையை அறிந்துகொண்டாலும் நோய் தீராது; அறிந்துகொண்ட மருந்தை மருத்துவர் கூறியபடி அருந்தினால்தான் நோய் முழுவதும் அகலும். இதுபோலவே ஆன்மா முத்தியடைய

சில மதங்கள், நம்பிக்கை இருந்தால் போதும் என்கின்றன; சில மதங்கள், உண்மையறிவுமட்டும் இருந்தால் போதும் என்கின்றன; இன்னும் சில மதங்கள், நன்னடக்கையே அதற்குரிய வழி என் கின்றன. ஆனால், ஜைன மதமோ நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடக்கை-இம்மூன்றின் சேர்க்கைதான் முத்திக்கு வழி என்று புகல்கிறது,

முத்திக்கு வகுக்கும் வழியைக் குறித்து நாம் புகன்ற தன்மை களில் 'நல்' என்ற அடைமொழி முக்கியமானதாகும் நன்னம் பிக்கை. நல்லறிவு, நன்னடக்கை-இச்சொற்களைத் திரும்பவும் சொல்லிப்பார்க்க வேண்டும். நம்பிக்கை என்பது எதிலாவது நம்பிக்கைவைத்தல் என்ற பொருளைத் தராது. எனவேதான், நன்னம்பிக்கை—சரியான நம்பிக்கை என்று சொல்லப்பட்டிருக் கிறது. இறுதி மெய்ம்மையை (Ultimate reality) அடிப்படையாகக் கொள்ளாத எந்த நம்பிக்கையும் நன்னம்பிக்கையாகாது; அது மூட நம்பிக்கையேயாகும். மூட நம்பிக்கைகள் எல்லாவகையிலும் மனிதனைவிட்டு அகற்றப்படவேண்டும். இறுதி மெய்ம்மையில் மனிதன் கொள்ளும் நம்பிக்கையே நன்னம்பிக்கை எனப்படும்; அதே போன்று நல்லறிவு என்பதில் தவற்றறிவு சிறிதும் சேரலா காது. தவற்றினாலோ மயக்கத்தினாலோ ஏற்படும் அறிவு முத்திக்கு வழிகோலாது. இறுதி மெய்ம்மையைப் பற்றிய சரியான அறிவே நல்லறிவாகும். அதேபோன்று மனம் போன விதத்தில் நடக்கும் நடக்கை நன்னடக்கையாகாது. இறுதி மெய்மைக்கு இழுக்கில்லாத நடக்கையே நன்னடக்கை எனப்படும். இங்ஙனம், மனிதனுடைய செயல்கள் அனைத்தும் முடிவுப் பொருளை மனங் கொண்டே இயங்க வேண்டும். இதில் சிறிது வழு ஏற்பட்டாலும் அடையவேண்டிய இடத்தை நாம் அடையமுடியாது.

## ஜைன சமயத்தில் தெய்விகம்

ஜைன மதத்தில் தெய்விகம் என்கிற தன்மை முத்திக்குரிய வழியை (Moktsha marga) வெளிப்படுத்தும் செயலில் கலந்திருக் கிறது. மனிதகுலத்தின் நலங் கருதி முத்திக்கு வழிகாட்டும் புனிதருக்கு ஆப்தர் அல்லது அணுக்கர் என்று பெயர். இம்மையில் உழலும் எண்ணிறந்த மக்களின்பால் ஏற்படும் அன்பினாலும், கருணையினாலுமே 'அணுக்கர்' மறுமைக்கான பாதையை வெளிப் படுத்துகிறார். மறுமைப் பாதையைக் காட்டும் அணுக்கரின் தெய்விகச் சாயல் (Divine personality) எத்தகையது என்பது குறித்தும், அவர் புரியும் தெய்விகத் தொண்டிற்கு அவர் பெற்றி ருக்கும் தகுதிகள் யாவை என்பது குறித்தும் நாம் சில விடயங்களை

அறியவேண்டும். அணுக்கரைப்போன்ற தொண்டர் முதலில் யாவும் அறிந்தவராக இருக்கவேண்டும்; காலமோ, இடமோ-இவருடைய அறிவைக் கட்டுப்படுத்தலாகாது. இத்தகைய முற்றறிவு (Infinite Knowledge) இவர் புரியும் கடுமையானயோகம் அல்லது உயிரியல் தன்னடக்கத்தின் (Yoga or Spritual discipline) மூலமே கிடைக்கும். யோகத்தின் மூலமும், தூய ஆன்மாவைப் பற்றிய தியானத்தின் மூலமும் இவர், வினைகளால் உண்டாகும் கட்டுகளை அழித்துக்கொள்கிறார். தொண்டரின் தூய தன்மம் (Pure self) வினைகளால் மூடுண்டிருக்கும்வரை, அதனுடைய இயற்கையும் ஒளிர்ச்சியும் மற்றவருக்குப் புலப்படமாட்டா. தவத்தினாலும் மனவொடுக்கத்தினாலும் வினைக்கட்டுகள் அறுமானால், மனிதனின் தன்மம் சுடர்விட்டுத் துலங்கும். இந்தச் சுடர்ச்சிக்குத் தான் முற்றறிவு என்று பெயர் முற்றறிவு பெற்ற தொண்டர் எல்லாம் அறிந்தவராகிறார். அனைத்தறிவாளர்கள் உலகில் அவ்வப் போது அருமையாகத் தோன்றுவர். மங்கிய அறத்தை (தருமத்தை)த் துலக்குவது அவர்கள் கடமையாகும். அறியாமை யால் புலனின்பங்களில் ஆழ்ந்துகிடக்கும் மக்களை ஈடேற்ற அவர்கள் மறுமைக்கு வழிகாட்டுகிறார்கள். குறுகிய தன்னலம் அவர்களை எப்போதும் பற்றாது தான் உயர்வடைந்ததே போதும் என்கிற நிலையில் அவர்கள் ஓய்வுபெற்றுவிடமாட்டார்கள். தம்மைப் போன்ற பிற மக்களையும் தம் நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் அல்லும் பகலும் பாடுபடுகின்றனர்; நாடெங்கும் சென்று மக்களைச் சரியான வழிக்குத் திருப்பி, அறத்தைக் கடைப்பிடிக்கும்படி செய்கின்றனர். இத்தகைய கூட்டத்தில் சேர்ந்த தொண்டரை ஆப்தர் அல்லது அணுக்கர் என்று ஜைனர்கள் வணங்குகிறார்கள்; இவரையே அவர்கள் கடவுளாகவும் கருதுகிறார்கள்.

'முத்திக்கு வழிகாட்டும் தலைவர் யாரோ
வினைமலையைச் சிதைக்கும் வித்தகர் யாரோ
மெய்ம்மை அனைத்தையும் உணர்ந்த மொய்ம்பர் யாரோ
அவரை வணங்குவன் யானே, அன்னார் தன்மைகள்
யான் பெறவே'—

என்று ஒரு மேன்மை வாய்ந்த ஜைன முனிவர் கடவுள் வாழ்த்துப் பாடுகிறார். இறைமைக் கூறு உடையவர்களைத் தீர்த்தங்கரர்கள் அல்லது முனைவர்கள் என்றும் அழைப்பதுண்டு. முனைவர், மக்களுக்குப் போதிக்கவேண்டிய அறத்தைப் போதித்து தம் கடமைகளைச் செவ்வையாக முடித்தபிறகு, பூதவுடலை விட்டு நீங்கிப் புனிதத் தன்மத்தை (Pure self) அடைகிறார், புனிதத் தன்மத்திற்கு மறுபெயர் பரமான்மா என்பது,

பரமான்ம வடிவம் பெற்றவரை நிர்வாணம் பெற்றவர் என்றும் சொல்லலாம். நிர்வாணம் அல்லது மெய்வண்ணம் அடைந்தவர்கள் சித்தர்கள் ஆகிவிடுவர். சித்தரிடம் வினைத் தொடக்கும் கழிமலங் களும் கடுகத்தனையும் காணப்பட மாட்டா. முழுத் தன்மம் (Perfect self) அவருடைய வடிவமாகும்.

இந்தச் சூழ்நிலையில் நமக்கு ஓர் ஐயம் எழுவது இயற்கை. நாம் மேலே கூறிய தெய்வக் கருத்து, மற்றச் சமயத்தினர் வழி படும் கடவுளரைப் போன்றதா என்பதே அந்த ஐயம். புராண இந்து மதம் குற்றங்குறைகள் நிறைந்த சாதாரண மனிதப் பிறவி களையே கடவுள்கள் என்று வரணிக்கிறது. சாதாரண மனிதனுக் குரிய இயல்புகளும் வலியினங்களும் அக்கடவுளிடத்தில் காணப் படுகின்றன. அக்கடவுள்-மனிதன் மனைவி, மக்கள், வைப்புகள்-ஆகியவரோடு வாழ்க்கை நடத்துகிறான்; அவனுக்குக் கோபம் தாபம், விருப்பு வெறுப்பு-யாவும் இருக்கின்றன; அவன் தன் சுற்றம் கேள்களிடம் அளவற்ற பாசங்கொண்டிருக்கிறான். இத் தகைய மனிதனைக் கடவுள் என்று எப்படிக் கொள்ளமுடியும்? ஜைனர்கள் கூறும் கடவுள் தத்துவம் இத்தகையது அன்று. உயிரியல் தூய்மையும் வினையியல் முழுமையும் இல்லாதவர்கள் ஜைன மதத்தில் கடவுள்களாக ஏற்கப்படமாட்டார்கள் இக் கடுமையான கோட்பாடு இந்து மதவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. எனவே, அவர்கள் ஜைனர்களை இறை-மறுப்பாளர்கள் (Atheists) என்றும் சமய-மறுப்பாளர்கள் (Irraligionists) என்றும் தூற்றினர். உண்மையில் பார்க்கப்போனால், சங்கரரும் இராமானுஜரும் மொழிந்த கடவுள் தத்துவத்திற்குச் சமண தத்துவம் அதிக மாறு பாடுடையது அன்று, சங்கருடைய பரப்பிரம்மம் அல்லது பரமான்மா என்பது நிர்வாணத்திற்கு நீண்ட தொலைவில் இல்லை இந்து சிந்தனையாளர்க்கும் ஜைன சிந்தனையாளர்க்கும் உள்ள ஒரே வேறுபாடு இதுவே யாகும். இந்துக்கள் பரமான்மாவைப் பற்றிப் பரக்கப் பேசிக் கொண்டே சாதாரண ஆன்மாக்களுக்கும் தங்கள் கோயில்களில் இடங்கொடுத்துவிடுகிறார்கள்; ஆனால், ஜைனர்களோ அத்தகைய காரியம் உயர்ந்த மனத்தத்துவத்திற்குப் பொருந்தாது என்று விலக்கிவிடுகிறார்கள்.

## ஜைனர்களின் சமுதாய அமைப்பு

ஜைன சமுதாயம் இரண்டு பெரும்பிரிவுகளால் ஆனது; ஒன்று இல்லத்தார் (House-holders), மற்றொன்று துறவிகள் (Ascetics). சமுதாயத்தைப் பொதுவாகத் தாங்குபவர்கள் இல்லத்தாரே ஆவர். இல்லத்தார் பலவகையான தொழில்களில் ஈடுபட்டிருப்பர்; அவர்

களின் முக்கியமான தொழில் வேளாண்மை (Agriculture) ஆகும். எனவே, பொருள் தோற்றுவிப்பும் பகிர்வும் (production & distribution) இல்லத்தாரைச் சார்கிறது. வேளாண்மை, வாணிபம், கைத்தொழில்—ஆகிய துறைகளில் ஈடுபட்டிருப்பதால், இல்லத்தாரே சமுதாயத்தின் பொருளாதார நிலைப்பாட்டுக்குக் காரணமாவர். சமுதாயத்தின் உறுப்புக் குடும்பம் ஆகும். குடும்பத்தை அமைத்துக்கொள்ளுதல் இல்லத்தானின் முதற் கடமையாகும். குடும்பம்-கணவன், மனைவி, குழந்தைகள்-ஆகிய முத்திறத்தாரால் ஆனது. ஆகவே, ஒரு குடும்பம் அமையவேண்டுமானால் மனிதனுக்குத் திருமணம் (Marriage) இன்றியமையாதது. இதனால் சமுதாயத்தில் தொழில் துறையில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வோர் ஆண்மகனும் தனக்குரிய ஓர் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்துகொள்ளவேண்டும். வெற்றிகரமான குடும்ப வாழ்க்கைக்கு மனைவி முக்கியமானவள் ஆவாள். இதனால் இல்லத்தார் பிரிவில் ஆண்கள், பெண்கள் என்கிற இருபாலினரும் இடம்பெறுகின்றனர். ஜைன இல்லக்கிழார்க்குச் சிராவகர்கள் என்றும், ஜைன இல்லக்கிழத்தியர்க்குச் சிராவகிகள் என்றும் பெயர்.

இல்லக்கிழாரையும் இல்லக்கிழத்தியரையும் தவிர்த்துச் ஜைன சமுதாயத்தின் அடுத்த பிரிவில் இருப்பவர்கள் துறவிகள் ஆவர். துறவிகள் என்போர் உலகத்தில் தமக்கு இருக்கும் எல்லாவகைத் தொடர்புகளையும் அறுத்துக்கொண்டவர் எனலாம். அவர்களுக்கு யாதோர் உடைமையும் கிடையாது சொத்தும் செல்வமும் அவர்கள் அறியாதவை. அவர்களுக்குத் தமக்கென்று ஓர் இல்லமும் கிடையாது. மனைவி, மக்களிடம் அவர்களுக்கு ஒருவிதப் பிணைப்பும் இருக்கலாகாது. அவர்கள் புரியவேண்டிய தொழில் தன் வளர்ச்சியும் தன்னடக்கமுமே ஆகும். சமுதாயத்தில் வீடு வாசலற்ற பிரிவினர் துறவிகள்தாம், உயிரியல் தன்னடக்கமே (Sprival discipline) தம் குறிக்கோளாக இருப்பதால், இல்லத்தார் செய்கிற தொழில்களைத் துறவிகள் செய்யக் கூடாது. அவர்கள், தாம் வாழ்வதற்குக் குறிப்பிட்ட இடம் ஒன்றையும் தேடிவைத்துக் கொள்ளக் கூடாது. யாரிடத்திலும் அவர்களுக்குத் தனிப்பட்ட பாசம் இருக்கலாகாது. சுற்றம், கேள் என்று எவரும் அவர்களுக்கு இல்லை. பாரில் உள்ள உயிர்த்தொகுதி யாவற்றையும் அவர்கள் தம் குடும்பமாகக் கருதவேண்டும். அனைத்துலகக் காதலே (Universal love) அவர்களின் அடிப்படைக் கொள்கையாகும். காட்டு விலங்குகளும் வானப் பறவைகளும் துறவிகளின் தோழராவர். இங்ஙனம் யாவற்றையும் துறந்துவிட்ட இம்மக்கட் கூட்டத்தினர் எப்படி உலகில் வாழமுடிகிறது என்று நமக்கு அயிர்வு உண்டாகலாம். இக்கேள்விக்குக் கிடைக்கும் பதிலில்தான் இல்லத்தாரின் கடமை அடங்கியிருக்கிறது.

துறவிகள் இல்லத்தாரின் ஆதரவில் வாழ்கின்றனர். பொதுவாகத் துறவிகள் யாவரும் ,கானகப் பகுதிகளிலோ, மலைச்சரிவுகளிலோ தாம் வாழ்வது வழக்கம். ஏனெனில், அவர்கள் இருக்கும் தாவு ஒருவிதச் சள்ளையும் இல்லாத தனித்தாவாக இருக்க வேண்டும். துறவிகள், தமக்குப் பசியுணர்வு ஏற்படும்போது, தம் தனியகத்தைவிட்டுப் பக்கத்தில் இருக்கும் நகரத்தையோ கிராமத்தையோ அணுகுவர். எந்தத் துறவியும் இல்லத்தார் வீடு எதற்கும் சென்று இரக்க மாட்டார். அவர் தன்பாட்டிற்கு வீதிவழியே சென்றவண்ணம் இருப்பார். இதைக் கண்ட இல்லத்தாரில் ஒருவர் அவருக்கு உணவு படைக்க முன்வருவார். இல்லத்தார் வீட்டில் இருக்கும் சாதாரண உணவைத்தான் துறவி அருந்துவார். இங்ஙனம், பசிப்பிணி தீர்ந்ததும், துறவி தன் தனியகத்துக்குச் சென்றுவிடுவார். யோகமும், தவமும் துறவிகளின் நீங்காக் கடமையாகும். இதனால், துறவிகள் சமுதாயத்திற்கு ஒரு பயனுமில்லாமல் பாரமாக வாழ்கிறார்கள் என்று நினைத்துவிடலாகாது. துறவிகள் சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டு அளப்பரிதாகும். பொருளாதாரத் துறையில் அவர்கள் தொண்டு அதிகம் இல்லாவிட்டாலும். அறிவுத் துறையில் அவர்கள் பணி தலைசிறந்து விளங்குகிறது. இலக்கியம், கலை, தத்துவம்-ஆகிய அறிவுக்கூறுகளை அவர்கள் ஓயாமல் வளர்க்கின்றனர். ஒரு சமுதாயம் வளரப் பொருள் தோற்றுவிப்பும் பகிர்ந்தளிப்பும் மட்டும் இருந்தால் போதாது; அதன் அறிவும் மனமும் நன்றாக வளரவேண்டும். அறிவும் மனமும் சேர்ந்த வளர்ச்சிக்குப் 'பண்பாடு' என்று பெயர். இப்பண்பாடு (Culture) வளர்வதற்கு மூலவித்தாக இருப்பவர்கள் துறவிகளே ஆவர். துறவிகளில் பெண்களும் உண்டு. ஆண் துறவிகளுக்கு யதிகள் என்றும், பெண் துறவிகளுக்கு ஆரியாங்கனைகள் என்றும் பெயர். இவ்விருபாலினர்க்கும் ஒரேமாதிரியான கடமைகளே விதிக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம், ஜைன சமுதாயம் இருபெரும் பிரிவுகளாகப்பிரிந்து, முனைவர் வகுத்த நெறிகளில் சிறிதும் பிறழாது கடமையாற்றுகிறது.

## ஜைன சமயத்தில் ஒழுக்கநெறி

சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஐந்துவிதமான நன்னெறிகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று ஜைன மதம் விதிக்கிறது. அவை ஜீவனை நோன்புகள் (Pancha vratas) எனப்படும். ஐந்நோன்புகளாவன—கொல்லாமை (Ahimsa) வாய்மை (Satya), கள்ளாமை (Astheya), கற்புடைமை (Bramacharya) உடைமை நீக்கம் (Aparigraha) என்பனவாகும். இந்த ஐந்து நோன்புகளிலும் முதலாவதும் முக்கியமானதும் கொல்லாமை

என்பதுதான் என்று நாம் உறுதியாகச் சொல்லலாம். கொல்லாமை என்கிற சொல் எந்த உயிர்களையும் கொல்லாத தன்மை என்று எதிர்மறையாகப் பொருள்பட்டாலும், இது உண்மையில் ஒரு நேர்முகப் பண்பே என்பதை நாம் உணரவேண்டும். கருணையும் காதலும் இல்லாதவர்களிடம் கொல்லாமை அமையாது. மேலும், கொல்லாமையை மனமொழிமெய்களால் கடைப்பிடிக்கவேண்டும், உண்மையில், கொலைபுரிதல் எவ்வளவு தீங்கானதோ அதேபோல் கொலைபுரியவேண்டும் என்று நினைப்பதும் தீங்கானதாகும். எனவே, கொல்லாமை என்கிற நோன்பை ஒரு மனிதன் தூய மனத்தோடும், தூய மொழிகளாலும், தூய செயல்கள் புரிந்தும் கடைப்பிடிக்கவேண்டும். அனைத்துயிர்க் காதலும் அனைத்துயிர்க் கருணையும் அவனுடைய ஒவ்வொரு செயலிலும் பரிணமிக்க வேண்டும். இல்லாவிடில் அந்நோன்பு குலைந்துவிடும்.

மேலும், ஒரு மனிதன் மற்றப் பிறவிகளுக்குத் தான் இன்னல் புரியாமல் இருந்தால்மட்டும் போதாது; பிறன் ஒருவனைக் கொண்டு இன்னல்புரிவதும் தவறேயாகும். பிறன் புரிந்த தீச் செயலுக்கு அதனைத் தூண்டியவனும் காரணமாவான். 'நான் யாருக்கும் துன்பம் இழைக்கவில்லை; பிறனைக் கொண்டு இழைக்கச் செய்யவுமில்லை; வேறொருவன் இழைத்ததை நான் மறைமுகமாக ஆதரித்தேன்'—என்றால், அதுவும் குற்றந்தான். இதனால் ஒருவன் இன்னொருவனைக் கொல்லக்கூடாது; கொல்லத் தூண்டக்கூடாது; கொலைச் செயலை ஆதரிக்கவுங் கூடாது என்று ஏற்படுகிறது. சுருங்கச் சொன்னால். கொல்லா மையை நினைவு, சொல், செயல்-ஆகிய மூன்றின் மூலமும் கடைப் பிடிக்கவேண்டும் இம்சை என்கிற உறுகண்ணை எல்லாவகையிலும் தவிர்க்கவேண்டும் என்பது தான் இவற்றின் பிழிந்த கருத்தாகும்.

சமுதாயத்தில் உள்ள இல்லத்தான், துறவி என்கிற இரு பிரிவினரையும் கொல்லாமை நோன்பு பொதுவாகச் சாரும். துறவியைப் பொறுத்தவரையில் இந்நோன்பு கடுமையாக ஆட் படுத்தப்படவேண்டும்; இல்லத்தானைப் பொறுத்தமட்டில் இதனை வரம்புக்குட்பட்டுக் கடைப்பிடித்தால் போதும். ஏனென்றால், இல்லாத்தானுக்குத் துறவியைவிட உலகக் கடமைகள் அதிகம். உலகக் கடைமைகளை ஆற்றும்போது இல்லத்தான் பல இடங் களில் வழுவ நேரிடும். எடுத்துக்காட்டாக, கொல்லாமைச் சட்டப்படி தாவரப் பிரிவைக் கொல்வதும் பாவமாகும், ஏனெனில், தாவரம் ஒற்றைப் புலன் உயிர் வகையைச் சேர்ந்தது. இதனை வற்புறுத்தினால் இல்லத்தான் வேளாண்மையே (Agriculture) செய்யமுடியாது. வேளாண்மையில் அறுவடை முக்கியமானதாகு

லால், அது ஒற்றைப்புலன் உயிர்களைச் சிதைப்பதில் முடிகிறது. ஆனால் வேளாண்மை செய்யாவிட்டால் சமுதாயத்திற்கு உணவு கிடைக்காது. உணவில்லாமல் உலகத்தில் வாழ்வது மிகவும் கடினமான காரியம். எனவே, இல்லத்தானைப் பொறுத்த வரையில், ஒற்றைப் புலன் உயிர்களைத் தவிர்த்து மற்ற உயிர் களைக் கொல்லக்கூடாது என்று விதித்திருக்கிறார்கள். இந்த ஒழுக்க விதிக்கு இளநோன்பு (Anuvrata or Minor vow) என்று பெயர். ஆனால், துறவியோ கொல்லாமையை முழுதுமாகக் கடைப்பிடிக்கவேண்டும். இதற்கு முதுநோன்பு (Mahavrata or Great vow) என்று பெயர்.

மேலே நாம் கூறிய கொல்லாமை நோன்பும், மற்ற சமயத்தார் கூறும் கொல்லாமை நோன்பும் ஒருதன்மையானவை அல்ல. பௌத்தர்கள், தாம் நேரே கொலைபுரியாவிட்டாலும் இன்னொருவன் கொலைபுரிந்த விலங்கின் இறைச்சியைப் புசிக்கிறார்கள். எனவே, அந்தக் கொலைக்குத் தாம் காரணம் அல்ல என்றும், இறைச்சிக் கடைக்காரனே அதற்குக் காரணம் என்றும் சொல்லித் தப்பிக்கப் பார்க்கின்றனர். ஆனால், இதை ஜைனர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இறைச்சிக் கடைக்காரன் ஊன் புசிப்பவர் களுக்காகவே விலங்குகளைக் கொன்று அவர்களுக்கு அவற்றை விற்கிறான். எனவே, அவன் ஊன் புசிப்போரின் கருவியாளன் ஆவான். கருவியாளன் மூலம் ஒரு விலங்கைக் கொல்லுதலும், அக்கொலையை ஆதரித்துக் கொலைப்பொருளை உண்ணுதலும் ஒரேவகையான குற்றங்களாகும். இச்செயலை ஜைன மதம் ஏற்காது. இதேபோல், வேதமதம் சமய ஒழுக்கமாகக் கூறும் விலங்குக்கொலையையும் ஜைனம், ஏற்பதில்லை. ஏனெனில், கொல்லுதல் என்பது எதன் பெயரில் செய்யப்பட்டாலும் அது குற்றமேயாகும். சமயத்தின் பெயரால் செய்யப்படுவதாலேயே அக்கொலைக்குப் புனிதம் உண்டாகிவிடாது. எனவே, ஜைனக் கோட்பாட்டுப்படி வேதமுறைக் கொலையும் ஒரு தீயொழுக்கமே யாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அடுத்து வாய்மை வருகிறது. வாய்மை என்கிற விதிமுறை யும் இல்லத்தானுக்கு ஓரளவும் துறவிக்கு முழுதுமாகவும் பொருந்தும். ஜைன சமயத்தின் முழு ஒழுக்க விதித் தொகுதியும் Moral code) உறுகண் மறுப்பை அடிப்படையாகக் கொண்டிருப்ப தால், அதன் சார்பு விதிகளும் மையக் கொள்கையைத் தழுவிய தாகவே இருக்கமுடியும். இது வாய்மை பேசுவதற்கும் ஒக்கும். ஒருவன் வாய்மையைப் பேசுவதால் இன்னொருவனுக்குத் துன்பம் நேரக்கூடாது என்பதையும் கவனிக்கவேண்டும். எடுத்துக்

காட்டாக, ஒரு மனிதன் தன் எதிரியிடமிருந்து தப்பிவந்து ஓர் இடத்தில் ஒளிந்துகொள்கிறான் என்றால், அவ்வெதிரி தன் பகைவன் எங்கு உள்ளான் என்று கேட்கும்போது நாம் வாய்மையை—அதாவது உண்மையைச் சொல்லிவிடக்கூடாது. இங்கே வாய்மையைச் சொல்லிவிட்டால் தப்பியவன் கொல்லப்பட்டு விடுவான். இதுபோன்ற தறுவாய்களில் நாம் வாய்மை பேசிப் பயனில்லை ஒருவேடன் ஒரு விலங்கைத் தேடிவரும்போது, அவ்விலங்கின் இருப்பிடத்தை அவனுக்குக் கூறிவிடுவதும் அறமாகாது. இந்தச் சமங்களில் பொய்புகல்வதில் தவறில்லை. வாய்மையாலும் பிற உயிர்களுக்குத் துன்பம் உண்டாகக்கூடாது என்பதுதான் ஜைனக் கருத்தாகும்.

மூன்றாவது நோன்பு கள்ளாமை. ஒருவனுக்குச் சொந்தமல்லாததும், அதன் சொந்தக்காரனால் விரும்பிக் கொடுக்கப்படாததுமான ஒரு பொருளைத் தன்வசப்படுத்திக்கொள்ளுதல் களவாகும். இங்ஙனம், பிறர் பொருளைக் கவர்வதை மனிதன் தவிர்க்கவேண்டும். ஆனால், இதனுடன் களவு நின்றுவிடவில்லை. வாணிபத் துறையிலும் களவு உண்டு. தவறான எடைக்கற்களைப் பயன்படுத்துவதும், ஒழுங்கற்ற அளவைகளைப் பயன்படுத்துவதும் களவைச் சார்ந்ததேயாகும் கறுப்புச் சந்தை (Black-market) நடத்துவதும் களவுதான். சமுதாயத்தின் உரிமைகளையும் சலுகைகளையும் பறிக்கும் செய்கைகள் யாவும் களவு என்றே ஜைனரால் கருதப்படுகிறது.

நான்காவது நோன்பு கற்புடைமை. பால் விவகாரத்தில் (Sex matter) மனிதனுக்கு இருக்கவேண்டிய தன்னொழுக்கத்தையே கற்புடைமை குறிக்கிறது. இந்நோன்பு துறவியைப் பொறுத்தவரை முழுச் சேர்க்கை மறுப்பு (Strict celebacy) மூலம் கடைப்பிடிக்கப்படவேண்டும். துறவிக்கு அதிக உலகத்தொடர்பு கிடையாததலால் இதனை அவர் செம்மையாகப் பின்பற்றலாம். ஆனால், இந்நோன்பு செய்கையால் பின்பற்றப்பட்டால்மட்டும் போதாது; நினைவாலும் சொல்லாலுங்கூடப் பாலுணர்வு வெளிப்படக்கூடாது. துறவிக்குத் தன் தன்மத்தை (Self) உடம்பிலிருந்து தனிப்படுத்தினால்தான் சரியானவாறு தவம் இயற்றுவதற்கும், முடிவில் தன்னுணர்வு பெறுவதற்கும் நல்ல சூழ்நிலை ஏற்படும். மனத்தில் வெறும் பாலின்ப நினைவு உண்டானாலுங்கூடத் துறவியின் நோக்கம் நிறைவேறாது. எனவேதான், துறவி மனம், மெய், மொழி-ஆகிய மூன்றாலும் கற்புடைமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இல்லத்தானைப் பொறுத்தமட்டில் இத்தனை கடிய ஒழுக்கத்தைப் பின்பற்ற

முடியாது. ஏனெனில், இல்லத்தான் உலகத்தில் வாழ்ந்து மனையக இன்பங்களை நுகரவேண்டியவன். அதனால் இல்லத் தான் தன் மனம்போனபடி இன்பம் நுகரலாம் என்பது பொருளன்று. இந்தவகையில் அவன் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளும் சில உள. முதலில் இல்லத்தான் ஒரே மனைவியை மணந்துகொண்டு வாழ்க்கை நடத்தவேண்டும். ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணந்துகொள்வதும், இன்னொருவன் மனைவியோடு கள்ள நட்புக் கொண்டு ஒழுகுவதும், மனைவி, இருக்கும்போது மற்றொருத்தியோடு தொடர்புகொள்வதும் கற்புடைமைக்கு மாறான செயல்களாம். இல்லத்தானும் இவ்விதி முறைகளை நினைவு, சொல், செயல்-இம்மூன்றின மூலமும் பின் பற்றவேண்டும். பிற மங்கையை மனத்தால் விழைவதும் கற்பு நெறியிலிருந்து வழுவியதாகும். இல்லத்தான் இந்நோன்பைச் சரியாக இயற்றினால்தான் அவனுக்கும் சமுதாயத்துக்கும் அமைதி உண்டாகும்.

ஐந்தாவது நோன்பான உடைமை-நீக்கம், ஒரு மனிதன் தான் பெற்றிருக்கும் சொத்தையும் செல்வத்தையும் சார்ந்ததாகும். துற வியைப் பற்றியமட்டில சொத்து, செல்வம் என்ற சொற்களுக்கே இடமில்லை. காரணம், துறவி தான் துறவுபூணுமுன் எல்லாவித உடைமைகளினின்றும் நீங்கிவிடுகிறான். எனினும், சில சமயங் களில் மனைவிமக்களையும் சொத்துசுகங்களையும் விட்டு நீங்கிய சிலர், துறவு பூண்டபின்னும் சிறுதொடர்புகள் கொண்டிருப்பது வழக்கம். இச்சிறு தொடர்புகளினால், அவர்களுடைய மக்களுக்கோ பொருள்களுக்கோ ஏதாவது நேரும்போது, அவர்கள் மனத்தில் சிறிதுமகிழ்ச்சியோ வருத்தமோ ஏற்படுகிறது. ஆனால், மகிழ்ச்சியும் வருத்தமும் அவர் களின் துறவு வாழ்க்கைக்கு இடையூறு உண்டுபண்ணும். எனவே, உலகத்தைத் துறந்த மனிதனுக்குப், பிறகு எந்தவிதப் பற்றும் இருக்கலாகாது. உண்மையான தன்மத்தை அடைவது ஒன்றுதான் துறவியின் நோக்கமாக இருக்கவேண்டும்; மற்றப் பொருள்-தொடர்பு யாவும் அவன் நோக்கத்துக்குக் குந்தகம் விளைவிப் பவையே ஆகும். துறவிக்கு அவன் யாக்கைகூட அவனுக்குச் சொந்தமில்லை. அப்படியானால், மற்ற உடைமைகள் அவனை எப்படிச் மனம், மெய், மொழி—இம்மூன்றாலும் துறவி உடமை-நீக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

இல்லத்தானைப் பற்றியமட்டில் முழு உடமை-நீக்கம் என்பது பொருளற்ற ஒரு விதிமுறையாகும். சமுதாயத்தில் இல்லத்தானின் நிலைமை வேறுவகையானது. சமுதாயத்தின் பொருளாதார நிலைப் பாடும் சமூகக் கட்டுக்கோப்பும் இல்லத்தானின் வாழ்க்கையையே சார்ந்திருக்கிறது. இல்லத்தான் தன் கடமையை மறந்தால் சமுதா

யமே சரிந்துவிடும். இல்லத்தான் நிலத்தைத் திருத்திப் போதுமான உணவை விளைத்துத் தன்னையும் மற்றவர்களையும் காப்பாற்ற வேண்டும். அவனே ஒரு வணிகனாய் இருந்தால் வாணிபத்தில் முழுமனத்தோடு ஈடுபடவேண்டும். ஆனால், எந்தத் தொழிலிலும் நேர்மையான முறையில் பொருளீட்டுவது முக்கியமானதாகும். இல்லத்தான் சரிவரத் தொழில் புரியாவிட்டால், அவன் தன் குடும்பத்துக்கு வறுமையைத் தேடிக் கொள்வதோடு, சமுதாயம் முழுவதற்கும் வறுமையை விளைவிக்கிறான். இதனால் உடைமை-நீக்கத்தைத் துறவியைப்போல் இல்லத்தான் கைக்கொள்ள முடியாது என்று ஏற்படுகிறது இதனால் இல்லத்தான் உடைமை-நீக்கத்தைப் புறக்கணிக்கவேண்டும் என்பதா கருத்து என்றால், அதுவன்று. இல்லத்தானுடைய வாழ்க்கையின் நோக்கமும் உண்மையான தன்மத்தை அடைவதே யாதலால், அவனும் கூடியவரையில் புறப்பற்றுகளை விட்டு நீங்கியே இருக்கவேண்டும். உலகப் பொருள்களிடையேயும் சுற்றம் கேள்களிடையேயும் வாழ்ந்தாலும், இல்லத்தானின் மனம் மட்டும் பாசங்களில் அதிகப் பிடிப்பில்லாமல் விலகி நிற்கவேண்டும். இங்ஙனம், யாக்கையால் உலகத்தில் வாழ்ந்தாலும் மனத்தால் துறவுபூண்டு விளங்குபவர்கள், கானகத்தில் துறவுபூண்டு தவத்தில் ஆழ்ந்தும் மனத்தால் உலகப் பற்றுகளை விடாமல் அல்லற்படுபவர்களைக் காட்டிலும் மேலானவர்கள் ஆவர் என்றாலும், இந்த உலகத்திலேயே இருந்துகொண்டு இந்த உலகத்தின் பற்றுகளைத் துறந்து வசிப்பது என்பது மிகக் கடினமான காரியம் என்பதில் ஐயமில்லை. இதனால்தான் இல்லத்தான் முழு உடைமை-நீக்கத்தைக் கைக்கொள்ள முடியாமற்போனாலும், அவன் கைவசம் இருக்கும் உடைமைக்கு வரம்பு விதித்திருக்கிறார்கள். அதாவது, இல்லத்தான் தன் வாழ்க்கைக்கும் கடமைகளுக்கும் தேவையான அளவுமட்டும் சம்பாதித்துப் பொருள் சேர்க்கவேண்டும். அளவுக்கு மீறி அவன் தன் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவோ, உடைமயை மிகுதிப்படுத்திக்கொள்ளவோ கூடாது. இதற்கு உடைமை-நீக்கம் என்பதைவிட வரம்புக்குட்பட்ட உடைமை பெற்றிருத்தல் (Parimitha parigraha) என்று சொல்லலாம்.

வரம்புக்குட்பட்ட உடைமை பெற்றிருத்தல் இல்லத்தானின் கடமை என்று சொல்லும்போது, அவன் அவ்வரம்புக்கு மேல் ஈட்டும் பொருளை என்ன செய்யவேண்டும் என்கிற கேள்வி எழும். இல்லத்தான், தான் புரியும் தொழிலில் தீவிரத்துடனும் கிளர்ச்சியுடனும் ஈடுபடும்போது, அவன் தான் விதித்துக்கொள்ளும் வரம்புக்குமேல் சேரும் பணத்தைச் சமுதாயத்தின் பொதுநலனுக்கு என்று ஒதுக்கிவைக்கவேண்டும். அதிகப்படி வருமானத்தை இல்லத்தான் தன் சொந்தப் பொருளாகக் கருதாமல் சமுதாயத்தின்

பொதுப் பொருளாகக் கருதவேண்டும். இங்ஙனம், தன் இளமைக் காலம் முதலே பொருளிடம் உள்ள பிணைப்பு இல்லத்தானுக்குக் குறைந்து வந்தால், பின்னால் அவன் எல்லாவற்றினிடமும் கொள்ளவேண்டிய மனத்துறவுக்கு அந்நிலை துணையாக இருக்கும். சமுதாயத்தின் உயிரியல் வளர்ச்சிக்கேயன்றி உலகியல் வளர்ச்சிக்கும் இந்த நெறிமுறை உதவிகரமாக இருக்கிறது; தற்காலத்துக்கு இது மிகவும் தேவையானதுமாகும். சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு இருக்கலாகாது என்ற கருத்துப் பற்றியே ஜைன சிந்தனையாளர்கள், பல ஆயிரம் வருடங்களுக்கு முந்தியே, சொத்து-வருவாய்க் கட்டுப்பாடு என்ற இந்தத் தத்துவத்தை இல்லத்தானுக்கு விதித்தனர். இந்தத் தத்துவத்தின் காரணமாகச் சமுதாயத்தில் ஒரு கூட்டத்தாரிடம் அதிகப் பொருள் சென்று குவிவதும், மற்ற மக்களிடம் வறுமையும் துயரமும் இழிதகைமையும் சென்று சேர்வதும் தடுக்கப்படலாம். செல்வம், சுகாதாரம், செழிப்பு ஆகிய விஷயங்களில் எழும் சச்சரவு சொத்து-வருவாய் கட்டுப்பாட்டுத் தத்துவத்தால் தீர்க்கப்பட்டுவிடும். இந்தத் தத்துவத்தைக் கடைகாலாகக் கொண்ட சமுதாயம் ஒரு பொதுநலச் சமுதாயமாக விளங்கும் என்பதிலும் ஐயம் இருக்க முடியாது.

செல்வம் காரணமாகவும் பொருளாதாரப் படித்தரம் காரணமாகவும் இன்றைய உலகம் இரண்டு பிரிவாகப் பிரிந்து சண்டையிடுகிறது. இதில் ஒருபிரிவினர் முதலாளித்துவ நாட்டினர்என்றும், இன்னொரு பிரிவினர் பொதுவுடைமை நாட்டினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஐரோப்பாக் கண்டத்தில் பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு நிலநாயகமுறை (Feudal system) அழிக்கப்பட்டுவிட்டது இதன் பிறகு அங்கு யந்திரத் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டுப் பொருளீட்டத்தில் போட்டி உண்டாயிற்று. 19ஆம் நூற்றுண்டு முழுதும் யந்திரத் தொழில் வளர்ந்து தொழிற்சாலை முதலவர்கள், யந்திரச் சொந்தக்காரர்கள், ஆலைத் தலைவர்கள், பணிமனை மேலாளர்கள் ஆகியோரிடம் பொருளும் அதிகாரமும் வரம்பின்றிக் குவிந்தன. அவர்கள் பொருளையும் அதிகாரத்தையும் பொதுநலனுக்காகப் பயன்படுத்தாமல். தம் சொந்தநலனைக் கருதித் தொழிலாளர்களை விருப்பம்போல் ஆட்டிவைக்கத் தலைப்பட்டனர். இதனால் பொருள் மிகுந்தவர்கள் அதிகாரிகளாகி, உழைத்து வாழ்ந்தவர்கள் அடிமைகளாகும் நிலை ஏற்பட்டது. செல்வம் எவ்வளவுதான் பெருகியும், பெரும்பான்மையான மக்கள் உயிர்வாழவும் இயலாதவர்ளாகிச் சிறுபான்மைக் கூட்டம் கொழுமையுற்றுவந்தது இதனால் மிகுதியாகப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஒன்றுகூடித் தொழிற் சங்கங்கள் அமைத்துத் தம் நலனுக்காகப் போராடத் தொடங்கினர்.

இந்தச் சமயத்தில் காரல் மார்க்ஸ் என்று ஓர் அறிவாளி தோன்றினார். இவர் பொருளாதாரத் துறையில் பல ஆராய்ச்சிகள் நடத்திப் பொருளாதார மதிப்பு (Economic value)க் குறித்து ஒரு புதுக் கொள்கையை உருவாக்கினார். இவருடைய கொள்கைப்படி, ஒரு பண்டத்துக்கு அதனை உற்பத்திசெய்த தொழிலாளியின் உழைப்புக்கு ஏற்ப மதிப்பு உண்டாகிறது. இதுவரையில் பண்டத்தின் மதிப்பை அப்பண்ட உற்பத்தியைக் கட்டுப்படுத்தி வந்த முதலாளியே வரையறுத்துவநதான்; ஆனால், இனி அதனை உண்மையில் தோற்றுவிக்கும் தொழிலாளியே வரையறுக்க வேண்டும் என்று காரல் மார்க்ஸ் கூறினார். பண்டத்தைத் தோற்றுவிப்பதில் உண்மையில் தொழிலாளிக்கே அதிகப் பங்கு இருக்கிறது; தொழிலாளியின் உழைப்பு இல்லையானால் பண்டம் உருவாகமுடியாது. ஆனால், தொழிலாளி அவன் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவதில்லை. பண்டத்து மதிப்பின் பெரும் பகுதி முதலாளிக்கும், அதன் சிறுபகுதிமட்டுமே தொழிலாளிக்குக் கிடைக்கிறது. இந்த நிலை மாறவேண்டுமானால், தொழிலாளிக்குப் பொருள் தோற்றுவிப்பில் தகுந்த இடம் ஏற்படவேண்டும். அதாவது, தொழிலாளிக்குத் தோற்றுவிப்பின் பயனில் சரிபங்கு கிடைக்கவேண்டும், ஆதாயத்தில் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் ஒத்த பிரிவு கொடுக்கப்படவேண்டும் என்று கூக்குரல் உண்டாயிற்று. இந்தக் கூக்குரல் இரஷ்ய நாட்டில் புரட்சியாக மாறிப் பாட்டாளி வகுப்பின் கையில் ஆட்சி வந்தது. பாட்டாளி வகுப்பின் ஆட்சி பல ஆண்டுகளுக்குமுன் தொடங்கி இன்றுவரை இரஷ்யாவில் நடந்துவருகிறது. இதிலிருந்து நாம், இன்றைய உலகில் முதலாளித்துவம், பொதுவுடைமை என்று இரண்டு முரண்பட்ட அமைப்புகள் இயங்கிவருவதை நன்கு உணரலாம். ஆனால், இந்த முரண்பாட்டு அமைப்புகள் உலகத்துக்குத் தேவைதானா என்று பார்க்கும்போது, சமணர்களின சொத்து-வருவாய்க் கட்டுப்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றினால், இந்நலமற்ற அமைப்புகளின் போட்டியைத் தவிர்க்கலாம் என்பது நமக்கு விளங்காமற் போகாது.

## ஜைன மதத்தில் உள்ள வினைக் கொள்கை

ஜைன சிந்தனையின் சிறப்புக் கூறுதான் வினைக் கொள்கை (Conception of Karma) என்று சொல்லிவிடலாம். வினை என்கிற குறியீட்டுச் சொல் பல்வேறு தத்துவ மரபுகளில் (Philosophical Systems) பல்வேறு பொருளில் வழங்கப்படுகிறது. வேதச் சிந்தனை முறைகள் வினைப்பகுதியை (Karma Kanda) அறிவுப்பகுதிக்கு (Gnyna Kanda) மாறானதாகக் கூறுகின்றன. அங்கே வினை என்பது செயல் என்கிற பொருளில் வழங்குகிறது. வினையொழுக்கம்

(Karma yoga) என்பதும் அறிவொழுக்கம் (Gnyna yoga) என்பதற்கு வேறுபட்ட சொல்லேயாகும். ஆனால், வினைக் கொள்கை எனகிற குறியீட்டில் இருககும 'வினை' என்கிற சொல்லுக்கு ஜைன மதத்தில் வேறு உளளீடு இருக்கிறது. உயிர்ப்-பொருள் உலகத்தின் வளர்ச்சியில் இருக்கும் ஒரு முக்கியக் கூறுதான் வினை எனபது. பூர்வ மீமாமச மதத்திலும், பௌத்த மதத்திலும், மனிதன் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும ஒரு பின் விளைவு (Adrishta) உண்டு. பூர்வ மீமாம்சத்தில் இநதப் பின் விளைவு என்பது ஒரு தனியாள் செய்த வேள்வியின் பயன என்று பொருள் படுகிறது. இந்தப் புலனுக்குப் புலப்படாத பின்விளைவுதான் வேள்வி அலலது வினையைப் புரிந்த ஒரு தனிமனிதனின் எதிர் காலத்தை வரையறுக்கிறது. தன்மம அல்லது ஆன்மாவை ஒத்துக் கொள்ளாத பௌத்தர்கள்கூட ஊழ் (Vasana) என்கிற மனித மனததின் பின்வாழக்கையைக் குறிததுப் பேசுகிறார்கள். பௌத்த தத்துவத்தின்படி இப்புவனத்தில் உள்ள ஒரே மெய்ம்மை தனி மனிதன் அநுபவிககும் ஊழ்வரிசைகளே ஆகும். ஒரு மன நிலைக்கும் இன்னொரு மனநிலைக்கும் உள்ள காரணகாரியத் தொடர்பை விளக்குவதற்காகவே ஊழ் என்கிற கருத்தைப் பௌத் தர்கள் புகுத்தினார்கள். ஆனால், இவர்கள் எவருடைய போக்கும் வினை என்பதை ஜைன மதம் விளக்குவதைப்போல முற்றுமாக விளக்குவதாயில்லை.

பெரும்பாலான இந்தியத் தத்துவ மரபுகள் உலகம் என்பது ஒரு காலத்தில் ஒருவரால் படைக்கப்பட்டது என்னும் கருத்தை ஒப்புக்கொள்ள மறுக்கினறன. வேத மரபில் பூர்வ மீமாமசம் சாங்கியம் யோகம் என்கிற வழிமுறைகளும், வேத மறுப்பு மரபில் பௌத்தம் ஜைனம் என்கிற வழிமுறைகளும படைபபு எனகிற கொள் கையை (System of creation) வெளிப் படையாகவே தள்ளுபடி செய்திருக்கின்றன. படைப்புக் கொள்கையின்படி பார்த்தால், உலகம் என்பது இறைவன் என்கிற ஒருவரால் தோறறுவிக்கப் படுகிறது என்று ஆகிறது. ஆனால், இறைவன் எதிலிருந்து இவ் வுலகத்தைத் தோறறுவித்தார் என்று கேட்டால், சூனியம் அல்லது ஒன்றுமற்றதிலிருந்து இதனைத் தோற்றுவித்தார் என்றே பதிலுரைக்கவேண்டியுள்ளது. உத்தர மீமாமசம் என்னும் வேதாந்த வழிமுறையும் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. நியாய, வைசேடிகம் என்னும் இரண்டு சிந்தனைமுறைகள் மட்டும் இறைவன் என்பவனே இப்புவனத்தின் படைப்பாளனாகப் பேசு கின்றன. என்றாலும், இங்குக் கூடப் படைப்பு என்கிற பதத்திற்குச் செமித்திய சிந்தனை முறைகளில் இருக்கும் பொருள் கொள்ளப் படுவதில்லை. இவற்றையெல்லாம் பார்க்க, எல்லா இந்தியத்

தத்துவ மரபுகளும், புவனமும் உயிர்ப்பொருள்களும் எவராலும் படைக்கப்பட்டன அல்ல என்றும், அதேபோல அவற்றை எவரும் அழிக்கமுடியாது என்றும், அவை என்றும் ஒரேநிலையாய் இருந்து வருவன என்றும் கருதுவதாகவே நமக்குத் தெரிய வருகின்றன.

நியாயம், வைசேடிகம் என்கிற தத்துவ மரபுகளும் புவனத் தோற்றுவிப்பாளனின் செய்கையாக ஒரு சிறு காரியத்தையே கூறுகின்றன. இறைவன் தன் மனத்தின் விருப்பத்தினால் உந்தப் பட்டு ஒன்றுமில்லாத ஒரு பொருளிலிருந்து ஒன்றைப் படைப்ப தில்லை. சடப்பொருள்கள் என்னும் அணுத்துகள்கள் என்றும் இவ்வுலகத்தில் இருக்கின்றன. இதேபோல மனத்துயிர்களும் ஆன்மாக்களும் இவ்வுலகத்தில் நிலவியுள்ளன. இறைவனுடைய வேலையெல்லாம், இருக்கும் ஒவ்வோர் ஆன்மாவுக்கும் அதன் தன் தன்மைக்கும் இயல்புக்கும் ஏற்ப ஒவ்வொரு பருவுடல் சமைத்துத் தருவதேயன்றி வேறல்ல. இறைவனின் இந்தச் செயல்தான உலகத்தில் உள்ள பருவுடலும் தன்னுணர்வும் சேர்ந்த பிறவிகளின் தோற்றத்துக்குக் காரணம் என்று நியாயமும் வைசேடிகமும் கூறு கின்றன. ஆனால் மற்ற வேத மரபுகள் இதைத் தடிப்பாக மறுக் கின்றன. இந்தவகையில் ஜைன மதம் அவற்றோடு ஒத்துச் செல்கிறது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். பூர்வ மீமாம்ச மரபு, உலகம் என்றும் இப்படியே இருந்திருக்கிறது என்று புகல்வதால், அதன் தோற்றத்தைப் பற்றிச் சொல்ல அதற்கு ஒன்று மில்லை. சாங்கிய, யோக மரபுகள், உலகத்தில் நடக்கும் உயிரியல், பொருளியல் மாற்றங்களுக்கு இயற்கையின் (Prakrati) செயலே காரணம் என்றும், இயற்கை ஒன்றுக்குத்தான் இம மாற்றங்களை நிகழ்த்தும சக்தி உண்டு என்றும விவரிக்கின்றன. பௌதத மதம், அத்வைத வேதாந்த மதம்-இவை இரண்டும், பொருள்களும உயிர்களும் சேர்நத இவ்வுலகம வெறும் மாயத் தோற்றம் என்று சொல்லிவிடுகின்றன. எனவே, அவைகளுக்குப் படைப்பைப் பற்றி ஒன்றும் கவலையில்லை. அவைகளின் கவலை யெல்லாம், இம்மாயத்தோற்றம் எப்படி உண்டாகிறது என்பதைக் குறித்ததாகவே இருக்கிறது. ஆனால், ஜைன மதம் மட்டும் உயிர்க்கணங்கள் நிறைந்த இவ்வுலகம் ஒரு பருமையான பொருள் என்று கொள்கிறது. பருமையுலகம் பலவகையான மாறுதல் களுக்கு உள்ளாகிறது. இதன் உயிரிப் பகுதியில் பிறப்பு, வளர்ச்சி, தளர்ச்சி, இறப்பு என்று பலவகை மாறுதல்கள் உண்டாகின்றன. இம மாறுதல்கள் இயற்கையாக நிகழ்வனவேயன்றி எவர் ஒரு வராலும நிகழ்த்தப் படுவன அல்ல. இதுவே ஜைன சித்தாந்தம. ஆயின், உலக காரியங்களுக்கு யாரும் காரணம அல்ல என்றால், இவ்வுலகில் ஏற்படும் பலவேறு மாறுதல்களும் எங்ஙனம் நடக்

கின்றன? உயிரிகள் எப்படிப் பிறக்கின்றன? அவை எப்படி வளர் கின்றன? சிறிது காலம வாழ்ந்த பிறகு அவை ஏன் மறைந்து விடுகின்றன? உயிரிகளின் உயிர உடலைவிட்டுப் பிரிந்தவுடன் அவை எங்கே செலகின்றன?—இந்தக் கேள்விகளெல்லாம நம் மனத்தில் எழுவது இயற்கையேயாகும். இக கேள்விகள் அனைத் திற்கும ஜைன மதத்தின வினைக் கொள்கை விஞ்ஞானமுறையில் விடைதருகிறது. ஜைனத்தின் இவ்விடை, சார்லஸ தாாவின் என்கிற ஆங்கில விஞ்ஞானி 'உயிர்க் கணங்களின் தோற்றம்' (Origin of Species) என்னும தன புகழ்பெற்ற நூலில் தரும பகுத் தறிவு விளக்கத்தை ஒட்டியிருந்தால, அதில் நாம் வியப்படை வதற்கு ஒன்றுமில்லை.

வினை என்கிற குறியீடு (Term) இரண்டு விடயங்களைச் சுட்டு கின்றன. பல்வேறு வினைகளாக உருவாகும சடத்துகளகளுக்குப் பொருள் வினை (Dravya Karma) என்று பெயர். இச்சடத்துகள்கள் யாவும ஒன்றாகக் கூடி ஒரு வினையை உணடாக்கும அழுககுச் சூழ்நிலைக்குக் கற்பித வினை (Bhava Karma) என்று பெயா, இந்த இரண்டு பிரிவுகளும ஒனறுக்கொனறு பரிதொடாபு (Inter-relation) உடையன. பருவுலகில் உள்ள எல்லா உயிாப் பொருள் களும் இவ்விரு வினைகளின கலப்பைத் தமமகத்தில கொண்டே விளங்குகின்றன. உலகில இரணடு தெளிவான தனமைகள இருப் பதாக ஜைன தததுவம் புகல்கிறது. அவை அறிவுடைமை (Chetana) அறிவின்மை (Achetana) எனறு சொல்லப்படும், உயிர்ப்பொருள் உலகததில் இருக்கும் பொருள்கள் யாவும இந்த இருதன்மைகளும் உடையனவாயிருககினறன. ஓர் உயிர்ப் பொருளின் யாக்கை பல சடததுகள்களால் ஆகியிருககிறது; யாக்கை ஒரு தனனுணாவுள்ள நுண்மத்தோடு (Concious being) கூடியிருக்கிறது; இந் நுண்மம யாக்கையின் மூலம இயஙகுகிறது. நுண்மததைத தான எனறும், தனமை அல்லது தானமை (Ego) என்றும் சொல்லலாம். தான்மை, தூயவடிவில இருககும்போது சடததுவ யாக்கையோடு எந்தத் தொடர்பும கொளவதில்லை. ஆனால், பருவுலகில் அறிவுடைய ஆன்மாவும அறிவிலலாத சடமும் ஒன்றுசேர்ந்து விளஙகுவதை நாம் காண்கிறோம. இந்தப் பொருத்தமற்ற சேர்க்கைக்குக் காரணம் எனன? தூய தானமை எப்போது முதன்முதலாக இச்சடயாக்கையில வநது சிககியது? இந்தக் கேள்விகளைப் பொதுவாக இநதியச் சிந்தனையாளர்கள் யாரும் எழுப்பிப்பார்ப்பதிலலை. எல்லாத தததுவ மரபினரும மற்ற வகையில் தமக்குள் எவ்வளவு வேறறுமை இருந்தபோதிலும, தான்மையைப் பொறுத்தவரையில அது எனறுமுதல் சடப் பொருள யாக்கையோடு கூடியிருக்கிறது எனபதைக குறித்து ஆராய்வ

தில்லை. உயிருடன் உடம்பு கூடியிருக்கும் தன்மைக்கு ஒவ துவக்கமே கிடையாது என்பது அவர்களுடைய எண்ணம். அவரு களுடைய கருத்துப்படி, வாழ்க்கை அல்லது சம்சாரம் என்பது அனாதியானதாகும். வாழ்க்கை என்று இங்கே உரைக்கும் சொல் பிறந்து, வளர்ந்து, இனப்பெருக்கம் செய்து, பிறகு தளர்ந்து மடியும் உயிர்ப்பொருள் உலகத்தைக் குறிக்கிறது. நாம் வதியும வாழ்க்கையுலகம் ஒரு துவக்கம் இல்லாதது என்றுதான் கூறு கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், ஒரு தனிப்பட்ட மனிதன் தன் சொந்த முயற்சியினால் பிறப்பு, வளர்ச்சி, இறப்பு-ஆகிய மாறுதல்களுக்கு உட்பட்ட இவ்வாழ்க்கையிலிருந்து விடுபட விரும் பினால் விடுபடலாம் என்றும் கூறுகிறார்கள். இந்த விடுபாட் டிற்குப் பின்னர் மனிதனுக்கு மறுபிறப்புக் கிடையாதாகையால், இதையே வாழ்க்கையின் நோக்கம் அல்லது விடுதலை நிலை (Moktsha) என்று குறிக்கிறார்கள்.

ஓர் உயிர்ப்பிறவி (Living being, மனிதனாக இருந்தாலும் மற்றதாக இருந்தாலும், பிறப்பு இறப்பு என்ற இரு வினை களுக்கும் உட்பட்டேயாகவேண்டும். ஆனால், இறப்புக்குப் பின்னர் வாழ்பொருள் எதுவும் தன் உடலைவிட்டு நீங்கி உயிர் மயமாகவே விளங்கும். இவ்வுயிர் அல்லது தான்மை (Ego), திரும்பவும் இன்னொரு தோற்றம் எடுத்து, இப்பிறப்பு-வளர்ச்சி-இறப்பு என்கிற சுழலில் அகப்பட்டு உழலத்தான் செய்யும. இந்த நிலை, தான்மை விடுதலை பெறுகிறவரை நிகழ்ந்துகொண்டே யிருக்கும். ஆனால், இந்தச் சமயத்தில் நமக்கு ஒரு விடயம் புலப் படுவதில்லை. ஒரு வாழ் பொருள் இறக்கும்போது அதன் உடம்பில் இருக்கும தான்மை எந்தத் தன்மையை அடைகிறது என்பதே அது. சார்வாகர்கள தவிர மற்றத் தத்துவ மரபினர் யாவரும் இறப்புக்குப் பின்னர் தான்மை எனகிற ஆன்மா வாழத்தான் செய்கிறது என்றே கூறுகிறார்கள். ஜைன மரபுகூட இதை ஒப்புக் கொள்கிறது; ஆனால், ஒரு சிறிய வேறுபாட்டுடன். ஒரு வாழ் பொருள் இறந்தவுடன, அதிலிருந்து வெளிப்படுகிற ஆன்மா என்கிற நுணமய சூட்சும வஸ்து) தூய தன்மையில் வெளிப்பட்டு விடுவதில்லை அவவானமாலோடு சில வினைத்துகள்கள் (Karmic particles) ஒட்டியிருக்கின்றன. இந்த வினைந்துகள்களுக்கு நுண்ணுடம்பு அல்லது வினையுடம்பு எனறு பெயர். ஆனமா இவ் வாழ்ககையுலகில (Samsaric world) இருக்குமவரை அதனுடன் இவ்வினையுடம்பும் இருந்துகொண்டுதான இருககிறது ஆன்மா எடுக்கிற எல்லாப் பிறபபு இறப்புகளிலும இவ்வினையுடம்பும பங்கு கொள்கிறது. எனவே, சடயாக்கை நீங்குவதாலேயே வினை யாக்கையும நீங்கிவிடும என்று சொல்லிவிடமுடியாது. வினை

யாக்கை அல்லது வினையுடம்பு நீங்கவேண்டுமானால் ஆன்மா புனிதப்படவேண்டும். இதுதான் ஜைன தத்துவம். இந்த வினையுடம்பு என்பது எப்படி அமைகிறது, இது எப்படித் தூய ஆன்மாவைப் பாதிக்கிறது, இதனால் தான்மை அல்லது ஆன்மா எப்படிப் பாதிக்கப்படுகிறது, இதன் அதிகாரத்தில் தான்மை எப்படி அடங்கிக்கிடக்கிறது—என்பதையெல்லாம் விளக்குகிற கொள்கைக்குத்தான் வினைக் கொள்கை அல்லது கருமக் கொள்கை என்று ஜைன மதத்தில் பெயர். வினைக் கொள்கையைக் குறித்து நாம் மேலும் பல உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நுண்ணுடம்பை உருவாக்கும் வினைத்துகள்கள் எட்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஒருவகை வினைத்துகள்கள் தான்மை அல்லது தன்மத்திற்கு (Ego or Self) இயற்கையாக உள்ள அறிவுணர்ச்சியைத் தகைக்கின்றன. இதற்கு அறிவுத் தகைப்பு வினை (Gnana Varniya Karma) என்று பெயர். இன்னொருவகைத் துகள்கள் தன்மத்தின் காட்சித்திறனைத் தகைக்கின்றன. இதற்குக் காட்சித் தகைப்பு வினை (Dharsana Varniya Karma) என்று பெயர்., மற்றொருவகைத் துகள்கள் தன்மத்தின் இன்ப துன்ப உணர்ச்சிகளை வரையறுக்கின்றன. இதற்கு இன்பதுன்ப வினை (Vedaneya Karma) என்று பெயர். இந்த வினையின் தொழிற்பாட்டினால்தான் தனிமனிதனுக்கு உலகில் இன்பமும் துன்பமும் ஏற்படுகின்றன; இது நேர்முகமாகத் தொழிற்பட்டால் இன்பமும், எதிர்முகமாகத் தொழிற்பட்டால் துன்பமும் வாழ்க்கையில் விளைகின்றன. பிறிதொருவகைத் துகள்கள் தன்மம் தன்னுடைய மெய்த்தன்மையை அறியவொட்டாமல் மறைக்கின்றன. இதற்கு மெய்யியல்பு மறைப்பு வினை (Mohaniya Karma) என்று பெயர். இவ்வினை தொழிற்படுவதால் தன்மம் தன்னைப் பற்றி ஒன்றும் அறியாமல் தன் நலத்திற்கு எதிரான காரியங்களில் தானே முனைகிறது. இவை தவிர இன்னும் நான்கு வகையான வினைகள் இருக்கின்றன அவற்றுள் ஒன்று வாழ்பொருளின் (Organism) வயதை நிலைநிறுத்துகிறது. இதற்கு வாழ்நாள் வினை (Ayushya Karma) என்று பெயர். இன்னொன்று வாழ்பொருளின் யாக்கையமைப்புக்குக் காரணமாக இருக்கிறது. இதற்கு யாக்கையமைப்பு வினை (Nama Karma) என்று பெயர். மற்றொன்று தனிமனிதனின் பிறப்பை உருவாக்குகிறது அதாவது, ஒரு மனிதன் சால்புடையவனாகவோ, இழிஞனாகவோ பிறப்பதற்கு இதுவே காரணமாகும். இதற்குப் பிறப்பு வினை (Gotra Karma) என்று பெயர். பிறிதொன்று தனிமனிதனின் இயல்பான வாழ்க்கைப் போக்கில் குறுக்கிட்டு இடர்களை உண்டாக்குகிறது. இதற்கு இடர் வினை (Antaraya Karma) என்று பெயர். இப்போது

நாம் இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்துபார்க்க வேண்டியது அவசியமாகும்.

வாழ்நாள் வினை அல்லது ஆயுள் கருமம் என்பது உயிர்ப்பிறவிகளின் வாழ்க்கைக் காலத்தை வரையறுக்கிறது. மரஞ்செடிகொடிப் பிறவியாயிருந்தாலும் சரி, விலங்குப் பிறவியாயிருந்தாலும் சரி, மனிதப் பிறவியாயிருந்தாலும் சரி, ஒவ்வொரு தனிப்பட்ட வாழ் பொருளுக்கும் பொதுவாக ஒரு குறிப்பிட்ட காலம் அவற்றின் ஆயுளாக இருக்கிறது. உயிர்ப்பொருள்களுக்குப் பிறப்புமுதல் இறப்புவரை ஒரு நிலையான காலம் ஒவ்வொன்றின் இயல்புக்கு ஏற்பக் காணப்படுகிறது. இந்த நிலைப்புக் காலத்திற்குத்தான் ஆயுள் என்று பெயர். ஆயுள் ஒவ்வொரு வாழ்பொருளுக்கும் வேறுபடும். மனிதனுடைய ஆயுள் மற்றச் சிற்றுயிரிகளின் ஆயுளுக்கு வேறுபட்டதாகும். சிற்றுயிரிகளும் ஒன்றுக்கொன்று வாழ்நாளில் மாறுபட்டே காணப்படுகின்றன. எந்த உயிரியின் வாழ்நாளும் அந்த உயிரியின் வினைத்துகள்களாலேயே நிலை நிறுத்தப் படுகிறது. இதனால் எந்த உயிரியும் தன் வரம்புக்கு மீறிய நாள்கள் உலகத்தில் வாழமுடியாது. வாழ்நாள் வினையின் இயக்கத்தின் படியே உயிரிகளின் நிலைப்புக் காலம் முடிவடைகிறது.

இரண்டாவதான யாக்கையமைப்பு வினை அல்லது நாம கருமம் என்பது சுவை மிகுந்த ஒரு தத்துவமாகும். இதில் நவீன உயிரி நூலின் (Biology) பல கூறுகள் அடங்கியிருக்கின்றன நவீன உயிரிநூல், வாழ்பொருள்களின் (Organisms) தோற்றம், வளர்ச்சி—ஆகியவை குறித்து விரிவாகப் பேசுகிறது. ஒரு வாழ் பொருளின் யாக்கையைப் பல பொருள்கள் உருவாக்குகின்றன என்றும், அவற்றுள் நொதியங்கள் மரபணுக்கள் நுண்ணகங்கள் (Enzimes, Genes & Microscopic factors) என்பவை முக்கியப் பங்கு பெறுகின்றன என்றும் உயிரிநூல் கூறுகிறது இதேபோல் ஜைன சிந்தனையாளர்கள் ஆயிரமாண்டுகளுக்குமுன் உருவாக்கிய யாக்கையமைப்பு வினை என்கிற தத்துவம் மிகுதியான உயிரியியல் பிரச்சினைகளை விடுவிப்பதாக இருக்கிறது வாழ்பொருள்களின் மரபணுக்கள் ஒன்றுக்கொன்று வேறுபடும் தன்மை, முதுகெலும் புள்ள உயிரிகளுக்கும் முதுகெலும்பில்லாத, உயிரிகளுக்கும் உள்ள யாக்கையமைப்பு, உடம்பில் இருக்கும் மூட்டுகளின் பலவகையான இயல்புகள், சினைகளின் ஒழுங்கான அமைப்பு, யாக்கையில் பொருத்தப்பட்டிருக்கும் புலனுறுப்புகளின் வடிவுபாடு முதலிய பல விடயங்களை நாம் கருமத்தின் மூலம் நாம் தெரிந்துகொள்ளலாம். உடம்பில் இருக்கும் புலனுறுப்புகள் முழுமையாக அமைந்து சீர்மை யுடன் இயங்குகின்றனவா என்பதையும், அவைகள் குறை

பாட்டுடன் அமைந்து சீர்மைகெட்டு இயங்குகின்றனவா என்பதை யும் யாக்கையமைப்பு வினையைக் கொண்டு நாம் அறியமுடியும். இவ்வினைகள் யாவும் பல்வேறு வகைப்பட்டு வாழ்பொருள்களைப் பல்வேறு உடல்களுடன் பிறக்கச்செய்கின்றன.

மூன்றாவதான பிறப்பு வினை அல்லது கோத்திர கருமம் உயிரிகளின் வழிவழிப் பண்பை (Heridity) நிலைநிறுத்துகிறது. மெண்டல் (Mandel) என்கிற விஞ்ஞானியின் ஆராய்ச்சிகளுக்குப் பின், நவீன உயிரிநூலார், மனிதன் விலங்குகள் — ஆகியவற்றின் வாழ்க்கையைப் பாதிக்கும் முக்கியமான கூறு வழி வழிப் பண்பு தான் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஒரு மனிதன் தன் அறிவு ஒழுக்கங்களை வளர்த்துக்கொண்டு சமுதாயத்துக்கு ஒரு நிதியமாக விளங்கப்போகிறானா அல்லது அவன் தன் மடமை புலைமைகளை வளர்த்துக்கொண்டு சமுதாயத்துக்கு ஒரு பாரமாக விளங்கப்போகிறானா, ஒருவன் சமூகத்துக்குப் பயனுள்ளவனாக இருப்பானா அல்லது பயனற்றவனாக இருப்பனா — என்கிற தன்மைகளையெல்லாம் வரையறுப்பது இவ்வழிவழிப் பண்பே யாகும் என்று, சமுதாய நூலும் உயிரிநூலும் கூறுகின்றன. ஒரு மனிதன் சால்புடையவனாகவும் நல்லவனாகவும் விரும்பத்தக்க வனாகவும் இருப்பான் என்பதையும், வேறொரு மனிதன் இழி வுடையவனாகவும் நலக்கேடனாகவும் வெறுக்கத்தக்கவனாகவும் இருப்பான் என்பதையும் இக்கோத்திர கருமம் அறிந்து கூறவல்ல தாகும்.

மேற்சொன்ன மூன்று வினைகளும் வாழ்பொருள்களின் உடலையும் உள்ளத்தையும் வடிவுபடுத்துவதில் காரணபூதங்களாக விளங்குகின்றன. கடைசி வினையான இடர் வினை அல்லது அந்தராய கருமம் என்பதோ ஒரு தனிமனிதன் வாழ்க்கையில் உள்ள அமைதியைக் கெடுக்கும் நுண்மமாக (வஸ்துவாக)க் காட்சியளிக்கிறது. ஒரு மனிதன் தான் விரும்பும் வேறொரு மனித னுக்கு அவன் படும் துன்பத்தைக் கண்டு ஏதாவது ஒரு பொருளை அன்பளிப்பாகக் கொடுக்க விரும்பலாம். அந்தச் சமயத்தில் அவன் மனம் ஏதோ ஒரு போராட்டத்தினால் தகைக்கப்பட்டு அதன் முந்திய விருப்பத்தை மாற்றிக்கொள்ள நேரலாம். இந்தத் திடீர் மாற்றத்திற்கான காரணம் இடர் வினையின் செயலேயாகும். இதற்கு மறுதலையாக ஓர் உதாரணமும் சொல்லலாம். ஒரு மனிதன் வேறொருவனிடம் ஏதோ ஓர் உதவியைப் பெறும் நிலையில் இருக்கலாம். அவன் அந்த உதவியைப் பெறும்போது ஏதாவது ஓர் இடையூறு விளைந்து அவன் நலத்தைக் கெடுத்து விடும். ஒருவன் எல்லாச் செல்வங்களும் பெற்றுக் குறைவில்லாமல்

வாழலாம் ஆனால், அச்செல்வங்களைத் துய்க்கும் பேறுமட்டும் அவனுக்குக் கிடைக்காது இத்தகைய ஏமாற்றகரமான அநுபவங்கள் யாவும் இடர் வினையின் விளைவுகளே என்று நாம் உணரவேண்டும் மேலே கூறிய எண்வகை வினைகளும் ஒவ்வொரு தனிமனிதனையும் அவனுடைய வகுப்புக்கு ஏற்பப் பாதிக்கின்றன என்று ஜைனப் பனுவல்கள் புகல்கின்றன.

ஜைன சிந்தனையாளர்கள் எண்வகை வினைகளை இரண்டு வகுப்புகளில் அடக்குகின்றனர். முதல் வகுப்பில் முன்னால் கூறிய நான்கு வினைகளும், இரண்டாம் வகுப்பில் பின்னால் கூறிய நான்கு வினைகளும் அடங்கும் முதல் வகுப்பிற்கு அழிவுவினைத் தொகுதி (Khati Karma) என்றும், இரண்டாம் வகுப்பிற்கு ஆக்க வினைத் தொகுதி (Akhati Karma) என்றும் பெயரிட்டிருக்கிறார்கள். அழிவுவினைகள், தூய தன்மத்தின் உள்ளியல்புகளைக் குலைத்து, அதனைப் பிறப்பிறப்புகளாலான வாழ்க்கைக் கடலில் அமிழ்த்திவிடுகின்றன. இவ்வினைகள்தாம் மேலே சொல்லப்பட்ட அறிவுத் தகைப்பு வினை, காட்சித் தகைப்பு வினை இன்பதுன்ப வினை, மெய்யியல்பு மறைப்பு வினை—என்ற முதல் நான்கு கருமங்களாகும். ஆக்கவினைத் தொகுதியில் உள்ளவை வாழ்நாள் வினை, யாக்கையமைப்பு வினை, பிறப்பு வினை, இடர் வினை—என்கிற மற்ற நான்கு கருமங்களாகும். ஆக்கவினைகள் தன்மத்தின் உள்ளியல்புகளில் தலையிடுவதில்லை; ஆனால், இவை அழிவுவினைகளால் குலைக்கப்பட்ட தன்மம் தங்குவதற்கான நுண்ணுடம்பை உருவாக்குகின்றன.

வினையைப் பற்றி இத்தனை விரிவாகவும் அழுத்தமாகவும் கூறுவதால், ஜைன சமயத்தின் கருமக் கொள்கை வெறும் ஊழ்வலியைச் சார்ந்தது என்று நினைத்துவிடக்கூடாது. வினைகளிடையே அகப்பட்டுக்கொண்ட தன்மம் அவைகளால் கணிசமான அளவு பாதிக்கப்பட்டாலும், அவைகளிலிருந்து மீள்வதற்கு அதற்கு வழியே இல்லை என்று சொல்லி விடமுடியாது. ஜைனத் திருநூல்கள் (Ethics) எழுதப்பட்டதன் நோக்கமே, தன்மத்தின் விடுதலைக்கான வழியையும் வகையையும் மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும் என்பதே தவிர வேறல்ல. விடுதலைக்கான வழியோ, நாம் முன்னர் ஓர் இடத்தில் குறிப்பிட்டதைப்போல நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடக்கை (Right faith Right knowledge & Right conduct) என்கிற மூன்று குணங்களில் அடங்கியிருக்கிறது இம்மூன்று குணங்களைச் ஜைனம் மும்மணிகள் (Ratna Traya) என்று அழைக்கிறது. இம்மூன்று குணங்களை முழுத்தமாக (பூரணமாக) அடையக் கடுமையான பயிற்சி தேவை. அப் பயிற்சிக்குத்தான்

தவம் அல்லது யோகம் என்று பெயர். தவம் அல்லது யோகத்தின் மூலம் ஒரு மனிதன் தன்னை அடக்கியாளும் சக்தியைப் பெறு கிறான். இச்சக்தி அவன் மனத்தை ஒருநிலையில் நிற்கச்செய்து அவனுக்குத் தியானநிலையைக் கூட்டுகிறது. தியானம் புரியப் புரியக் கருமங்கள் சிறிதுசிறிதாகக் கழன்று ஓடத்தலைப் படுகின்றன. மனிதனுடைய தன்மத்தை வினைத்துகள்கள் வந்து பற்றுவதற்கு அவனுடைய கோபம், வெறுப்பு, பேராசை போன்ற தீக்குணங்களே அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன. தியானத்தின் மூலம் இந்தத் தீக்குணங்களைச் சிறிதுசிறிதாகக் குறைத்துக்கொண்டே வந்து, ஒரு காலத்தில் அவற்றை முற்றிலும் அகற்றிவிட முடியும், மனிதனுடைய மனம் தீக்குணங்கள் நீங்கிப் பக்குவ முறுவதாலேயே, அது மேற்கொண்டு வினைகளைத் தேடிக் கொள்ளும் தன்மையை இழந்துவிடுகிறது என்றாலும், முன்னைப் பிறப்பினால் ஏற்பட்ட வினைகள் தன்மத்தில் சிறிது ஒட்டிக் கொண்டேயிருக்கும். இவற்றையும் மேற்கொண்டு புரியும் தியானத் தினால் அகற்றிவிடமுடியும். ஆனால், இந்நிலையை அடைதல் அத்தனை எளிதன்று. மனிதன் தன் சொந்த இயற்கையை உணர்ந் தால்தான் இந்நிலையை அவன் சுலபமாக அடையமுடியும்.

தனிமனிதன் ஒவ்வொருவனும் மூன்று வகையான நுண் பொருள்கள் அல்லது நுண்பங்களால் ஆக்கப்பட்டிருக்கிறான். அவை ஒன்று யாக்கை; இன்னொன்று உணர்வு, மற்றொன்று தன்மம் (Body, consciousness & self), யாக்கைக்கு பகிராத்மா என்றும், உணர்வுக்கு அந்தராத்மா என்றும், தன்மத்திற்குப் பரமாத்மா என்றும் ஜைன தத்துவத்தில் பெயர்கள் கூறப்பட்டிருக் கின்றன. மனிதனுடைய யாக்கை தான் அவனுடைய புறத்தன்மம் அல்லது பகிராத்மாவாகும். மனிதனுக்குச் சரியான அறிவு இல்லாததனால் அவன் தன்னைத் தன் உடம்போடு பிணைத்தே எதையும் பார்க்கிறான் இதனால் அவன் தன் உடம்பில் நேரும் மாற்றங்கள் யாவும் தன் உயிரில் நேரும் மாற்றங்கள் என்று கருதுகிறான். உடம்பையும் உயிரையும் பிணைத்து நோக்கும் அறியாமையால் மனிதன் தன் தன்மத்தின் இயல்பைச் சரியாக உணராமல் வாழ்வைக் கெடுத்துக்கொள்ள நேரிடுகிறது. அவன் வாழ்வு செம்மையுறவேண்டுமானால் இவ்வுணர்வு அவனைவிட்டு நீங்கவேண்டும் யாக்கை புரியும் செயல்களுக்கெல்லாம் தான்தான் காரணம் என்கிற மயக்கத்தை மனிதன் போக்க வேண்டும். அடுத்து, உணர்வு அல்லது அந்தராத்மா என்றால் என்ன என்பதைக் கவனிக்கலாம் மனிதனுடைய உணர்வும் அவனுடைய தான்மையும் (Consciousness & ego) வேறு வேறானவை. இவை இரண்டையும் ஒன்றாகக் குழப்பிக்கொள்ளக்கூடாது. உணர்வைப்

பொறுத்தவரையில் பருவுணர்வு, நுண்ணுணர்வு என்று இரண்டு உண்டு. பருவுணர்வு நன்மையும் தீமையுமான பல்வகை எழுச்சிகளுக்கு உட்பட்டு நிற்கும். இவ்வெழுச்சிகளுக்கு மனிதனுடைய அறியாமையே காரணமாகும். இருந்தபோதிலும், உயிரியல் ஒரு மனப்பாடு (Spritual concent·ation) எய்த இப்பருவுணர்வின் துணை மனிதனுக்குக் கண்டிப்பாகத் தேவை. நுண்ணுணர்வு, பருவுணர்வின் அடித்தளத்தில் இருக்கிறது. இதற்கு அதிக வேலை ஒன்றுமில்லை. பருவுணர்வு அழியும்போது இதுவும் அழிந்துவிடும். மனிதன் தன்மத்தைச் சரியானவாறு அறிந்து கொள்ள உணர்வு நல்ல துணைபுரிகிறது. தியானத்தில் ஆழ்ந்து தன்மத்தை உணர்ந்து கொண்ட மனிதன் சுலபமாக மேதகைமையை அடைந்து விடலாம். மேதகைமை அடைந்தவர்களை யாக்கையும் உணர்வும் விட்டு ஏகிவிடும். தூய தன்மம் அல்லது மேதகைமை தான் பரமாத்மா என்று அழைக்கப்படுகிறது. இங்ஙனம் ஜைன சிந்தனையாளர்கள் வினைகளின் இயற்கையையும் அவற்றின் காரியத்தையும் சொன்னதோடு, அவற்றை எப்படிக் கடக்கமுடியும் என்பதையும், மேதகைமையை எப்படி அடையமுடியும் என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மனிதன், தான்மையையும் யாக்கையையும் ஒன்றாகக் கருதிக் குழப்பிக்கொள்ளாமல் யாக்கையின்மீது உள்ள பற்றை நீத்து, தன் உணர்வைப் பயன்படுத்தித் தன்மத்தை அறிந்து தியானம் புரிந்து, மேதகைமை எய்தவேண்டும் என்பது ஜைனப் போதனையின் சாரமாகும். இந்த ஒரு வழியின் மூலந்தான் நாம் வாழ்க்கைக் கடலை (Samsara Sahara)க் கடந்து விடுதலை பெறமுடியும்.

## ஜைனமும் திருக்குறளும்

கி.மு. முதலாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட திருக்குறள் என்னும் நூல் ஜைன மதத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்க எழுந்த ஒன்றாகும். திருக்குறளை ஒருமுறை கற்றவர்கள், அஃநூலின் பல அதிகாரங்களும் ஜைன மதத்தின் ஒழுக்கங்களையும் கோட்பாடுகளையும் நிரலேநிரலே கிளந்துசெல்வதை உணராமற்போகமாட்டார்கள். இதன் முதல் அதிகாரமான ''கடவுள் வாழ்த்து'' அருகபரமனையும் சித்தபரமனையும் வணங்குவதாகவே அமைந்துள்ளது. ஜைன மதத்தில் வாழ்க்கைக் கடலைக் கடக்க வழிகாட்டும் முனைவரை (தீர்த்தங்கரரை) ஆப்தர் அல்லது அணுக்கர் என்று அழைப்பது வழக்கம் என்று முன்னமே கூறியுள்ளோம். வாழ்க்கைக் கடலைக்கடப்பதற்கு முனைவர் அருளும் புணைக்கு அறம் அல்லது தருமம் என்று பெயர். அறம் அல்லது தருமத்திற்கு இன்னொரு பெயர் கொல்லாமை (அகிம்சை)

அல்லது அனைத்துயிர்க் காதல் என்பதாகும். அறப்புணையை மக்களுக்கு அளிக்கும் முனைவரை அருகன் என்றும் அழைக்கலாம். அருகன் என்றால் வழிபடுவதற்குரிய ஒரு தெய்வப் பிறவி என்று பொருள். இதுபோன்ற தெய்வப்பிறவிகள் அறத்தை உய்விப்பதற்காக அவ்வப்போது உலகத்தில் தோன்றுவர் என்று ஏற்கெனவே சொல்லியுள்ளோம். இம் மனிதர்கள் தவத்தின் மூலம் தங்களை மேம்படுத்திக்கொண்டு இவ்வுலகைச் சரியான வழியில் இட்டுச் செல்கின்றனர். தவத்தினால் இவர்கள் நான்கு வகையான கொடு வினைகளை (Khati Karma)யும் அழித்து முற்றறிவு (Ananta Gnyana), முற்றுணர்வு (Ananta Darsana), முற்றுத்திறன் (Ananty Viiya), முற்றின்பம் (Amanta Sukha)—ஆகிய நான்கு வகையான பண்புகளைக் கைவரப்பெறுகின்றனர். கடையிலா உயிரியல் தகைமைகளான இப்பண்புகளைப் பெற்றவர் ஓர் இன்ப வமைதியில் மூழ்கி யாவற்றையும் அறியும் முனைவராக ஆகி விடுகிறார் முனைவர் தன் மனத்தை நிறைவுபடுத்திக்கொண்டவுடன் இவ்வுலகத்தைவிட்டு அகன்றுவிடுவதில்லை. அதன் பிறகு தான் அருகபரமன் (Arhat Paremesti) என்கிற நிலையை அடைந்து, அவர் மனிதகுலத்துக்குத் தொண்டுபுரியத் தலைப்படுகிறார்.

வானுலகத்தில் இருக்கும் தேவர்கோன், முனைவர் அல்லது அருகபரமனுக்காக ஒரு மாளிகை சமைப்பது வழக்கம். இந்த மாளிகை உலகத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அசைந்துசெல்லும் சக்தி வாய்ந்ததாகும் இதற்கு 'சமவசரணம்' என்று பெயர். இம்மாளிகை இரண்டு காரியங்களுக்குப் பயன்படும். ஒன்று, இது அருகபரமனை அவர் போகின்ற இடத்துக்குச் சுமந்துசெல்லும்; இரண்டாவது, அருகபரமன் அறவுரைசெய்யும் இடத்தில், மக்கள் திரள்வதற்கான மண்டபமாகவும் இது பயன்படும். மேலும், தேவர்கோன், முனைவருக்காக இரண்டு துணைக் கலங்களை அளிக்கிறான். அவை ஒன்று தெய்வத் தாமரை; இன்னொன்று தரும சக்கரம். அணுக்கர், திருமாளிகையில் செல்லும் போதும், அறவுரை புகட்டும்போதும் தாமரைமலர் அவர் பாதங்களைத் தாங்கி நிற்கும்; தரும சக்கரம் திருமாளிகையின் முன்பு சுழன்றுகொண்டிருக்கும். இச் சக்கரம் அணுக்கருக்குத் தேவர் உலகிலும் மானிடர் உலகிலும், நரகர் உலகிலும் இருக்கும் சக்தியைக் காட்டுகிறது. நூற்பெரும் பண்புகளைக் கொண்ட அணுக்கர், உலகத்தில் அறம் உரைக்கும் மேன்மையான காரியத்தில் ஈடுபட்டு ஒரு மெய்யடியாராக (Jeevan Mukta)த் திகழ்வார். காலவாக்கில் மெய்யடியாரின் நான்கு இயல்புவினைகளும் (Akati Karma) சிறிதுசிறிதாகத் தேய்ந்துவிடும். இயல்பு

வினைகள் அழிந்த தன்மத்திற்கு (Self) மறுபிறப்புக் கிடையாது. பிறப்பில்லாத உயிருக்கு யாக்கை அல்லது உடம்பும் ஏற்படாது. உடம்பில்லாத ஆன்மாவுக்குப் பால்வேறுபாடும் (Sex difference) கிடையாது. இங்ஙனம் தன்மம் தன்னை உணர்ந்துவிட்ட நிலையில் அதற்குச் சித்தபரமன் (Siddha Parameṣti) என்று பெயர். சித்தபரமன் என்றால் நிறைமையுற்ற பிறவி என்று பொருள். நிறைமையுற்ற பிறவி பாலிறந்து விளங்கும். அது ஆணா, பெண்ணா, அலியா என்று சொல்லமுடியாது. கொடு வினைகளை அழித்துப் பெற்ற நான்கு பண்புகளோடு, இயல்பு வினைகளை அழித்துப் பெறும் நான்கு பண்புகளும் ஒன்றுசேரச் சித்தநிலையை அடையும் ஆன்மா 'எண்குணத்தன்' என்று அழைக்கப்படுகிறது.

திருக்குறள் 'கடவுள் வாழ்த்துப்' பகுதியில் இருக்கும் பாடல்கள் மேலே கூறிய அருகபரமனையும் சித்தபரமனையும் நோக்கிப் பாடிய பாடல்களேயாகும். எனவே, அப் பகுதி அருக சித்த வணக்கப் பகுதி என்று உரைக்கத்தக்கது என்பதில் தவறில்லை. அருகனை வணங்குதல், அவன் உலகத்துக்கு வழங்கும் அறம் என்னும் கருணையின் பொருட்டாகும். சித்தனை வணங்குதல், அவன் நிலையே வாழ்க்கையின் இறுதியாகிய முடிந்த நிலை என்பதன் பொருட்டாகும் இந்த உண்மைகள் அடங்கியதே திருக்குறளின் கடவுள் வாழ்த்து. வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி, மனிதன் தன் குறிக்கோளை உணர்ந்து அறத்தைக் கடைப்பிடிப்பதேயாகும். இந்த அறத்தை உணர்த்துபவர்தான் ஜினர் அல்லது வாழ்க்கை கடந்தார் என்பவர் ஆவர் ஜினவழிபாடு, அருக-சித்த வழிபாட்டில் அடங்கியிருக்கிறது இதைத்தான் வள்ளுவர் தம் நூலின் முதல் அதிகாரத்தில் உணர்த்துகிறார்.

ஜைன மத முதல் அறிவர் புலப்படுத்திய ஜைன சங்கத்தையும், முனிவர் குழாத்தையும், ஜைன தருமத்தையும் போற்றுதல் ஜைன மக்களின் வழக்காறாக நீண்ட காலமாக இருந்துவருகிறது, இவற்றையெல்லாம் சேர்த்து ஒரு தொகுப்பாகப் பார்த்தால், அருகன் சித்தன் சங்கம் தருமம்—என்கிற நான்கு பொருள்களையும் மக்கள் வழிபடவேண்டும் என்று ஏற்படுகிறது தன் வாழ்க்கையின் குறிக்கோளை அடைய விரும்பும் ஒரு மனிதன் இந்நான்கு மெய்ப் பொருள்களையும் சரணடையவேண்டியது இன்றியமையாததாகும். பாகத மொழியில் உள்ள ஒரு துதிப்பாடலில் திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவரே இக்கருத்தைக் கீழ்வருமாறு வற்புறுத்தியிருக்கிறார்!

'உலகில் நிலவியிருக்கும் நான்கு மங்களகரமான பொருள்கள் அருகன், சித்தன், சங்கம், தருமம் என்பனவாகும்; உலகில் காணப் படும் நான்கு விழுமிய பொருள்களும் அவையேயாம். இதை முதன்முதல் உணர்த்தியவன் முற்றறிவனாவன். எனவே, அவனை உணர்த்தியவாறு,

என் பாவம் நீங்க அருகனைத் தொழுகிறேன்
என் பாவம் நீங்கச் சித்தனைத் தொழுகிறேன்
என் பாவம் நீங்க முனிவர்களைத் தொழுகிறேன்
என் பாவம் நீங்க அறிவன் உரைத்த அறத்தைத்
தொழுகிறேன்.'

இதுவே பாகத மொழியில் திருவள்ளுவர் இயற்றிய பாடலின் ஒரு பகுதியாகும். இதனைப் பின்பற்றியே திருக்குறளிலும் கடவுள் வாழ்த்துப் பகுதியில் அருக-சித்த வணக்கமும், நீத்தார் பெருமைப் பகுதியில் சங்க வணக்கமும், அறன் வலியுறுத்தல் பகுதியில் தரும வணக்கமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதே முறையைத் தமிழில் 'சீவகசிந்தாமணி' என்கிற காப்பியத்தை இயற்றிய திருத்தக்கதேவரும் அடியொற்றியுள்ளார். திருத்தக்க தேவர் தம் நூலின் முதல் இரண்டு பாடல்களில் அருக-சித்த வணக்கத்தைக் கூறிவிட்டு, மூன்றாவது பாடலில் சங்க-தரும வணக்கத்தை மொழிந்திருக்கிறார். திருவள்ளுவர் உலகியலிலும் உயிரியலிலும் மேன்மையான நான்கு பொருள்களை வழுத்திய பின்னர் அருளறத்தை விரிக்கும் திருக்குறளை ஓத முற்படுகிறார்.

திருக்குறளைப் பற்றி மேற்கொண்டு ஆராய்வதற்கு முன், திருக்குறளில் சொல்லப்படும் அறம், வேதநெறியினர் உரைத்த வருணாசிரம தருமத்திற்கு மாறுபட்டது என்பதைத் தெளிவு படுத்திக்கொள்ளவேண்டும். 'மனுதரும சாத்திரம்' என்னும் வேதநெறியினரின் நீதிநூல், மனிதர்களைப் பல சாதிகளாக அல்லது வருணங்களாகப் பகுத்து, ஒவ்வொரு சாதிக்கும் ஒரு நீதி கூறுகிறது. ஆனால், திருக்குறளோ, மனத்துக்கண் மாசிலலாமல் வாழ்வதே அறம் என்று புகல்கிறது.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற''

என்பது குறள் வாக்கு. அறத்தின்படி நடப்பதால்தான் உலகத்தில் மனிதன் உண்மையான இன்பத்தை எய்தமுடியும். உண்மையான இன்பம் என்பது தூய மனத்தோடு கூடிய குற்றமற்ற வாழ்க்கை

யாகும். அறத்தைக் கடைப்பிடிப்பவர்கள் வாழ்க்கையில் ஒருவகை யான ஒழுக்கத்தையும் மேற்கொள்ளவேண்டும். இவ்வொழுக்கம் மனிதனைச் சமுதாய அடிப்படையில் எந்தவிதமான பாகுபாட் டிற்கும் உள்ளாக்காது. வேதநெறிக்கு இப்போக்குத் துப்புரவாக மாறுபட்டது என்பதில் ஐயம் என்ன இருக்கமுடியும்?

திருக்குறளின் இரண்டாம் அதிகாரம் வான்சிறப்பைக் கூறு கிறது; வான்சிறப்பு என்பது மழையினது பெருமையாகும். இந்த அதிகாரம் திருக்குறளுக்கு ஒரு முகவுரை போல் அமைந்திருக் கிறது. பழந்தமிழரின பணபாடு வேளாண்மையையே அடிப்படை யாகக் கொண்டது. எனவே தான், மழையைப் போற்றுதல் தமிழ் நூலாசிரியாகளின் வழக்கமாக இருந்திருக்கிறது. மழை யில்லாமல் வேளாண்மை (Agriculture) நடவாது. வேளாண்மை நடக்காவிட்டால் நமககு உணவு கிடைக்காது. உணவு இல்லா விட்டால் பனிதர் உயிர்வாழ முடியாது எனவ, மனித வாழ்வுக்கு ஆதாரமாக இருப்பது வேளாணமை; வேளாண்மைக்கு ஆதாரமாக இருப்பது மழையாகும. உண்மையில் இறைமைப் பொருள்கள் நான்கையும் கூறியபிறகே 'வான்சிறப்பு'ச் சொல்லியிருக்க வேண்டும்; அதாவது, 'வான்சிறப்பு' — 'கடவுள் வாழ்த்து', 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' —ஆகியவற்றுக்குப் பிறகு நான்காவது அதிகாரமாக வைக்கப்பட்டிருக்கவேணடும. ஆனால், இன்று இது இரண்டாம் அதிகாரமாகவே காணப் படுகிறது.

திருக்குறள் முதல்வர் மனிதர்களுக்கான ஒழுக்கத்தை இரண்டு வகையாகப் பிரிததிருக்கிறார். ஒன்று துறவிகளுக்குரியது; இன் னொன்று இலலத்தாருக்குரியது. இவ்விருவகை ஒழுக்கங்களும் உலகததில் நிலவவேணடுமானால், போதுமான அளவு காலத்தில் பெய்யும மழை தேவை. சமுதாயம முழுவதற்கும தானியங்களை விளைவித்து அவற்றை வழங்கீடு (Supply) செய்யவேண்டியது இல்லத்தாரின் கடமையாகும; இதற்கு மழை தவறாமல் பெய்ய வேண்டும. துறவிகள் இல்லத்தாரை நம்பி வாழ்பவர்கள; இல்லத் தார் அளிக்கும உணவைததான் துறவிகள ஏற்று அருநதுவா. இல்லததார் உணவு தராவிட்டால், துறவிகள், உயிரியல் தனனடக் கததில் கருத்துச் செலுத்தமுடியாது. இதற்கும் இல்லத்தாருக்கும் மழை தேவைபபடுகிறது. இபபடிப பாாக்குமபோது, எநத விதமான மனிதர்ககும மழையினறி வாழ்விலலை என்று ஏற் படுவதை அறியலாம் சமுதாயப் பொருளாதாரத்தின அச்சாணியே மழைதான் என்று கூறினால், அதில் தப்பிதமில்லை. திருக் குறளுக்கு முந்திய இலக்கியங்களிலும இந்த உண்மை வற்புறுத்தப்

பட்டிருக்கிறது. இவைகளை நன்றாக உணர்ந்தே திருவள்ளுவர் 'வான்சிறப்பை' நூலின் முன்மைப் பகுதியான பாயிரத்தில் அடக்கினார் போலும்!

உண்மையில் திருவள்ளுவரின் நூல் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்திலிருந்துதான் துவங்குகிறது. அறன் வலியுறுத்தல் என்றால், இல்லத்தில் வாழ்க்கை நடத்துபவனுக்கு அவனுக்குரிய அறத்தை வற்புறுத்திப் போதித்தல் என்பது பொருள். சமுதாய அமைப்பில் இல்லத்தானுக்கே வள்ளுவர் அதிக முக்கியத்துவம் தருகிறார். இல்லத்தார்தாம் சமுதாயத்தைத் தாங்கும் தூண்களாக விளங்குகின்றனர் என்பது வள்ளுவர் கருத்து. இத்தூண்கள் இல்லாமற்போனால் சமுதாயமே தகர்ந்துவிடும். துறவிகளுடைய வாழ்க்கை ஆன்மிகத் துறையிலிருந்து பார்க்கும் போது உயர்ந்ததாகத் தோன்றினாலும், இல்லத்தானின் உதவியின்றி அது ஒழுங்காக நடைபெற இயலாது. எனவே, சமுதாயத்தின் முழுக் கட்டுக்கோப்பும் இல்லத்தானைச் சார்ந்தே அமைந்திருக்கிறது என்று சொல்லிவிடலாம். ஆதனால் உலகத்தை முற்றும் துறந்து வாழும் துறவிகளைவிடச் சமுதாயத்தில் இருந்து கொண்டே எல்லோருக்கும் ஆதரவாக விளங்கும் இல்லத்தாரின் வாழ்க்கை அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று திருக்குறள் முதல்வர் கருதுகிறார். நிலையில்லாத சமுதாய வாழ்வையே முக்கியமாகக் கருதும் இல்லத்தார் எப்படி மேன்மை வாய்ந்தவர்கள் என்று சிலர் நினைக்கலாம். அன்புடைமை, மாசின்மை—ஆகிய இரண்டு அறங்களையும் வழுவாமல் கடைப்பிடித்து வாழும் இல்லத்தார் உண்மையில் மேன்மை வாய்ந்தவர்கள்தாம் என்பதில் ஐயம் கொள்ள முடியாது. அன்புடைமை, மாசின்மையைவிட உயர்ந்த அறங்கள் உலகில் இல்லை. சில கடிய ஒழுக்கங்களை வீட்டில் இருந்துகொண்டு கடைப்பிடிக்க முடியாது என்பதை அறிந்துதான் துறவிகள் கானகம் செல்கின்றனர்; மற்றப்படி இல்லறம் தூய்மையற்றது என்பதற்காக அன்று, இல்லறத்தின் சால்பு இதனால் நமக்கு நன்கு புலப்படுகிறது அல்லவா?

இல்லத்தானின் வாழ்க்கைப் பண்பைப் புலப்படுத்திய பின், வள்ளுவர், இல்வாழ்க்கையின் தன்மை, அதன் அமைப்புறுப்புகள், அதன் நோக்கமும் குறிக்கோளும்—போன்ற நானாவிதப் பொருள்களை எடுத்துப் பேசுகிறார். இல்வாழ்க்கை என்று கூறியவுடன் கணவன், மனைவி என்கிற இருவரும் போகள் நம் மனக்கண்முன் தோன்றுவர். வாழ்க்கைத் துணையில்லாமல் எந்த மனிதனும் இல்லறத்தைப் பற்றி நினைக்க முடியாது. இல்லத்துக்குத் தலைவி மனைவியேயாவாள். ஓர் இல்லத்தின் அழகு அந்த இல்லத்தை

நடத்தும் மனைவியின் தன்மையைப் பொறுத்தே அமையும். ஒரு மனைவி தன் கணவனிடம நடந்துகொளளும் முறைமையினாலும் கற்புடைமையினாலும இல்லத்தைக கடவுள் உறையும் கோயிலாக மாற்றுகிறாள். இல்லத்தில் உண்டாகும தெய்விகச் சூழலுக்கு மனைவியே காரணபூதமாவாள். அங்ஙனம் தெய்விகம் குடி கொணட வீட்டில் இருக்கும் தலைவி வேறு கோவில்களுக்குச் சென்று இறைவழிபாடு புரியவேண்டிய அவசியமில்லை.

இல்வாழ்க்கைக்கு அப்புறம் குறள்முதல்வர் மக்கட்பேறு குறித்துச சொல்கிறார். குழந்தைகள இல்லாத வீடு எதுவும் வெறிசசோடிக் கிடககும். கணவனுக்கும் மனைவிக்கும் வீட்டு வாழ்வில் இனபம் கிடைக்கவேண்டுமானால், அவர்களுக்குக் குழநதைப்பேறு அவசியம் இருக்கவேண்டும். குழந்தைகளைப் பெற்றபிறகுதான் இலலததாருககு மூதனபு (Parental offection) ஏற்படுகிறது. ஓர் இலலககிழததி எத்தனை சிறப்புகள் உடைய வளாயிருநதாலும, அவளுக்குத் தாய்மை கிடைக்கா விட்டால், அவள் வாழ்வு பயனற்றதாகிவிடும. அதேபோல் இல்லக்கிழா னுக்கும் தநதைமை கிட்டவேண்டும். ஒரு தந்தைக்கும் தாய்க்கும் பிள்ளைப்பேறு ஏற்படுவதனால், அவாகள் தங்களைத் தாங்களே நேசித்துக்கொள்வதோடு, இன்னொரு பிறவியையும் நேசிக்கத் தலைபபடுகிறார்கள். இதனால் மனிதர்களின் ஆண்மை (ஆள் தன்மை) நன்கு வளர இடம உண்டாகிறது. குறுகிய பான்மையும், தனியுணர்வும் நீக்கப்பட்டு, மனிதர்கள விரிந்த பான்மையும் கூட்டுணர்வும் எய்தக் குழந்தைகள் பெருந்துணை புரிகின்றன. ஒரு குழந்தை ஒரு வீடடில் பிறக்கிறது எனறால், அன்றைய கிழமை அவ்வீட்டில் இன்பம் பிறக்கிறது என்று பொருள் அக் குழந்தை நாள் ஒரு மேனியும பொழுது ஒரு வண்ணமுமாக வளர்வது அதன் தாய் தந்தையருக்கு நிரமபிய மகிழ்ச்சியைத் தரும். குழந்தையின் மழலை மொழிகள் பெற்றோர்க்குக் குழல், யாழ் முதலிய கருவிகளின இசையைவிடத் தித்திக்கும். குழந்தை வளர்ந்தவுடன் அதற்குக் கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஒரு தந்தையின கடமை தன் மகனை நிறைந்த கல்வியுள்ளவனாக்கி, அவனைச் சமுதாயத்தின் தலைமையிடத்தில அமரச்செய்வதே யாகும். கல்வியில் மேமபட்ட புதல்வன் பண்பாட்டிலும் தன்னை உயர்த்திககொள்வான். கல்வியும், பண்பாடும் நிறைந்த ஒரு பிள்ளை, தன் தாய் தந்தையருக்கேயன்றி உலகத்துக்கும் பயன் படுபவனாகிறான். இத்தகைய பிள்ளையைப் பெற்ற தந்தையை மிகுதியும் ஆகூழ் வாய்ந்தவன் என்று உலகம் போற்றத் தவறாது. இலவாழக்கையின் மேன்மையையும வீட்டுவாழ்வின சுவையையும் வள்ளுவர் இங்ஙனம் நேர்த்தியாகச் சித்திரிக்கிறார்.

அடுத்து, மனிதர்களின் மனம் வளரவேண்டிய விதம் திருக்குறளில் சொல்லப்படுகிறது. ஒரு சமுதாயத்தில் கணவன்-மனைவியர் இனிமையாக வாழ்க்கை நடத்தி, அருமையான குழந்தைகளை ஈன்றெடுத்து, சுகம் நிரம்பக் காலங்கழித்தால் மட்டும் போதுமா என்றால், போதாது என்றுதான் உரைக்க வேண்டும். மனிதர்களுடைய வாழ்வு இதனோடு நின்றுவிட்டால் அது ஒரு சிறந்த வாழ்வாகாது. மாந்தருக்கு இன்னும் பரந்த உணர்ச்சி வளரவேண்டும். அவர்கள் தம் வாழ்க்கை வட்டத்தில் இன்னும் பல உயிர்ப்பிறவிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். 'அன்புடைமை' 'அருளுடைமை'—என்னும் அதிகாரங்களில் வள்ளுவர் இதனையே கொல்லாமை அல்லது உறுகண் மறுப்பு என்னும் பெயரில் நேர்முகமாக வர்ணிக்கிறார். உறுகண் மறுப்புப் பிற உயிர்களுக்கு இன்னல் விளைக்கா திருப்பதில்மட்டும் இல்லை; பிற உயிர்களை முழுமனத்தோடு நேசிப்பதில்தான் அது இருக்கிறது. உலகத்துயிர்கள் யாவற்றையும் நேசித்தால்தான் மனித குலம் தழைக்கமுடியும். எந்தப் பிறவிக்காவது ஏதாவது ஓர் இன்னல் நேர்ந்தால், அன்புள்ள மனிதன் உடனே சென்று, அவ்வின்னலைப் போக்க முயலவேண்டும். மனிதனுக்கு உள்ள நற்பண்பே இந்த ஈவும் இரக்கமும்தாம் என்று வள்ளுவர் கூறுகிறார். ஈவிரக்கம் இல்லாதவனுக்கும் விலங்குக்கும் அதிக வேறுபாடு கிடையாது. விலங்குக்கு உள்ள வேசிக யாக்கைதான் மனிதனுக்கும் அமைந்துள்ளது. ஆனால், மனிதனை விலங்கினின்றும் வேறு படுத்திக் காட்டுவது ஈவிரக்கப் பண்பேயாகும். இவ்வீவிரக்கப் பண்பு நன்கு முதிர்ச்சியுற்றால், அது மலர்ந்து தெய்விகத் தன்மை அடையும். இத்தன்மையை அடைந்தவர்கள் தெய்வ மனிதர் என்று போற்றப்படுவர்.

ஈவிரக்கப் பண்பை மனிதன் காட்டும் விதம் இல்லாதவர்க்கு உதவுவதேயாகும். வருபவர்களுக்கு விருந்தோம்பி அவர்கள் உள்ளம் மலர அனுப்புவது ஓர் விழுமிய பண்பு என்பதில் ஐயமில்லை. விருந்தோம்பலை இருதரத்தாருக்கு ஒரு மனிதன் புரிய வேண்டும். ஒருவர், தம்மை நாடி வரும் எளிய இல்லத்தார்; மற்றவர், உணவு நாடி வீதிவழியே செல்லும் துறவிகள். இவர்கள் இருதரத்தினரையும் இல்லறம் நடத்துபவன் காப்பாற்றக் கடமைப் பட்டவனாவன். விருந்தினரை ஓம்புவதில் இல்லத்தானுக்கு மனைவியின் முழு ஆதரவும் இருக்கவேண்டும். மனைவியின ஒத்துழைப்பின்றி விருந்தினரை ஓம்புதல் இயலாத காரியம். நல்ல வாழ்க்கைத் துணை (மனைவி) அமைந்தவன்தான் விருந்தோம்பலைச் செவ்வையாகப் புரியமுடியும், தன்னை நாடிவந்த விருந்தினரைப் பசியோடு வெளியே அமரவைத்துவிட்டுத் தான்மட்டும்

விலாப்புடைக்க உண்பது மனிதத்தன்மையாகாது. எந்த ஒரு நல்ல வீட்டிலும், தக்கவர்களுக்கு அமுது படைத்து உண்ணப்பட்டால் தான், அதன் ஒளி மிகுதியடையும். தகுந்தவர்க்கும் தேவையான வர்க்கும் அமுது படைத்து அவர்களைத் திருப்தியுறச் செய்பவன், தன் வாழ்க்கையைப் பற்றியும் வளத்தைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. வேளாண்மைக்கு குணம் (Hospitality) உள்ளவனுடைய பொருள்வளம் என்றும் மிகுமே தவிரக் குறையாது என்பது ஆன்றோர் வாக்கு.

ஜைன சமயத்தைச் சார்ந்த ஐவகை நோன்புகள் அல்லது பஞ்ச விரதங்களைப் பற்றி முன்னரே உரைத்துள்ளோம். அவை யாவன கொல்லாமை அல்லது அகிம்சை, வாய்மை அல்லது சத்தியம், கள்ளாமை அல்லது அஸ்தேயம், கற்புடைமை அல்லது பிரமச்சரியம், உடைமை-நீக்கம் அல்லது அபரிக்கிரகம் என்பனவாம். துறவிகள் இந்த ஐந்து நோன்புகளையும் எந்த வரையறையு மின்றிப் பின்பற்றவேண்டும். துறவிகள் அல்லது யதிகள் பின் பற்றும் இந்நோன்புகளுக்கு மகாவிரதம் அல்லது முதுநோன்பு என்று பெயர். இல்லத்தார் இந்த ஐந்து நோன்புகளையும் சிறிது வரையறையோடு பின்பற்றலாம்; அதாவது, இல்லத்தார் செய்ய வேண்டிய உலகக் கடமைகளுக்குக் குந்தகம் நேராவண்ணம் அவர் கள் இந்நோன்புகளைப் பின்பற்றலாம். சிராவகர்கள் அல்லது இல்லத்தார் பின்பற்றும் வரையறையோடு கூடிய இந்நோன்பு களுக்கு அநுவிரதம் அல்லது இளநோன்பு என்று பெயர். இந் நோன்புகள் சமுதாய வாழ்க்கையில் முக்கிய இடம் பெறுவன வாகும். ஒருவன் துறவியாயிருந்தாலும் சரி, இல்லத்தானாயிருந் தாலும் சரி, இருசாராருப் இவைகளைக் கடைபிடிக்கவேண்டும் என்னும் கருத்தோடு வள்ளுவர் இந்நோன்புகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் அதிகாரம் படைத்து விவரிக்கின்றார். ஆனால், பொதுவாக இவையனைத்தும் துறவறவியலிலேயே அதிகம் கூறப்படுகின்றன. இப்படிக் கூறப்படுவதனாலேயே அவை துறவிகள்மட்டும் உணர்ந்து கொள்ளவேண்டியன என்று ஒதுக்கிவிடக்கூடாது. துறவிகள் என்பது முற்றத் துறந்தவர்களைமட்டும் குறிக்காது வீட்டறத்தில் இருந்துகொண்டே துறந்து வாழ்பவர்களையும் அது குறிக்கும். ஆகையால், இந்நோன்புகள் இல்லத்தானுக்கும் பொருந்துவன என்றே நாம் கொள்ளவேண்டும்.

ஐவகை நோன்புகளில் முதலாவதான கொல்லாமையைப் பற்றிக் கூறும்போது, திருவள்ளுவர், ஊன் புசிப்பதை வன்மை யாகக் கண்டிக்கிறார். துறவியும் சரி, இல்லத்தானும் சரி, ஊன் புசித்தல் தலைசிறந்த குற்றம் என்பது அவர் கருத்து. உலகத்தை

நேசிப்பவர்கள் யாவரும் உலகத்தில் உள்ள உயிர்களையும் நேசிக்கவே செய்வர். உயிர்களை நேசிப்பவர்கள் விலங்குகளை மட்டும் எப்படிக் கொல்லமுடியும் ?

''தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்''

என்பது வள்ளுவர் கேட்கும் வினா. ஆனால், கொலைமறுப்பை ஏற்றுக்கொள்ளும் பௌத்தர்கள், ஊன்புசிப்பதை விலக்குவதில்லை. அவர்களில் துறவிகளும் இல்லறத்தாரும் தாராளமாக இறைச்சி உண்கிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் சமாதானம், உயிர்களைத் தாங்கள் கொல்வதில்லை; இறைச்சிக் கடைக்காரனே கொல்கிறான் என்பதாகும். இறைச்சிக் கடைக்காரன் வாணிபத்தின் பொருட்டே விலங்குகளைக் கொல்கிறான். அவனிடத்தில் இறைச்சியை வாங்குகிறவர்கள் இல்லையென்றால், அவன் இறைச்சியை விற்கமாட்டான். இறைச்சி புசிப்பவர்கள் இருப்பதனால் இறைச்சி விற்பவர்களும் இருக்கிறார்கள். எனவே, ஊன் புசிப்பதை மக்கள் யாவரும் ஒருமுகமாக விலக்கவேண்டும் என்று வள்ளுவர் கேட்டுக் கொள்கிறார். 'புலால் மறுத்தல்' என்னும் அதிகாரத்தில் ஊன் மறுக்கப்படுவதோடு, உயிர்க்கொலை புரிந்து நடத்தும் வேதவேள்வியும் கண்டிக்கப்படுகிறது.

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று''

என்பது குறள் வாக்கு. வேதமுறைப்படி ஆயிரம் வேள்வி செய்வதை விட, ஓர் உயிரையும் கொன்று உண்ணாதிருப்பது நல்லது என்பது இதன் கருத்து. ஆயிரம் வேள்விகளை ஒழுங்காகச் செய்கிற ஒரு மனிதன், அடுத்த பிறப்பில் இந்திரனாகப் பிறந்து, வானுலக இன்பத்தை நுகர்வான் என்று வேததருமம் சொல்கிறது. இவ் விந்திர பதவியும் கொலைமறுப்பைப் பார்க்க உயர்ந்தது அன்று என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார். வேத ஒழுக்கத்தையும் பௌத்த ஒழுக்கத்தையும் கண்டித்துவிட்டு, இறுதியாக அவர் ஒன்று புகல்கிறார்:

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

ஓர் உயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல் வாழ்கிறவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்று சொல்லி அவ்வதிகாரத்தை அவர் முடிக்கிறார்.

'கொல்லாமை' என்னும் அதிகாரத்தில் அறவினை என்பது யாது என்னும் வினாவை எழுப்பி, அறவினை என்பது எந்த உயிரையும் கொல்லாதிருப்பதேயாகும்; கொலை எல்லா விதத் தீமைகளையும் விளைவிக்கும் என்று வள்ளுவரே விடையிறுக்கிறார்.

'நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை''

வாழ்க்கையின் தன்மையைக் கண்டு அஞ்சித் துறந்தவர்கள் யாவரினும், கொலைசெய்வதற்கு அஞ்சிக் கொல்லாமையைப் போற்றுகிறவன் உயர்ந்தவன் என்று மேலும் சொல்லுகிறார்.

''தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை''

தன் உயிர் உடம்பைவிட்டு நீங்குவதாயிருந்தாலும், அதைத் தடுக்கத் தான் வேறோர் உயிரை நீக்கும் செயலைப் புரியக் கூடாது என்னும் கருத்துள்ள குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் போது, அறிஞர் போப்பு அவர்கள், அதன் கீழே ஒரு குறிப்புக் கொடுத்திருக்கிறார். தற்காப்புக்காகவும் ஒரு மனிதன் கொலை புரியக்கூடாது என்கிற தத்துவம் பகவத் கீதை இரண்டாம் அத்தியாயத்துக்கு மாறுபட்டது' என்பதே அக்குறிப்பாகும். இதிலிருந்து, வேதக் கருத்துக்கும் குறட் கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிந்துகொள்ளலாம். வேதத்தில் சொல்லப்படும் விலங்குக்கொடைகள் வேதநாயகர்களைத் திருத்திபடுத்தவே செய்யப்படுகின்றன. இந்தக் கொடை புரிவதனால் வரையற்ற செல்வமும் சுகமும் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால், அறவினையாளர்கள் சமயததின் பொருட்டுங்கூட விலங்குக்கொடையைக் கனவிலும் நினைக்கமாட்டார்கள். எந்தக் காரணத்தை முன்னிட்டும் கொலைபுரிபவனைப் புலையன் என்றே மக்கட் சமுதாயம் கருதும். போப்பின் குறிப்பு விலங்குக்கொடை புரிபவன் மன்னனாயிருந்தாலும் சரி, மதகுருவாயிருந்தாலும் சரி, அவன் நிந்தனைக்குரியவனே என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. இவை யாவும் தரும் பிழிந்த கருத்து, கொலை எல்லோராலும் வெறுக்கத் தக்க ஒரு தீயொழுக்கம், கொல்லாமை. எல்லோராலும் விரும்பத் தக்க ஒரு நல்லொழுக்கம் என்பதே அல்லவா ?

அடுத்து வரும் 'இன்னா செய்யாமை' என்னும் அதிகாரமும் கொலைமறுப்புக் கொள்கையின்பாலே அடங்கும். பிற உயிர்களுக்கு இன்னா செய்தல் கொலைமறுப்பைப் புறக்கணிக்கும்

செயலேயாகும். அறவழியில் நடக்க விரும்புபவர்கள், மற்றவர்க்கு எந்தவிதத் தீங்கையும் எத்தனை நலன் தருவதாயிருந்தாலும் இயற்றமாட்டார்கள். யாராவது ஒருவன் அறியாமையினால் நமக்குத் தீங்கு புரிந்துவிட்டால், நன்னடக்கையைப் பின்பற்றும் நாம், அவனுக்குப் பதிலுக்கு எந்தவிதத் துன்பத்தையும் புரியக் கூடாது. வள்ளுவரின் கருத்துப்படி, இன்னா செய்தவரை தண்டிப்பது அவர் நாணும்படி நன்னயம் செய்துவிடுவதேயாகும். இன்னா செய்தல் என்பது செயலில்மட்டும் தடுக்கப்படவேண்டிய விடயமன்று; நினைவிலும் அதனை நாம் சிந்திக்கக்கூடாது. முற்பகல் ஒருவன் இன்னா பிறர்க்குச் செய்தால், தனக்கு இன்னா பிற்பகல் தானே வந்துவிடும். இதனை அறிந்து மக்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

'வாய்மை' என்னும் அதிகாரத்தில், வாய்மை எனப்படுவது யாது என்றால், மற்ற எவர்க்கும் தீமையில்லாதவற்றைச் சொல்லுதல் என்று ஆசிரியர் கூறுகிறார். பொய்மையும் பிறர்க்கு நன்மை புரியக்கூடுமானால் அது வாய்மையாகி விடும் என்பது அவர் கொள்கை. ஒருவன் உள்ளத்தினாலும் பொய்த்து ஒழுகக் கூடாது. மனத்தினாலும் மொழியினாலும் வாய்மையைக் கடைப் பிடிப்பவன், தவத்தினாலும் தானத்தினாலும் புகழ்மையுற்றவர் களைக் காட்டிலும் உயர்ந்தவனாகிவிடுவான். நீர், உடம்பைத் துப்புரவுபடுத்துவதுபோல, வாய்மை, இதயத்தைத் துப்புரவுபடுத்து கிறது வாய்மையைப் பற்றிய அதிகாரத்தில் இருக்கும் முக்கியக் கருத்துகள் இவையேயாகும்.

'கள்ளாமை' என்னும் அதிகாரத்தில் திருட்டை வன்மையாகக் கண்டிக்கிறார். பிறர் பொருள்களைக் கவர்பவன் சமுதாயத்தால் வெறுக்கப்படுவதோடு அரசினராலும் தண்டிக்கப்படுவான். களவு மனிதனுடைய மனவளர்ச்சியைக் கெடுத்து விடும். பிறர் பொருளைக் கவரவேண்டும் என்று மனத்தால் நினைப்பதும் அச் செயலைப் புரிவதற்குச் சமானமாகும். இந் நினைவு ஒருவனை அரசினர் தண்டனைக்கு உள்ளாக்காவிட்டாலும், மனத்தாழ்வை உண்டாக்கி அவன் வாழ்வைக் குலைத்து விடும். களவு அத்தனை தீங்குகள் விளைவிக்கும் என்று இவ்வதிகாரம் புகல்கிறது.

'பிறன் இல் விழையாமை' என்னும் அதிகாரத்தில், இல்லத் தான் தீவிரமாகக் கற்புடைமையைப் பின்பற்ற வேண்டும் என்று ஆசிரியர் விதித்திருக்கிறார். இல்லத்தான் வீட்டறத்தைத் தவறாமல் பின்பற்றி ஒரே மனைவியோடு வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது வள்ளுவர் அறிவுரை. இந்த நெறிக்குப் புறம்

பாகப் பிறன் மனைவியை நாடிச் செல்பவன் அழியாத பழியை எய்துவான் துறவிக்கு விதிக்கப்பட்டுள்ள கடிய சேர்க்கை மறுப்பு இல்லத்தானுக்குக் கிடையாது என்றாலும், இல்லத்தான் தன் சொந்த மனைவியுடன் வாய்மையுடனும் நேர்மையுடனும் வாழக் கடமைப்பட்டவனாவான். ஒருமனைவி வாழ்வே அவனுக்கு இன்பமும் தூய்மையும் தரவல்லன.

'அவாவறுத்தல்' என்னும் அதிகாரத்தில், திருவள்ளுவர், இல்லத்தானின் ஐந்தாவது நோன்பான வரம்புக்குட்பட்ட உடைமை என்னும் கருத்தை விளக்குகிறார். இல்லத்தான் தன் பொருளீட்டத்துக்கு வரம்பு கோலிக்கொள்ளாவிட்டால், அவனுடைய பொருளாசை மேலும்மேலும் பெருகும் தணியாத பொருளாசை உலக நேசத்தை தகைக்கும். உலக நேசத்தைக் கைவிட்ட இல்லத்தான் அறவழியில் செல்லமுடியாது. அனைத்துயிர் காதலை நோக்கிச் செல்லும் இல்லத்தான் பொருளாசை என்னும் முட்டுக் கட்டையைக் கடந்தே தீர வேண்டும் வாழ்க்கையில் அவாவை அறுப்பதே இதற்குரிய எளிய வழியாகும்.

இனி, துறவிகளுக்குரிய சில தனிப் பண்புகள் குறித்துத் திருக்குறளாசிரியர் கூறியிருப்பதை இங்கே நோக்குவோம். முதலில் துறவி என்பவர் யார் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். வீட்டு வாழ்க்கையை அடியோடு துறந்து விட்டுத் தன் ஆயுள் முழுவதும் தவம் அல்லது யோகத்தைப் புரிய உறுதிபூண்கிறவர் தான் துறவி என்று அழைக்கப்படுவார். இப்போது தவம் என்றால் என்ன என்கிற கேள்வி எழலாம் அல்லவா? தவம் என்றால், தனக்கு வரும் இன்னல்களைப் பொறுமையோடு தாங்கிக்கொள்வதும், பிறர்க்கு எந்தவகை இன்னலும் இழைக்காமையுமாகும் என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம் இச்சுருக்கமான வரைவிலக்கணத்தில் (Definition) உயிரியல் தன்னடக்கத்தின் சாரம் முழுவதும் அடங்கிவிடுகிறது இதைச் சற்று விரித்தும் பார்க்கலாம். மனிதர்கள் எவர்க்கும் அவர்கள் வசிக்கும் இடத்தின் சூழல்களிலிருந்து ஏதாவது இன்னல் விளைவது இயற்கை. இது துறவிக்கும் பொருந்தும் துறவி இன்னல்களை ஏற்றுஏற்றுத் தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்கிறான். வாழ்க்கையைத் துறந்துவிட்டதால் அவன் இன்னல்களைக் கண்டு அஞ்சுவதில்லை. அதுவும் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் துறவிக்கு, உடம்பைத் துன்புறுத்தும் இன்னல், உள்ளத்தைப் பாதிப்பதில்லை. உடம்பை மறந்து அவன் யோகத்தில் அமர்ந்திருப்பதால், இன்னல் எதுவும் அவன் மனத்தைத் துளைப்பது கடினமாகிவிடுகிறது. இங்ஙனம், துன்பத்தைப் பொருட்படுத்தாமல் தவம் இயற்றும் துறவி, பிறர்க்கு எந்தவித்

இன்னலும் இழைக்கமாட்டான் என்று சொல்லவேண்டியதில்லை. பொன், தீயில் வைத்து உருக்கப்பட உருக்கப்பட, அது தன் அழுக்குகளெல்லாம் நீங்கிச் சுடர்விடத் துவங்குவதுபோல, துறவியின் ஆன்மா, பலவித இன்னல்களுக்கு ஆட்பட்டு ஆட்பட்டுத் தன் கழிமலங்களெல்லாம் நீங்கி, ஓர் ஒளிப்பொருளாகத் துலங்கும். இதனால்தான் தவத்தில் நிற்பது என்பது துறவியைத் தன் எய்வு (இலட்சியம்) நோக்கிச் செலச்செய்கிறது என்று வள்ளுவர் கூறுகிறார். ஆசைக்கு இணங்கியவர்கள் உலக இன்பங்களை நோக்கியே செல்வர்; தன்மத்தை (Self) உணர்ந்தவர்கள் உலகத்தார் யாவராலும் தொழப்படுவர் என்பது இங்கே திரண்ட கருத்தாக உள்ளது.

அடுத்து, திருவள்ளுவர் பொய்த்துறவிகளைக் கண்டிக்கிறார். உயிரியல் தூய்மையை அடையாமல் வெளிக்குத் துறவிபோல் வேடம்பூண்டு திரிவது இழிதகைமை என்று அவர் இடித்துரைக்கிறார் மனத்தை அடக்கும் வலியில்லாதவன் மேற்கொண்ட தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு பசு பயிரை மேய்வதற்கு ஒப்பானது என்று ஒரு குறளில் கூறுகிறார். துறவிக்கு வெளித்தோற்றம் அத்தனை முக்கியமன்று. ஒருவன் முகத்தை நன்றாக மழுக்கிக்கொண்டு ஒரு பௌத்த முனியைப்போல் தோன்றலாம்; இன்னொருவன் தலைநிறைய சடையை வளர்த்துக்கொண்டு ஒரு வேத முனியைப்போலும் விளங்கலாம். இவர்கள் தம்முடைய உள்ளம் தூய்மையடையாதவரையில் அவைபோன்ற வெளித்தோற்றங்கள் ஒருவிதப் பயனையும் நல்கமாட்டா, இதனால்தான் புறப்பற்றைமட்டும் விட்டு நீங்கியவர்களைத் துறவிகள் என்று அறிஞர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஒரு நல்ல துறவிக்கு அகப்பற்றும் அடியோடு நீங்கவேண்டும். அப்போதுதான் அவனுக்குச் சலனமற்ற மனவமைதி கிடைக்கும்.

''மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை''

என்று வள்ளுவர் மொழிகிறார். பிறப்புத் துன்பத்தைப் போக்க முயல்கின்றவர்க்கு உடம்பே மிகையான பொருள்; அப்படி இருக்க, வேறு தொடர்பு அவர்களுக்கு எதற்கு என்பது இதன் உள்ளகம். மறுபிறப்பைத் தடுப்பதற்கும், வாழ்க்கையின் நோக்கத்தை எய்துவதற்கும் இதுபோன்ற முற்றத் துறவே வேண்டப்படுவதாகும் இம் முற்றத் துறவை அடைவதற்கு ஓர் எளிய வழி உள்ளதாக வள்ளுவர் கூறுகிறார் அவ்வழியே பற்றினைப் பற்றுவதாகும். மனப்பற்றுகளை விட்டொழித்துப் பிறவாப் பெருநிலையை அடைவதற்குப்

பற்றே இல்லாதவனாகிய அருகபரமனிடம் பற்றுக் கொள்ள வேண்டும்; அவனை நாம் புகலடையவேண்டும். இதுவே மக்களின் ஈடேற்றத்துக்குச் சரியான வழியாகும்.

'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்தில், ஜைன சமயத்தின் மும்மணிகளான நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடக்கை என்னும் மூன்று கருத்துகளையும் வள்ளுவர் விளக்குகிறார். ஐம்புலன்களோடும் மனத்தோடும் பிறந்தும், இம்முக்கருத்துகளை உணராதவர்கள் பயனில்லாதவர்கள் என்று அவர் ஒரு குறளில் புகல்கிறார். மெய்ம்மையைப் பற்றி யாருக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறதோ அவன் இவ்வுலகில் இன்பமாக வாழ்வான். மெய்ம்மையில் ஐயுறவில்லாத நம்பிக்கை ஒருவனுக்கு மெய்யுணர்வைப் பற்றிய சரியான அறிவை உண்டாக்கும். நன்னம்பிக்கையும் நல்லறியும் கைவரப் பெற்றவன், அவா வெகுளி மயக்கம் போன்ற குறைகளிலிருந்து நீங்கி, நன்னடக்கையை வாழ்க்கையில் எய்துவான். மெய்யுணர்வால் மனிதன் எல்லாவகை மேன்மைகளையும் அடையலாம்.

மேலே விவரித்த அதிகாரங்களின் மூலம் வாழ்க்கை அல்லது சம்சாரக் கடலைக் கடப்பதற்கான வழியை வள்ளுவர் துலக்கமாகக் காட்டுவதை நாம் உணர்ந்திருக்கலாம். வாழ்க்கைக் கடலைக் கடப்பதற்கு முதல் தடையாக இருப்பது ஆசையாகும். ஆசையை ஒழித்தால் வாழ்க்கையை மனிதர்கள் சுலபமாகக் கடந்துவிடலாம். வாழ்க்கையைக் கடந்தவர்களுக்கு மறுபிறப்புக் கிடையாது. மறுபிறப்பில்லாத நிலையை நம் ஆன்மா அல்லது தன்மம் அடைந்துவிட்டதானால், அது மெய்மையை உணர்ந்துவிட்டதாக ஆகும். இம்மெய்ம்மை அல்லது உயிரியல் முழுமைக்கே அறம் என்று பெயர். இந்த அறம் என்கிற கொள்கை மனு முதலியோரும் மற்ற வேதவாதிகளும் கூறிய தருமம் என்கிற தத்துவத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

## திருக்குறளின் இரண்டாம் பாகம்

திருக்குறளின் இரண்டாம் பாகமான பொருட்பால் ஒரு நாட்டின் இயற்கையைப் பற்றியும், அது நடைபெறும் விதத்தைப் பற்றியும் எடுத்துக்கூறுகிறது. நாட்டின் உறுப்புகள், நாட்டை ஆளும் மன்னன், அவன் இயல்புகள், அரசின் பொது அமைப்பு, குடிமுறை—இவை யாவும் இப்பிரிவினுள் அடங்கியிருப்பதால், இதற்குப் பொருட்பால் என்று பெயர் வந்திருக்கிறது. சிலர், திருவள்ளுவர் இந்து தருமசாத்திரங்களை ஒட்டியே பொருட்பாலை இயற்றியிருக்கிறார் என்று உரைக்கிறார்கள். இது தவறான

கருத்து என்பதைத் திருக்குறளையும் தரும சாத்திரங்களையும் ஒருமுறை ஒப்பிட்டுப்பார்ப்பவர்களும் அறிந்துகொள்வர். இந்து சாத்திரங்களின்படி, ஒரு நாட்டின் மன்னன் என்பவன் கடவுளின் பிரதிநிதியாவான். அவன் நாட்டின் அமைப்பு வருணாசிரம தருமத்தை நிலைக்களமாகக் கொண்டு இயன்றிருக்கும். கடவுளின் பிரதிநிதியான மன்னன், மனிதருள் இரண்டாவது பிரிவான சத்திரிய வருணத்தைச் சார்ந்தவனாவான். சமயவினைஞர் அல்லது மதகுருமார், தலைமை வருணமான பிராமண வருணத்தைச் சார்ந்தவர்களாவர். ஆனால், இந்நிலை உபநிடத காலத்தில் வடநாட்டில் இருந்த மன்னர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்கள் தாங்கள்தாம் சமுதாயத்தின் முதல் வருணம் என்று அன்று சொல்லிக்கொண்டார்கள். உபநிடத காலத்திற்குப் பின் நிலைமை மாறிவிட்டது. சமயவினைஞர்கள் மறுபடியும் முதல் வருணமாக ஆகிவிட்டனர். இச்சமயத்திலிருந்து வருண முறை திண்மையாக நிறுவப்பட்டுவிட்டது. வருணமுறையின் படி, வேதக் கலையொழுக்கத்தின் பொறுப்பாளராக மதகுருமாரும், நாட்டின் பாதுகாவலராக சத்திரியரும், சமுதாயத்தின் பொருளாதார அடித்தலமாக வைசியரும், வேளாண்மை செய்பவர்களாகச் சூத்திரரும் விளங்கினர். இதுபோன்றே நாட்டின் சட்டதிட்டமும் வருண முறைக்கு ஏற்பவே அமைந்திருந்தது. மக்களின் குடியுரிமை, சொத்துரிமை, வழியுரிமை—யாவும் ஒவ்வொரு வருணத்திற்கும் அதனதன் தாரதம்மியத்திற்கு ஏற்ப அமைந்திருந்தன.

அக்காலத்தில் குற்ற நீதிமுறையும் வருணமுறையை ஒட்டியே இயங்கிவந்தது. சமுதாயத்தில் பழியாளர்கள் (Accused) புரிந்த குற்றங்கள் அவர்களின் வருணத்திற்குத் தகுந்தாற்போல் தரத்தில் மாறுபடும். குற்றத்தின் இயற்கையும் பருமையும் வருணத்தைக் கொண்டுதான் வரையறுக்கப்படும். குற்றத்தின் இயற்கை மாறுபடும்போது, அதேபோல் தண்டனையும் வருணத்திற்கு வருணம் மாறுபடுவதில் வியப்பு ஒன்றுமில்லை. இங்ஙனம் வருண ஒழுக்கம், இந்தியாவை வெள்ளைக்காரன் கைப்பற்றுவரை ஒரு வன்மை வாய்ந்த சக்தியாக விளங்கிவந்தது. ஆனால், இந்த முறை தற்கால உலகத்துக்குப் பொருத்தமான ஒன்று என்று யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இம்முறையை அடிப்படையாகக் கொண்ட இந்து சட்டம் (Hindu Law) எண்ணிறந்த நூற்றாண்டுகள் இந்தியாவில் நிலவிவந்தது. ஆனால், வெள்ளைக்காரர்கள் இங்கு வந்ததும், ஆகூழ்வசமாக இச்சட்டத்தைச் சார்ந்த குற்ற நீதிமுறை (Penal Code) பொருத்தமற்றது என்று நீக்கப்பட்டுவிட்டது. பிரிட்டிஷ்காரர்கள் பின்னர், தங்கள் நாட்டு மாதிரியில், பொது நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தியக் குற்ற விதி

முறை (Indian Penal Code) என்று ஒரு சட்டத் தொகுப்பை உண்டு பண்ணினார்கள். இந்த விதிமுறை, சட்டத்திற்கு முன்னர் எல்லா மனிதர்களும் சமம் என்பதையும், நீதி எல்லாருக்கும் ஒத்தமுறையில் வழங்கப்படவேண்டிய ஒன்று என்பதையும் சுட்டிக்காட்டிற்று. மனிதர்களின் பிறப்புக்கும் சட்டத்துக்கும் ஒருவிதத் தொடர்பும் இல்லை என்பதை பிரிட்டிஷ் ஆட்சி நமக்கு விளக்கியது. ஒருதலைச் சார்பும் அச்சமும் இல்லாத ஒரு நீதிமுறையை இந்தியாவிற்கு வழங்கிய பெருமை பிரிட்டிஷாரையே சாரும் என்று சொன்னால், அதில் தப்பிதம் இருக்கமுடியாது.

பிரிட்டிஷாருடைய போக்கு நவீன காலத்தில் நம்மால் பாராட்டப்படுவதில் வியப்பு ஒன்றுமில்லை. ஆனால், திருவள்ளுவர், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, பிரிட்டிஷ் முறையைப் பின்பற்றிச் சமநீதி வடிவில் பொருட்பாலை அமைத்தது தான் நமக்கு வியப்பைத் தருகிறது. திருவள்ளுவர், வருணம் அல்லது சாதியை அடிப்படையாகக் கொண்ட சட்டமுறையை ஏற்கவே இல்லை பண்டைய இந்து சட்ட முறையும் நீதிநெறியும் அவருக்கு உடன்பாடாக இல்லை. திருவள்ளுவர், பொருட்பாலை, ஒரு மன்னனுக்கு இருக்கவேண்டிய சிறப்பியல்புகளைக் குறித்துக் கூறும் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்துடன் தொடங்கியிருக்கிறார். ஒரு மன்னனின் முதல் சிறப்பியல்பு அவன் அருளுள்ளம் உடையவனாகவும், செங்கோல் செலுத்துபவனாகவும் இருக்க வேண்டியதாகும் என்று வள்ளுவர் உரைக்கிறார். அவன் வறுமையாளர்களுக்குக் கொடுத்தும் வலியீனர்களைக் காத்தும் வர வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் அவன் நேரிய முறையில் அறம் பிறழாமல் நடத்திவரவேண்டும். மன்னன் நிறைகல்வி உடையவனாகவும், அக்கல்வியை மக்களிடையே பரப்புபவனாகவும் இருக்கவேண்டும். நாட்டில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் பண்பாடடைவதற்கு நல்ல வாய்ப்புத் தேவை கல்வி ஒரு சாரர்க்கேயுரிய சிறப்புரிமையாக இருக்கக்கூடாது. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் கல்வி கற்க வசதி செய்துகொடுக்கப் படவேண்டும் கல்வியோடு பண்பாடு மனிதர்க்கு இன்றியமையாத ஒன்று என்றும், பண்பாடில்லாத மனிதன் விலங்குக்குச் சமம் என்றும், ஒருமுறை ஒருவன் பண்பாட்டைக் கைவரப்பெற்றால் அது அவனைவிட்டு என்றும் நீங்காது என்றும் வள்ளுவர் போதிக்கிறார்.

மக்களிடத்தில் கல்வியின்மை எந்தவிதத்திலும் இருக்கலாகாது என்பது வள்ளுவர் விருப்பம். கல்வி என்பது படிப்பிலும் எழுத்திலும் மட்டும் அடங்கிவிடாது. பண்பாளர்களின் சொற்களைக் கேட்பதும்

கல்வியின்பாற்படும். உண்மையான அறிவு என்பது, யார் எதைச் சொன்னாலும் அதைக் கேட்டு ஆராய்ந்து பார்த்துப் பொருந்துவதைக் கொள்வதில்தான் இருக்கிறது.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்பது அவர் வாக்கு. காரணகாரியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒருவனது அறிவு. அவனுக்கு ஓர் அழியாச் செல்வமாகும். அவனை உலகம் என்றும் போற்றும். அறிவற்றவன் தன்னிடத்தில் எவ்வளவு பொருள்கள் உடையவனாக இருந்தாலும், அவன் வறியவனாகவே கருதப்படுவான்.

நாட்டை ஆளும் மன்னன் அறிவாளரின் தொடர்பை என்றும் பெற்றிருக்கவேண்டும். ஏனெனில், அறிவாளர்கள் என்றும் நன்னெறியில் நடப்பவர்களாவர். இத்தகையவர்களின் தொடர்பு மன்னனுக்கு நாட்டைக் காக்கும் அரண்களை விட அதிகப் பாதுகாப்பைத் தரும். தன்னை இடித்துக் கூறும் பெரியாரின் துணை கொண்ட அரசன் பகைவர்களைக் கண்டும் அஞ்சவேண்டியதில்லை அரசன் சிறியவர்களோடும் இழிமனத்தாரோடும் நட்புக்கொண்டிருந்தால், அதனால் வரும் கேடு சொல்லுந்தரத்ததன்று. ஒரு மனிதன் நல்லவனா அல்லாதவனா என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், அவன் நண்பர்களைப் பார்த்து அதைச் சொல்லி விடலாம். நல்ல நண்பர்கள் எப்போதும் நமக்கு வலிமையை அளிப்பார்கள்; அல்லாதவர்கள் நமக்கு எப்போதும் ஆபத்தையே விளைவிப்பார்கள்.

பொருட்பாலில் வள்ளுவர் நாட்டின் பாதுகாப்பையும் நடத்துமானத் திறனையும் பற்றி விரிவாகப் பேசுகிறார். ஒரு நாட்டின் படைவலிமை எப்படி இருக்கவேண்டும், அந்நாட்டை ஆளுகின்ற அமைச்சர்களின் தகுதிகள் என்னென்ன, தானை அதிகாரிகளின் முக்கியத்துவமும் அவர்களின் நேர்மையும், இன்னும் அரசகத்தைக் குறித்த பல பொருள்கள், அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுக் குறளில் ஆராயப்படுகின்றன. இவற்றையெல்லாம் பற்றிச் சொல்லும்போது நாட்டை ஆளுகின்ற மன்னனும் அவனுடைய அதிகாரிகளும் வாய்மையும் ஒழுக்கமும் தவறாமல் தம் கடமையை ஆற்றவேண்டும் என்பதை ஆங்காங்கே வற்புறுத்த வள்ளுவர் தயங்குவதில்லை அரசக அதிகாரிகள் மயக்கத்தை உண்டாக்கும் மதுவை அருந்தக்கூடாது, ஒழுக்கத்தில் ஐயமுள்ள பெண்டிரோடு சேரக்கூடாது என்று கடுமையான விதிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. மதுப் பழக்கமும் மங்கையர் தொடர்பும் தமக்குக் கேடு

சூழ்வதோடு, நாட்டையும் அரசகத்தையும் குலைந்துவிடும் என்று குறள் உரைக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிச் சொல்லும் பகுதிகளில் வள்ளுவர் வேளாண்மைக்குத் தந்திருக்கும் முக்கியத்துவத்தை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். இந்து தரும நூல்கள் சமுதாயப் பொருளாதாரத்தை (Social economy) பற்றிக் கூறும்போது வேளாண்மையைக் கடைசித் தொழிலாக வைத்தே பேசுகின்றன. ஆனால், வள்ளுவரோ, அதனைத் தலைமைத் தொழிலாக்கி, அதுவே மற்றத் தொழில்களைவிடச் சால்புடையது என்று வற்புறுத்துகிறார். சமுதாயத்தில் உள்ள எல்லாத் தொழிலாளர்களைக் காட்டிலும் பயிர்த்தொழிலாளர்களே நாட்டின் உயிர் நாடி என்று குறள் கூறுகிறது. உலகத்தைத் துறந்த முனிவனும், நாட்டைக் காக்கும் பொருநனும் உழவனின் வாசலில்தான் உணவுக்காக நிற்கவேண்டியுள்ளது. சமுதாய நிலைப்பாட்டிற்கே வேளாண்மை தாங்குமானமாக இருக்கிறது. நாட்டின் முன்னேற்றத்திற்கும் செழுமைக்கும் இதுவே காரணமாகும். இத்தகைய தொழிலை ஆதரித்து நாட்டுக்கு நன்மை விளைக்கவேண்டியது அரசகத்தின் நீங்காக் கடமையாகும். உழவை ஓம்பும் ஓர் அரசின் குடிகளாக இருக்க வெளிநாட்டார்கூட விரும்புவர். ஒரு நல்ல அரசு தன் நாட்டுக் குடிகளைப் பாதுகாக்கும் முறையைக் கண்டு, அன்னியர்களும் அந்நாட்டுக்குக் குடிபோவர்.

ஒரு பொதுநல அரசில் வறுமைக்கும் வாட்டத்துக்கும் இடங் கிடையாது. நாட்டில் உள்ள ஒவ்வொரு மனிதனும், தானும் தன் சமுதாயமும் முன்னேறத் தன்னுடைய உழைப்பே காரணம் என்பதை உணர்வானேயானால், அந்நாட்டில் வறுமை என்பதே தலைகாட்டாது. வறுமையும் வாட்டமும் மனிதர்களின் முயற்சி யின்மையாலும் சோம்பேறித்தனத்தினாலுமே ஏற்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் சுறுசுறுப்பாக உழைத்துச் சம்பாதித்து உண்ணுவது என்கிற நிலை இருந்தால், ஒரு மனிதனுக்கும் வாழ்க் கையில் தேவை என்பது இராது. தன் முயற்சியினால் தன் வயிற்றுப்பாட்டைத் தீர்த்துக்கொள்ளாமல் மடிந்திருப்பவனைக் கண்டு சமுதாயம் எள்ளி நகைக்கும்.

''இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.'

எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று நினைந்து வறுமையால், சோம்பியிருப்பவரைக் கண்டால், அவருடைய அறியாமையை எண்ணி நிலமகள் தனக்குள்ளே சிரிப்பாள் என்பது குறள் கூற்று. ஒரு சீரிய சமுதாயத்தில் வறுமை வெட்கப் படத்தக்க ஒரு நிலை

யாகும். இவ்வறுமையை அடியோடு போக்க ஒவ்வொரு மனிதனும் தன் சம்பாதனையில் ஒரு பகுதியைச் சமுதாய நலனுக்காக ஒதுக்கி வைக்கவேண்டும். இத்தகைய முறை சமுதாயத்தில் பொருளாதாரச் சமன்பாட்டுக்கு வழிவகுக்கும் இதன் மூலம் ஓர் இடத்திலேயே பணம் சென்று குவிவதையும், மற்ற இடங்களில் வறுமை புகுந்து வாட்டுவதையும் பேரளவு தடுக்கமுடியும். இம்மாதிரிச் செய்கைகளினால் மலரும் அரசுக்குத்தான் பொதுநல அரசு (Well-fare State) என்று பெயர். பொதுநல அரசில் நவீன உலகில் எழுந்துள்ளவை போன்ற முதலாளித்துவ, பொதுவுடைமைப் போராட்டங்கள் இடம்பெறமாட்டா. பொதுநல அரசைக் குறித்த வள்ளுவரின் கருத்துகள், தொல்லைதரும் தற்காலச் சமுதாய, பொருளாதாரப் பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வுகாணக் கூடியவை என்று தாராளமாகச் சொல்லலாம்.

திருக்குறளார் இரப்பு அல்லது பிச்சை எடுத்தலைப் பற்றிக் கூறும் கருத்தை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். உலகத்தைத் துறந்தோர் இரந்து வாழ்வதைக் குறித்து அவர் கண்டிக்கவில்லை. என்றாலும், ஒருசிலர் பிச்சையையே தம் தொழிலாகக் கொண்டு வாழ்வதை அவர் சிறிதும் ஆதரிக்கவில்லை. நன்கு உழைத்துப் பிழைக்கும் சக்தியுள்ளவர்கள் பிச்சை எடுப்பது சமூகத்துக்கே கேடான ஒன்று என்று அவர் கூறுகிறார். சிலர் இரந்து வாழுமாறே கடவுளால் படைக்கப்பட்டிருக்கின்றனர் என்கிற கருத்தை அவர் ஒப்புவதில்லை அப்படிக் கடவுள் சிலரை அவ்வாறு படைத்திருந்தால், அக்கடவுளே அழிந்துபோவது நல்லது என்று அவர் கூவுகிறார்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

என்கிற குறளில் உள்ள வன்மையைப் பாருங்கள்! வேதவாதிகளோ, சிலர் உலகத்தில் இரந்து வாழ்வது இயற்கை என்றும், அப்படி இரப்பவர்களுக்குப் பிச்சையிடாமை கொடும் பாவம் என்றும் கூறுகிறார்கள். இப்போக்கை வள்ளுவர் ஏற்கமாட்டார். மனிதன் வாழப் பிறந்தவன், பிறர் உதவியில் காலங்கழிப்பவர்கள் உலகுக்குத் தீங்குபுரிபவர்கள் என்பது அவர் கொள்கை. இந்தக் கொள்கை இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையுடையதாயிருப்பினும் நவீனப் போக்கும் ஆழ்ந்த நீர்மையும் உடையதாயிருப்பதை நாம் உணரவேண்டும் ஒரு நாட்டின் நலத்தை நாடுவோர் இக்கொள்கையைச் சீர்மையாகப் புரிந்துகொண்டு போற்றவேண்டும். தற்போது உலகத்தில் இருக்கும் எண்ணற்ற குழப்பங்களை இப்

பொருளாதாரக் கொள்கை போக்கக்கூடுமாகையால், இதை அன்றே உரைத்துச் சென்ற ஒரு தமிழ்க் கவிஞனை நாம் வாழ்த்தாமலிருக்கமுடியாது.

## திருக்குறளின் மூன்றாம் பாகம்

திருக்குறளின் கடைசிப் பகுதியான காமத்துப்பால், காதல் வாழ்க்கையைக் குறித்துப் பேசுகிறது. குடும்பச் சுகத்திற்குக் காதல் அடிப்படையானதாகும். காதல ஓர் இயற்கையான உணர்ச்சி. இவ்வியற்கையுணர்ச்சி குடும்ப வாழ்க்கைககு இன்றியமையாத ஒன்று திருக்குறளில் உள்ள காமத்துப்பால், வாத்சாயனர் வடமொழியில எழுதிய 'காமசூத்திரம்' என்னும நூலைப் பார்த்துச் செய்யப்பட்டது என்று சிலர் புகல்கின்றனர், வள்ளுவர் நூலின் போக்கை உணர்ந்தவர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வாத்சாயனர் எழுதியுள்ள 'காமசூத்திரம்', வெறும் பால்விடயங்கள் (Sex matters) பற்றியே பேசும் ஒரு நூலாகும். இதன் முதற் பகுதியில, பாலுணர்வைத் தூண்டும பலவகையான முறைகள் கூறப்படுகின்றன. பிறகு இந்நூல, உலகத்தில எத்தனை வகையான பால்விளைகள் (Sex acts) உண்டு என்பது பற்றியும், அவைகளை எவ்வெவ்வாறு புரியவேண்டும் என்பது பற்றியும், அவைகளால் உண்டாகும் இன்பங்கள் எப்படிப்பட்டவை என்பது பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் வரணித்துச் செல்கிறது. இந்த நூலை இதற்குரிய விளக்கப்படங்களுடன் இன்று வெளியிட்டால், இது ஓர் ஆபாசமான வெளியீடு என்று அரசினரால் தடை விதிக்கப்படும் அளவுக்குத் தரத்தில் குறைந்த ஒன்று இது. என்றாலும், பாலியலை (Sexuology)க் குறித்து ஆராய்பவர்களுக்குப் பயன்படும் என்கிற நோக்கத்தில் இது ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், இதனைக் கொண்டுவந்து திருக்குறளின் பக்கத்தில் நிற்கவைத்து, இதனைப் பார்த்துத்தான் திருக்குறளின் காமத்துப்பால் எழுதப்பட்டது என்று சொல்வது பேதைமையாகும். இந்தக் காமசூத்திரத்திறகும் திருக்குறள் காமத்துப்பாலுக்கும யாதொரு தொடர்பும் இல்லை. காமசூததிரம் கூறும் பொருள் வேறு; காமததுப்பால் கூறும் பொருள் வேறு. இவ்விரண்டு நூல்களையும் ஊன்றிப் படித்தவர்கள் இதனை நன்றாக உணர்வர்.

திருவள்ளுவர் மனித வாழ்க்கையில் இயற்கையாக நடைபெறும் காதல் நிகழ்ச்சிகளைக் குறித்து நுட்பமாகவும் சால்புடனும் பேசுகிறார். பாலுணர்ச்சிகளையும பாலவினைகளையும் விரிததுக் கூறுவது அவருடைய நோக்கமல்ல. இருவேறு பால்களைச் சார்ந்த

இருவேறு இளைஞர்கள் ஓர் இடத்தில் எதிர்பாராதவிதமாகச் சந்திக்க நேரிடுகிறது. அவர்களில் ஆண், பெண்ணைப் பார்த்து, இவள் என்ன மனிதப் பிறவியா, மயிலினத்தைச் சார்ந்தவளா, அல்லது தெய்வப் பிறவியா! ஒன்றும் தெரியவில்லையே, என்று நினைந்து மயங்குகிறான். பிறகு ஒருவர், இன்னொருவரின் குறிப்பு அறிகிறார்கள்; இருவர் மனமும் ஒன்றுபடுகிறது; கூடுகிறார்கள். பின்னர் இவர்களின் காதல் முதிர்கிறது; ஒருவரையொருவர் நலம் பாராட்டிக்கொள்கின்றனர்; ஒருவர் பிரிவு மற்றவரை வருத்துகிறது; ஊரில் அலர் பரவுகிறது; இதனால் இவர்கள் நாடறிய மணந்து வாழவேண்டியவர்களாகிறார்கள். மணத்துக்குப் பின் பிரிவும், அதனால் ஊடலும், ஊடல் காரணமாகப் புலவியும், இறுதியில் கூடலும் நிகழ்கின்றன. இங்ஙனம் மணவாழ்க்கை இனிக்கும் விதத்தைத் தேர்ந்த நுட்பத்தோடு வள்ளுவர் வரணிக்கிறார்.

காமத்துப்பாலில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்றிற்குக் களவியல் என்றும்; மற்றொன்றிற்குக் கற்பியல் என்றும் பெயர். களவு என்றால் மறைவு என்று பொருள். ஓர் இளைஞனும் இளைஞையும் எதிர்பாராதவிதமாகச் சந்தித்து ஒருவர்மீது ஒருவர் காதல்கொண்டு, இருவரும் தம் பெற்றோருக்குத் தெரியாமல் கூடி, ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்துகொண்டு, இருதரத்தாரும் வாழ்க்கைச் சகடத்தில் ஒன்ற விரும்புவதே களவியல் என்று கூறப்படும். அதாவது, மறைந்து நடத்தும் ஒழுக்கம் களவாகும். மறைவாகக் கூடிவரும் இளைஞர்களைப் பற்றி ஊரில் அலர் பரவுவதும், அவர்களின் பெற்றோர்க்குச் செய்தி அறிவிக்கப்படுவதும், அவர்கள் முதலில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் காதலர்களின் உறுதி பெற்றோரையும் உற்றோரையும் கலங்க வைப்பதும், பிறகு வேறு வழியில்லாமல் அவர்கள் ஒப்பமளிக்க வாலிபர்களின் திருமணம் அனைவர் முன்னிலையிலும் நடந்தேறுவதும் கற்பியலில் விவரிக்கப்படுகிறது. கற்பு என்றால் ஓர் ஒழுங்கைக் கற்பித்துக்கொண்டு உலகில் வாழ்வது என்று பொருள். கற்பியல் வெளிப்படையாக நான்கு பேர் அறிய நடத்தும் ஒழுக்கமாகும். இங்கே திருமணச் சடங்கைப் பற்றி ஒரு வார்த்தை கூறவேண்டும். தமிழகத்தில், தொல்காப்பியர் காலத்துக்கு நீண்ட நாள் முந்திவரை திருமணம் என்று ஒரு நிகழ்ச்சி நடக்கவில்லை. இளைஞர்கள் சந்திப்பதும், மனம் ஒன்றுபட்டால் கூடுவதும், பிறகு அவர்கள் இணைந்து வாழ்வதுமே அன்று பழக்கமாக இருந்துவந்தது. அன்று இவர்களுக்குள் இருந்த ஒரே பிணைப்பு காதல்மட்டுமேயாகும். ஆனால், இந்த முறைமை சரியாக நடைபெறவில்லை. தம்பதிகளிடையே போராட்டமும்

பிணைக்கும் ஏற்பட்ட காலத்தில், காதல் குறையத் தொடங்கியது. ஆண்பிரிவினர் நேர்மையற்ற முறையில் தம் மனைவியரை ஒதுக்க முற்பட்டனர் இதனால் பெண்ணினம் நிரம்ப துயரத்துக்கு உள்ளானது இவற்றையெல்லாம் கவனித்த நாட்டுப் பெரியவர்கள், ஒன்று கூடி, திருமணம் என்று ஒரு சடங்கை உருவாக்கி, ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்துவாழ விரும்பினால் முதலில் திருமணம் புரிந்துகொள்ளவேண்டும் என்றும், அப்படிப் புரிந்து கொண்டவர்கள் பிறகு ஒருவரையொருவர் விட்டுப் பிரிதல் குற்றமாகும் என்றும் விதி செய்தனர். இதனைத்தான்.

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப''

என்று தொல்காப்பியர் எடுத்துக்கூறுகிறார்

காமத்துப்பாலின் இரண்டாம் பிரிவான கற்பியலில், இளங் காதலர்கள் மணம்புரிந்துகொண்டபின் அவர்கள் நடத்தும் இல் வாழ்க்கை விவரிக்கப்படுகிறது. காதலர்களுக்குத் திருமணமான வுடன், அவர்கள் தமக்கென்று ஓர் இல்லம் அமர்த்திக்கொண்டு மனைவாழ்வு நடத்துகின்றனர் இக்காலத்தில் கணவன் மனைவியைவிட்டுப் பிரியவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. கணவன் அரசகத்திலோ அல்லது தானையிலோ ஓர் அலுவலனாக இருப்பான். அப்படியாயின், அவன அரசக விடயமாக வெளிநாடு களுக்குச் சென்று சில காலம் தங்க நேரிடும். கணவன் ஒரு தனிப் பட்ட மனிதனாக இருந்தால், பொருளீட்டும் பொருட்டோ, வாணிப நிமித்தமாகவோ அவன் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டியிருக் கும். அக்காலங்களில் கணவன் மனைவியைவிட்டுப் பிரிந்தே தீர வேண்டும். அண்மையில் மணம்புரிந்துகொண்டவர்கள் ஒருவரை யொருவர் பிரிவது என்றால் எவ்வளவு துன்பத்தைத் தரும் என்பது அந்த நிலையை அனுபவித்தவர்களுக்குத்தான் புலப்படும். எப்படி யும் இருவரும் பிரிகிறார்கள். மனைவி, வீட்டில் தனித்திருப்ப தால் கணவன் நினைவு அடிக்கடி வருகிறது பிரிவு நீடிக்கநீடிக்கத் துன்பமும் மிகுதியாகிறது. இதற்கு ஆடவனும் விலக்கல்ல. தூர தேசத்தில் அலுவல்மேல் சென்ற கணவனும் பிரிவு நினைந்து இரங்குகிறான். தன் வேலை முடிந்து என்று வீடு திரும்புவோம் என்று இருக்கிறது அவனுக்கு. இதுபோன்று இளங்காதலர் மனத்தில் பிரிவினால் ஏற்படும துன்பங்களையும், அவற்றின் பல் வேறு சாயல்களையும் திருவள்ளுவர் மிகத் திறம்படக் கற்பிலில் தீட்டியிருக்கிறார் காதலுணர்ச்சியினால் ஏற்படும் மனமாற்றங் களேயன்றி உடல்மாற்றங்களும் இப்பகுதியில் சுட்டிக்காட்டப்படு

கின்றன. ஆனால், திருக்குறளுக்கு உரை எழுதிய புலவர்கள், இப் பகுதியின் நுட்பங்களை உணராமல், இதனைக் காமசூத்திரத்தின் மறுபகர்ப்பு என்று கருதி, சூழ்நிலைகளை மாற்றிச் சிதைத்து வெளிறிய விளக்கங்கள் வரைந்துவிட்டனர்.

திருக்குறளை முதன்முதல் தமிழ் உரையாளர்களின் துணை கொண்டு படித்த ஐரோப்பியப் புலவர்கள், காமத்துப் பாலைக் குறித்துத் தவறான எண்ணங்கொண்டனர். கலோனல் எல்லிஸ் என்கிற ஒருவர்தாம் இந்த வகையில் தவறு புரியாமல் சரியானவாறு திருக்குறளை உணர்ந்தவராவர். அவர்தாம், இல்லற வாழ்க்கை யைக் காமத்துப்பால் தூய நிலையில் வருணிக்கிறது என்று வெளிப் படையாகக் கூறியவர். எல்லிஸுக்குப் பிறகு ஜெர்மானிய சமயத் தொண்டரான கிரவுல் என்பவர், காமத்துப்பாலைத் திடாரிக்க மாக ஜெர்மன் மொழியில் எழுதினார். கடைசியில் போப்பு என்னும் ஆங்கில அறிஞர், திருக்குறள் முழுவதையும் செய் யுளிலேயே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவைகளையெல் லாம் படித்துப்பார்ப்பவர்கள், அன்புவழிப்பட்ட இல்வாழ்க்கையை வள்ளுவர் எவ்வளவு சால்புடனும் செம்மையாகவும் காமத்துப் பாலில் சொல்லியிருக்கிறார் என்பதை உணராமற்போக மாட் டார்கள்.

நாம் இதுவரை ஆராய்ந்ததைத் தொகுத்துக் கூற வேண்டு மானால், வாசகர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதுவே, திருக்குறள், கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டில் நிலவி யிருந்த தமிழர் பண்பாட்டின் சாரத்தைப் பிழிந்து கொடுக்கிறது என்கிற உண்மையாகும். வருண ஒழுக்கத்தையும் கொலைநெறி யையும் மையமாகக் கொண்ட ஓர் அன்னியப் பண்பாடு தமிழகத்தில் கால்கொள்ள இருந்த சமயத்தில், திருக்குறள், தமிழ்ப் பண்பாடு இன்னது என்று உணர்த்தி அதனைக் காக்க முயன்றது ஒரு சால்பு வாய்ந்த செயல் என்பதை நாம் மறக்கமுடியாது. தமிழர் பண்பாடு இரண்டு தத்துவங்களில் அடங்கியிருக்கிறது. ஒன்று கொல்லாமை அறம்; இன்னொன்று சாதியற்ற சமூகம். திருக்குறள், இந்த இரண்டு தத்துவங்களையும் அழுத்தி அழுத்திக் கூறுகிறது.

திருவள்ளுவர் காலத்திற்குப் பின்னர் சில நூற்றாண்டுகள் வரை தமிழர் தத்துவங்களுக்குக் குந்தகம் ஏதும் விளையவில்லை. ஆனால், தேவார காலத்தில் ஞானசம்பந்தர் என்ற இந்து சமயத் தலைவர், காபாலிகம் என்ற இகன்மை வாய்ந்த மதத்தை (Militant religion)ப் புகுத்திக் கொலைமறுப்புப் பண்பாட்டைச் சிதைக்க முற்பட்டார். இக் காபாலிகத்தின் கொடுமை மிகுந்த

தாக்குதலைக் கொலைமறுப்புவாதிகளால் தாங்கமுடியவில்லை. ஞானசம்பந்தர், பாண்டிய அரசனின் குடும்பத்தார் சிலரைத் தன் வசப்படுத்தி, அரசனையே சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாறும்படி செய்துவிட்டார். பிறகு அவருக்குத் தன்னுடைய மதத்தைப் பரப்ப நல்ல வசதி கிடைத்தது. கொல்லாமைச் சமயத்தைச் சேர்ந்த துறவிகள் பலரை அரசனின் உதவிகொண்டு அவர் கழுவேற்றினார். சமண சமயத்தைச் சார்ந்த பலர் ஒடுக்கப்பட்டனர். உருத்திர வணக்கத்தைக் கொண்ட காபாலிக மதம் தமிழர்களின்மீது திணிக்கப்பட்டது. தமிழர்களின் பழஞ் சமயம் தடந்தெரியாமல் அழிக்கப்பட்டுச் சாதிமுறையைக் கொண்ட ஒரு சமுதாயம் உருவாக்கப்பட்டது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட இம் மாறுதல் இன்றுவரை தமிழர் சமுதாயத்தில் நின்று நிலவிவருகிறது. இம்மாறுதலினால் தமிழர்கள் சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் எவ்வளவு மேன்மையடைந்திருக்கிறார்கள் என்பதை வாசகர்களே உய்த்துணர்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

## குறளாசிரியரும் அவர் காலமும்

கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டின் தமிழகத்தில் மூன்று சமயங்கள் முனைப்பாக இருந்துவந்தன. அவையே ஜைனம், பௌத்தம், வேதவாதம் என்பனவாகும். தமிழர்கள் பொதுவாக ஜைனசமயத்தையே மேற்கொண்டிருந்தனர். காரணம், அவர்கள் பண்பாடு கொலைமறுப்போடு தொடர்புற்றிருந்ததேயாகும், திருக்குறளில் கிடைக்கும் அகச்சான்றுகளை நோக்கும்போது, குறளாசிரியர் தம் காலத்தில் தமிழர்கள் கைக்கொண்டிருந்த பண்பாட்டையே தம் நூல் முழுவதும் வடித்துச் சொல்லியிருக்கிறார் என்று தெரிகிறது. அவர் போதிக்கும் உண்மைகள் வேதவாதத்தையோ, பௌத்த மதத்தையோ சார்ந்தவையாகச் சிறிதும் காணப்படவில்லை. மாறாக, அவர் அந்த மதங்களை வன்மையாகக் கண்டித்திருப்பதாகவே நிரம்ப இடங்களில் தோன்றுகின்றன. இவைகள் நமக்கு அறிவுறுத்துவது, குறளாசிரியர் ஒரு ஜைனர் என்பதைத் தவிர வேறென்ன இருக்கமுடியும்? நூலில் கிடைக்கும் அகச்சான்றுகளேயல்லாமல் இதனை உறுதிப்படுத்த வேறு சூழ்நிலைச் சான்றுகளும் உள்ளன. அவைகளை இனிக் காண்போம்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான 'சீவகசிந்தாமணி' என்கிற காவியத்துக்கு நச்சினார்க்கினியர் என்கிற புலவர் ஓர் அரிய உரை எழுதியிருக்கிறார். நச்சினார்க்கினியர், தமிழில் உள்ள மிகச் சிறந்த பழைய உரையாசிரியர்களில் ஒருவராவர்.

இவர் சீவகசிந்தாமணிக்கு உரை எழுதும்போது, பல இடங்களில் திருக்குறட் பாக்களை மேற்கோள் காட்டிச் செல்கிறார். அப்படிக் காட்டும் இடங்களிலெல்லாம், 'தேவர் இங்ஙனம் கூறுகிறார்— தேவர் இங்ஙனம் கூறுகிறார்—என்கிற வார்த்தைகளோடு இவர் திருவள்ளுவரை நமக்கு அறிமுகப் படுத்துகிறார். தமிழ் அறிஞர்களுக்குத் 'தேவர்' என்கிற சொல் ஜைன முனிவர்களைத்தான் குறிக்கும் என்பது நன்றாகத் தெரியும். சீவகசிந்தாமணி ஆசிரியருக்குத் திருத்தக்கதேவர் என்று பெயர்; சூளாமணி ஆசிரியருக்குத் தோலாமொழித்தேவர் என்று பெயர்; திருக்கலம்பக ஆசிரியருக்கு உதீசித்தேவர் என்று பெயர். இவர்கள் யாவரும் ஜைன முனிவர்கள் என்பதை யாரும் மறுப்பதில்லை. இதிலிருந்து, ஜைன முனிவர்கள் பெயரின் இறுதியில்தான் இந்தத் தேவர் என்கிற பதம் பொருத்தப்படும் என்பதை நாம் அறியலாம். இது ஜைன மதத்தில் நெடுங்காலமாக வரும் ஒரு வழக்கமாகும். இதனை நன்கு உணர்ந்தே நச்சினார்க்கினியர், திருவள்ளுவரைத் தேவர் என்று அழைத்திருக்கிறார். அதாவது, புலவர் நச்சினார்க்கினியர் திருவள்ளுவரை ஒரு ஜைன முனிவர் என்று திட்டமாகக் கருதினார் என்பதைத்தானே இது காட்டுகிறது? இன்னொரு சான்றையும் பார்க்கலாம். ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று 'நீலகேசி' என்னும் ஜைன நூல். இதற்கு வாமன முனி என்பவர் 'சமய திவாகரம்' என்று ஓர் உரை இயற்றியிருக்கிறார். இவர் தம் உரையில் திருக்குறளைப் பல இடங்களில் உதாரணமாகக் காட்டுகிறார். அச்சமயங்களிலெல்லாம் இவர் 'நம் வேதம் இவ்வாறு கூறுகிறது— நம் வேதம் இவ்வாறு கூறுகிறது'—என்று சொல்லிச்செல்கிறார். வாமன முனி ஒரு ஜைனர் என்பதில் ஐயமில்லை. அவர் குறளைத் நம் வேதம் என்று குறிக்கிறார் என்றால், குறள் ஒரு ஜைன நூலாகத்தானே இருக்கமுடியும்? இவற்றோடு தமிழர்கள் குறளை இன்றும் தம் வேதமாகக் கருதுவது நம் கொள்கையை அரண் செய்கிறது அல்லவா ?

மேலும் சில சான்றுகளைக் கவனிக்கலாம். தமிழில் 'பிரபோத சந்திரோதயம்' என்று ஒரு நாடக நூல் இருக்கிறது. இது சமஸ்கிருதத்தில் இதே பெயருடைய தத்துவ நாடகம் ஒன்றின் மாதிரியில் செய்யப்பட்டதாகும். இது நான்கு அடிகள் கொண்ட விருத்தப் பாவால் இயன்றது. இந் நாடகத்தில் பல்வேறு சமயத்தின் பிரதிநிதிகள் ஓர் அரங்கில் தோன்றித் தங்கள் தங்கள் சமயத்தின் பெருமையைப் பரக்கப் பேசுகின்றனர்; இதனை எதிர்த்தரப்பில் உள்ளவர்கள் தருக்கம் மூலம் மறுதலிக்கின்றனர். இந் நாடகத்தை இயற்றியவர் ஜைன மதத்தைச் சார்ந்தவர் அல்ல. அவர் இதனை இயற்றியதன் நோக்கம்; தம்முடைய நம்பிக்கையே மற்றச் சமயங்

களைக் காட்டிலும் மேன்மையானது என்பதைக் காட்டவாகும். இவர் தம் நாடகத்தில் பல சமயவாதிகளைத் தருக்கிக்க விடும் போது, ஜைனத்திற்குச் சார்பாக ஒருவனை அனுப்புகிறார். அந்த ஆள் அரங்கில் ஏறியதும்,

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று''

என்கிற குறளை விளம்பிக்கொண்டே வருகிறான். மேலும் இரண்டு அடிகள் நாடகாசிரியர் வாக்கோடு அவன் முடிப்பதாக அதில் காணப்படுகிறது. இதிலிருந்தும் 'பிரபோத சந்திரோதயத்தை' எழுதியவர் திருக்குறளை ஒரு ஜைன நூலாகவே மதித்திருக்கிறார் என்பது தெரியவருகிறது. இச் சூழ்நிலைச் சான்றுகள் யாவும் ஜைனர்களின் மரபுவழிப்பட்ட கொள்கை ஒன்றை வற்புறுத்துவ தாகக் காணப்படுகின்றன. கி மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏலாச்சாரியர் அல்லது குந்தகுந்தர் என்னும் சமண முனிவரே திருக்குறளை இயற்றியிருக்கிறார் என்பது ஜைனர்களின் நீண்ட நாளைய நம்பிக்கை, அவர்களின் வழக்காற்றுப்படி, திருவள்ளுவர் என்பவர் ஏலாச்சாரியரின் ஒரு சாதாரண மாணவரேயாவர். ஆனால், ஏலாச்சாரியரின் இலக்கியத்தை மதுரைச் தமிழ்ச் சங்கத்தின் முன் வைத்து, அதன் ஏற்பைப் பெற்றுத்தந்தவர் திருவள்ளுவரே என்று சொல்லப்படுகிறது. இந்த ஏலாச்சாரியர் என்பவர், வடார்க்காடு மாவட்டத்தில் வந்தவாசி என்னும் ஊருக்கு அருகில் உள்ள ஒரு குன்றின் உச்சியில், தம் கடைசிக் காலத்தைத் தவம்புரிந்து கழித்த ஒரு துறவி என்று தெரிகிறது. இந்தக் குன்றில ஏலாச்சாரியரின் பாதப்பதிவுகள் (Foot-prints) இன்றும் காணப்படு கின்றன. இந்தத் தாவிற்குச் ஜைன யாத்திரிகர்கள் தற்போதுகூட வந்து வணங்கிச் செல்கிறார்கள்.

மேலே சொன்ன பொருள்களைச் சிந்தித்துப்பார்க்கும் போது. திருக்குறள், கிறிஸ்து பிறப்பதற்கு முன்மையான நூற்றாண்டின் கடைசிப் பகுதியில்தான் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று குழப்பமின்றித் தோன்றுகிறது. சில தமிழ் அறிஞர்கள் இதன் காலத்தை இன்னும் சில நூற்றாண்டுகள் பிற்படுத்திக் காட்ட முயல்கின்றனர். ஆனால், இக் காழ்ப்புக் கொள்கைக்குச் சரித்திரச் சார்பு ஏதுமில்லை. தமிழ் அறிஞர்களில் சிறந்தவரான திரு. தி. பொ. பழனியப்ப பிள்ளை என்பவர், காளிங்கர் பரிப்பெருமாள் என்ற இரண்டு புலவர்கள் திருக்குறள் பொருட்பாலுக்கு எழுதிய உரையை அண்மையில் பதிப்பித்து வெளியிட்டார். இந் நூலுக்கு அவர் வரைந்துள்ள முன்னுரையில், தமிழில் கி.பி. முதல் நூற்

றாண்டிலிருந்து எழுந்த இலக்கியங்கள் யாவும் திருக்குறள் தொடர்களை ஆங்காங்கே எடுத்தாண்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். எப்படி இருப்பினும், திருக்குறள், கி.மு. முதல் நூற்றாண்டுக்குப் பிந்திய நூல் அன்று என்பதைத் திரு பழனியப்ப பிள்ளை அவர்கள் தம்முடைய ஆராய்ச்சியுரையின் முடிவில் திண்மையாக நிறுவியுள்ளார். இம்முடிவைக் கி பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி—என்னும் காவியங்களும் உறுதிப்படுத்துகின்றன என்பதை அவைகளைப் படித்தவர்கள் அறிவர். மேற்படிக் காவியங்களில் காணப்படும் குறளடிகள் இவ்வுண்மைக்கு எப்போதும் சான்றாக நிற்கும். இவைகள் யாவற்றையும் சுருக்கிக் கூறவேண்டுமானால், திருக்குறள் என்பது ஒரு சிறந்த ஜைன முனிவரால் கி.மு. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட ஓர் அருமையான நூல் என்று தாராளமாகப் புகன்று விடலாம்.

இறுதியாக ஒரு விடயத்தைக் கவனிக்கவேண்டும். அதுதான் திருவள்ளுவரின் கடவுள் யார் என்பது. திருவள்ளுவரின் கடவுள் அருளறம் (Universal benevolence) என்பது தவிர வேறல்ல. இந்த அருளறக் கடவுள், உருத்திரன் அல்லது, இந்திரனைப் போல் சினங்கக்கும் வடிவமுடையது அல்ல. இக்கடவுள், தனக்கு வேண்டாதவர்களைத் தீயும் கந்தகக் கல்லும் சொரிந்து கொல்லாது; கண்ணினின்று கனலைக் கொழித்து மக்களை அழிப்பதும் இதன் நீர்மையன்று; இதன் கைகளில் கொலைக்கருவிகள் எதனையும் நாம் காணமுடியாது. அருளறக் கடவுளின் இயற்கை, அனைத்துயிர் காதல் (Universal love) ஒன்றே தவிர மற்றில்லை. இக்கடவுளுக்கு நண்பர்களும் கிடையார்; பகைவர்களும் கிடையார். வேண்டியவர்களும் வேண்டாதவர்களும இதற்கு ஒன்றுதான்; இதனிடத்தில் உள்ள ஒரே ஆயுதம் அன்பாகும். அன்புக்குக் கட்டுப்படாதவர் இவ்வுலகில் யார் இருக்கமுடியும்? அன்புக்கு முன்னே கொடிய புலியும் பொறுமையான ஆட்டுக்குட்டியாக மாறி விடும் என்று சொல்கிறார்கள் அல்லவா?

திருவள்ளுவரின் சமுதாயக் கொள்கை மார்க்ஸின் பொருளாதாரக் கொள்கையை அடியொற்றியது என்று சிலர் உரைக்கிறார்கள். குறளை மேல்வாரியாகப் பார்க்கும் போது இப்படித் தோன்றுவது இயற்கை. ஆனால், உண்மையில் மார்க்ஸ் தத்துவத்திற்கும் திருவள்ளுவர் தத்துவத்திற்கும் வேறுபாடு உண்டு. மார்க்ஸ் தத்துவம் சமயமறுப்பும் சடப்பொருள்வாதமும் கொண்டது; ஆனால், வள்ளுவர் தத்துவமோ சமயஏற்பும் பொதுநலவாதமும் கொண்டது. வள்ளுவர் சமயம் உறுஎண் மறுப்புடனும் அனைத்

துயிர் காதலுடனும் தொடர்புடையது. இந்த இருபண்புகளுடன் கூடிய பொருளாதாரச் சமத்துவமே ஒரு பொதுநல அரசைச் சீர்மையுடன் இயங்கச்செய்ய வல்லது. இக் கருத்து உலகெங்கும் பரவி மனிதகுலத்தை உய்விக்கவேண்டும் என்பதே திருக்குறள் வழங்கும் செய்தியாகும்.

ஊ. கொற்றன்காரியின்

## அடுத்து வரும் நூல்கள்

1. நாகரிகத்தின் கதை
2. தமிழில் புதினம்
3. தமிழில் இலக்கியத் திறனாய்வு
4. 2400 வருடகாலப் பௌத்தம்
5. கொல்லாமைச் சமயம்
6. ஜீன் கிறிஸ்தோபி
7. குற்றமும் தண்டனையும்
8. ஓமரின் இலியாது
9. ஓமரின் ஒதூஸியம்
10. சமய சாரம்
11. வினாவும் விடையும்
12. விஞ்ஞான விந்தைகள்

# நாகரிகத்தின் கதை

சி. இ. எம். யோடு (C. E. M. Joad) என்பவர் 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சில ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த ஒரு சிறந்த பிரிட்டிஷ் தத்துவஞானியாவர், இவருடைய தத்துவஞானம் எப்போதும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கும். மனிதனின் நாகரிகம் தோன்றிய விதத்தையும், அது படிப்படியாக வளர்ந்த விதத்தையும், அதன் இன்றைய நிலைமையையும், அதற்குரிய சரியான பொருளையும், அதன் எதிர்காலத்தையும் குறித்து யாவரும் வியக்கும் வண்ணம் கதைபோன்ற வசனத்தில் இவர் ஒரு நூலை இயற்றியுள்ளார். அதுவே 'நாகரிகத்தின் கதையாகும்.' இது குழந்தைகளுக்காக எழுதப்பட்டிருந்தாலும், மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூலாகும். இதனை அழகுத் தமிழில் சுவையாக வடித்துத் தருகிறார் திரு ஊ. கொற்றலங்காரியார்.

எஸ். தன்யகுமார் பிரஸ், தி. நகர், சென்னை-17.

## ஜைன இளைஞர் மன்ற வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அவிநயம் | ரூ. | 9-00 |
| 2. | அமுதசாகரம் | ரூ. | 4-00 |
| 3. | இந்திரகாளியம் | ரூ. | 2-00 |
| 4. | அருங்கலச்செப்பு | ரூ. | 9-00 |
| 5. | அறநெறிக் கதைகள் | ரூ. | 1-50 |
| 6. | அருகன் அந்தாதி | ரூ. | 1-00 |
| 7. | திருக்குறளில் அறிவுத் துறைக்ள் | ரூ. | 22-00 |
| 8. | திருக்குறள் மூலமும் கட்டுரைகளும் | ரூ. | 7-00 |
| 9. | சிவகோட்டாச்சாரியரின் நல்லறக் கதைகள் | ரூ. | 12-00 |
| 10. | இளங்கோவடிகள் சமயம் | ரூ. | 6-00 |
| 11. | கல்வெட்டில் சமணம் | ரூ. | 7-00 |
| 12. | ஜைனம் ஓர் அறிமுகம் | ரூ. | 3-00 |
| 13. | Glimpses of Jaina Philosophy | ரூ. | 12-00 |
| 14. | ஜைன வழிபாடு | ரூ. | 8-00 |
| 15. | திருநறுங்கொண்டை வரலாறு | ரூ. | 15-00 |
| 16 | ஸுப்பிரபாதம் பக்தாமரம் | ரூ. | 5-00 |

எஸ். தன்யகுமார் பிரஸ், 3. போக் ரோடு, தி. நகர், சென்னை-17.